வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 34, குரோதி வருடம், மாசி மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(23.02.2025) ஹிஜ்ரி-1446, ஷஃபான் - 24, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8
விலை ரூ.130




## ஓட்டோ விலை ரூ.20 இலட்சம்

02 ஆம் பக்கம்



### நக்கல் நமசிவாயம்




# மே முதல் வாரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்!

## ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பம்




02 ஆம் பக்கம்

## எல்லை தாண்டும் இந்திய இழுவைப் படகு விவகாரம்

### தடுத்து நிறுத்துமாறு கோரி 27ஆம் திகதி யாழில் போராட்டம்





**பு.கஜிந்தன்**

இந்திய மீனவர்களின் சட்டவிரோத அடாவடி இழுவைப் படகு தொழில் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். நகரில் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தீவக கடற்றொழில் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த குறித்த அமைப்பினர் மேலும் கூறுகையில்,

02 ஆம் பக்கம்

## கடவுச்சீட்டு இனி 24 மணிநேரத்தில்




குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் 24 மணி நேர சேவையானது ஒரு நாளில் கடவுச் சீட்டைப்பெறும் சேவைக்காக மாத்திரம் இயங்கும் என மேற்படி திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு நாளில் கடவுச் சீட்டைப்பெறும் சேவைக்காக வாரத்தில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை பதிவு செய்யலாம் என குடிவரவு குடியகல்வு திணைக்கள பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் பி.எம்.டி. நிலுஷா பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

## எப்படி இருந்த கோட்டா?



*ஜப்பானின் முடிக்குரிய அரசரின் 65ஆவது பிறந்த தினத்தை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடியது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமர்ந்திருந்த மேசையில் இதர பிரமுகர்கள் எவரும் நீண்ட நேரம் அமராததால் தனது ஆசனத்தில் தனியாக அமர்ந்திருக்கவேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.*


வியாபாரம் முன்னேற
இங்கு கரையேறுங்கள்



வருடாந்த வட்டி 7% இலிருந்து
People's Bank Business Loans

தேவைகளின் அடிப்படையில் ஆகக் கூடிய கடன் தொகை மற்றும் மீளச்செலுத்தும் காலம்

விவசாயம், தயாரிப்பு, சேவை மற்றும் வணிக வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் நிலையான வியாபாரங்களுக்கான ஏராளமான கடன் திட்டங்கள்

மேலும் விபரங்களுக்கு
அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

PEOPLE'S BANK
Pride of the Nation

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
ரூ. 160,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
- அதிகபட்ச இரகசியத்தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக் கடன்
செலான் வங்கி





02 ஆம் பக்கம்





www.sltmobitel.lk

ரூ. 12 மில்லியன் பணப்பரிசுகளை வெல்லுங்கள்
பில் செலுத்தும், ரீசார்ஜ் செய்யும், ரீலோட் பெக்கேஜ் Activate செய்யும் சகலருக்கும் பொருந்தும்.

ஒவ்வொரு மாதமும் ரூ.1,000,000
3மாதங்களிற்கு ஒரு முறை ரூ. 3,000,000

வெற்றி வாய்ப்புக்களை அறிந்துக்கொள்ள #151# அழையுங்கள்

பரிசுத்தொகையினை பெற்றுக்கொள்ள எந்தவொரு கொடுப்பனவோ அல்லது பண வைப்போ மேற்கொள்ளத் தேவை இல்லை.

வெற்றியாளருக்கான அறிவிப்பு 0712 755 777 என்ற இலக்கத்தின் ஊடாக அழைப்பு மேற்கொள்ளப்பட்டு உங்கள் உரிமைத்துவத்துக்கான அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படும்.

SLT-MOBITEL Mobile வாடிக்கையாளர்களுக்கு மட்டும்.

2025 ஜனவரி 01 முதல் ஜூன் 30 வரை செல்லுபடியாகும்.

M/LGL/TRCSL/2024/130 WP/GT/6333 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

# தெமட்டகொடை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முப்பெரும் விழா

கொழும்பு, தெமட்டகொடை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முப்பெரும் விழா நாளை (24) காலை முதல் மாலை வரை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஏ.எல்.எஸ்.நஸீரா ஹஸனார் தலைமையில் நடைபெறவுள்ள முதலாவது அமர்வின்போது சயீதா பௌண்டேஷனால் 12 கோடி ரூபா செலவில் ஸ்ரீ தம்ம மாவத்தை, 239ஆவது இலக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவுக்கான கட்டடத் திறப்பு விழா அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

இரண்டாவது அமர்வு ஆனந்தாக் கல்லூரி குலரத்ன கேட்போர் கூடத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும்.

இதன்போது பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் திறமைச் சித்தியடைந்த மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விருது வழங்கல் மற்றும் கல்லூரி அதிபர் ஏ.எல்.எஸ்.நஸீரா ஹஸனாருக்கான பிரியாவிடை நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக சயீதா பௌண்டேஷன் உறுப்பினர் கலாநிதி பாத்திமா சலீம், கௌரவ அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌஸி, மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நௌஸர் பௌஸி மற்றும் விசேட அதிதியாக கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பீ.ஆர். தேவபந்து ஆகியோர் கலந்துகொள்வர்.







அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்சங்கத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன்போது மறைந்த சிரேஷ்ட ஊடகர் இராஜநாயகம் பாரதிக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# கொழும்பில் பரிசளிப்பும் சஞ்சிகை வெளியீடும்







தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொழும்பு பொது நூலகத்தின் வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் 'வெள்ளவத்தை சரஸ்வதி நாதம் இதழ்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை நூலகர் திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பொது நூலக பிரதம நூலகர் திருமதி வருணி கங்கபட ஆரச்சியும் சிறப்பு அதிதிகளாக பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸ், ஓய்வுபெற்ற அதிபர் திருமதி அனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் கௌரவ அதிதியாக வெள்ளவத்தை பீட்டர்சன் கிளை பொறுப்பாளர் யுசாந்த கம்மன்பிலவும் கலந்து கொண்டனர். இதன்போது வெளியிடப்பட்ட வெள்ளவத்தை சரஸ்வதி நாதம் இதழின் முதற்பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொண்டார்.







தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த ஆன்மீக சொற்பொழிவாளர் திருமதி வாசுகி மனோகரன் கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா ஆலயத்தில் சீரடி சாயி பாபாவின் மகிமை பற்றி கடந்த வியாழக்கிழமை உரையாற்றினார். இதன்போது சாயி பாபா (இலங்கை) நம்பிக்கையகத்தின் சார்பில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையிலான குழுவினரால் சொற்பொழிவாளர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் சிவா இராஜஜோதி, அறங்காவலர்களான கோபால் ஜீவரட்னம் மற்றும் திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

## மே முதல் வாரத்தில்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாத முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கோரும் திகதியை அறிவிக்க தேர்தல் ஆணைக்குழு இப்போது ஏற்பாடுகளைச் செய்துவருவதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடன் திருத்தங்களின்றி பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (17) நிறைவேற்றப் பட்டது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் அன்று பி.ப 2.00 மணி முதல் பி.ப 7.00 மணிவரை இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 187 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக எந்த வாக்குகளும் அளிக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து குழுநிலையில் சட்டமூலம் கருத்திற்கொள்ளப்பட்டதுடன், அதன் பின்னர் சட்டமூலத்துக்கான மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 158 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக எந்த வாக்குகளும் அளிக்கப்படவில்லை.

அதற்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மற்றும் மூன்றாம் மதிப்பீடு விசேட பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்தே தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## எல்லை தாண்டும்...

இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைமடி தொழில் நடவடிக்கையானது யாழ். வடக்கில் குறிப்பாக, எமது தீவக பிரதேசத்தைக் கடுமையாகப் பாதித்து வருகின்றது.

இதை நிறுத்துமாறு நாம் பல போராட்டங்களை நடத்தி கோரிக்கைகளை முன்வைத்தாலும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில், எமது வாழ்வுரிமைக்கான பொருளாதார ஈட்டலை உறுதிசெய்ய நாம் வீதியில் இறங்கிப் போராடத் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தீவக கடற்றொழில் அமைப்புகளான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் எமது இந்தப் போராட்டம் யாழ் பண்ணையிலுள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் செல்லவுள்ளது. அத்துடன், ஜனாதிபதிக்கு மகஜரொன்றும் வழங்கவுள்ளோம்.

## ஓட்டோ விலை...

இலங்கையில் விதிக்கப்பட்டிருந்த வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், முச்சக்கர வண்டி இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையின் பிரதான முச்சக்கர வண்டி விற்பனை நிறுவனமொன்று முச்சக்கர வண்டிகளுக்கான முன்கூட்டிய ஓடர்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

அந்த நிறுவனம் அறிந்தவண்ணம், புதிய பஜாஜ் முச்சக்கர வண்டியின் விலை, பொருட்கள் மற்றும் சேவைகள் தவிர்த்து ரூ.16,90,678 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், பெறுமதி வரி சேர்க்கப்பட்டு, ஒரு புதிய முச்சக்கர வண்டியின் விலை ரூ.19,95,225 எனத் தெரிவிக்கப்படுகிறது.




தொகுப்பு - நா.தினுஷா



# நாட்டை உலுக்கிய சஞ்சீவ கொலைச் சம்பவம்!

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவ என்றழைக்கப்படும் மாகிலங்கமுவே சஞ்சீவ கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி மற்றும் பெண் ஆகிய இருவரும் சஞ்சீவவை கொலை செய்வதற்காக கடுவலை, வெலிவிட்ட பிரதேசத்தில் அறைகளை வாடகைக்கு வழங்கும் ஹோட்டலிலிருந்து வருகை தந்துள்ளமை விசாரணைகளில் உறுதியாகியுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அவர்கள் இருவரையும் புதுக்கடை நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கு அழைத்துவந்ததாகத் தெரிவிக்கப்படும் கம்பஹா, மாகெவிட பிரதேசத்தைச் சேர்ந்த சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மல்வத்து, ஹிரிபிட்டிய பிரதேசத்தில் வாடகையின் அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த அதிசொகுசு காரொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், டுபாயில் தலைமறைவாகியிருக்கும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த மூவரால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் உறுதியாகி யுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரொருவரின் ஆலோசனைக்கமைய பிரதான சந்தேகநபர் கடந்த 18ஆம் திகதி மல்வத்து, ஹிரிபிட்டிய பிரதேசத்தில் வாகனத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு 19ஆம் திகதி கடுவெல, வெலிவிட்ட பிரதேசத்தில் வாடகைக்கு அறையை பெற்றுக்கொடுக்கும் ஹோட்டலை நோக்கிச் சென்றுள்ளார்.

அதன்போதே சந்தேக நபர்கள் சென்ற குறித்த காரின் முன்பக்க கண்ணாடியில் சட்டத்தரணிகள் சங்கத்தின் இலச்சினை பொருத்தப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து இருவரும் சாரதியுடன் புதுக்கடை நீதிமன்றத்துக்கு வந்து சஞ்சீவ மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதன் பின்னர் பதற்றத்தில் வந்த பெண் காரை கண்டுபிடிக்க முடியாமல் போனதைத் தொடர்ந்து கார் சாரதி அழைத்தும் பெண்ணொருவர் முச்சக்கரவண்டியில் ஏறி அங்கிருந்து வெளியேறியதாக சாரதியின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிதுநேரத்தில் வெளிநாட்டிலுள்ள அவிஸ்க என்பவரிடமிருந்து சாரதிக்குத் தொலைபேசி அழைப்பு வந்துள்ளதுடன், அவரை அந்த இடத்திலிருந்து வெளியேறுமாறும் காரை மல்வத்து, ஹிரிபிட்டிய கார் வாடகைக்கு விடும் இடத்தில் ஒப்படைக்குமாறும் நிதி கொடுக்கல் வாங்கலை தான் செய்வதாகவும் தெரிவித்துள்ளமை சாரதியின் வாக்குமூலத்தில் உறுதியாகியுள்ளது.

இந்தக் கொலைத் திட்டத்துக்காக ஒன்றரை கோடி ரூபா (150 இலட்சம்) வழங்குவதாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திய மஹரகம, தம்ஹேன வீதியைச் சேர்ந்த முன்னாள் கொமாண்டரான சமுந்து தில்ஷான் பியுமங்க கதனாராச்சிக்கு 2 இலட்சம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கேஹேல் பத்தர பத்மே என்றழைக்கப்படும் மின்தினு பத்மசிறி பெரேரா, கொமாண்டோ சலிந்த என்றழைக்கப்படும் அமித் கம்லத்கே திலின சம்பத் மற்றும் அவிஸ்க மல்லி ஆகியோரே இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

மஹரகம பிரதேசத்தில் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள திருமண விழாவில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவித்தே துப்பாக்கிதாரியான சமுந்து தில்ஷான் கதனாரச்சி மற்றும் வழக்கு ஒழுங்குவிதிகள் கோவை புத்தகத்தில் ரிவோல்வரை மறைத்து நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு எடுத்துவந்த நீர்கொழும்பைச் சேர்ந்த பின்புர தேவகே இஷாரா செவ்வந்தி இருவரும் கடுவலை, வெலிவிட்ட பிரதேசத்தில் கடந்த 18ஆம் திகதி அறையை பெற்றுக்கொண்டுள்ளனர்.

சஞ்சீவ கொலை செய்யப்பட்ட தினத்தன்று (19) காலை இருவரும் நன்கு ஆடை அணிந்து சொகுசு வாகனத்தில் அங்கிருந்து வெளியேறியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்தியதன் பின்னர் துப்பாக்கிதாரிக்கு உதவுவதற்காக ரிவோல்வரை நீதிமன்றத்துக்கு எடுத்துச்சென்ற பெண், குறித்த சொகுசு வாகனத்தில் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரின் வழிகாட்டலுக்கமைய சட்டத்தரணியாக வேடம் தரிக்க பயன்படுத்திய உடைகள், காலணி என்பன கொச்சிக்கடை பிரதேசத்தில் வீசப்பட்டிருந்த நிலையில், விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரியொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய தலைமறைவாகியுள்ள பெண் 3.8 மில்லிமீற்றர் வகை துப்பாக்கி மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் சிறையில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் ஒவ்வொரு மாத இறுதியிலும் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகவேண்டிய ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட 35 வயதுடைய பொலிஸ் அதிகாரி நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் நீதிமன்ற கடமைகளில் ஈடுபடும் கான்ஸ்டபிளாவார்.

சஞ்சீவ கொலை விவகாரத்தில் தேடப்பட்டுவரும் குறித்த பெண்ணுடன் சந்தேகநபரான கான்ஸ்டபிள் தொலைபேசி உரையாடலிலும் ஈடுபட்டுள்ளார். இதேவேளை, கடந்த ஜனவரி 07ஆம் திகதி கல்கிஸை வட்டரப்பொல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நித்திரையிலிருந்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி கொலைசெய்த குற்றச்சாட்டில் தான் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் என்றும் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர் வாக்கு மூலம் வழங் கியுள்ளார்.

இந் நிலையில், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களுக்காக வாழைச் சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சுஜித் பிரியந்த முன்வைத்த கோரிக்கை க்கமைய, கனே முல்லவின் சடலத்தை நல்லடக்கம் செய்ய கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, சஞ்சீவவின் உடல் அவரின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

கனேமுல்ல கொலை வழக்கில் துப்பாக்கிதாரியாக மொஹமட் அசாம் செரெப்தீனின் பெயர் மற்றும் புகைப்படம் என்பன பொலிஸாரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டமையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து சட்டத்தரணி நுவன் ஜயவர்தனவினூடாக அவரின் சகோதரர் ஒருவர் நகர்த்தல் பத்திரமொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நகர்த்தல் பத்திரம் மீதான விசாரணையின்போது சட்டத்தரணி தசுன் பெரேரா நீதிமன்றத்துக்குக் கருத்து முன்வைத்து, இந்தக் குற்றச்செயல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான மொஹமட் அசாம் செரெப்தீன் இல்லை என்றபோதும் அசாம் என்பவரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரின் மோட்டார் சைக்கிளை எடுத்துச்சென்றுள்ளதாக நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்த கொழும்பு குற்றத்தடுப்பு மற்றும் வாழைச்சேனை பொலிஸ் அதிகாரிகள் தாம் அவ்வாறான சந்தேக நபர் தொடர்பில் நீதிமன்றத்துக்கு தகவல் வழங்கவில்லை என்றும் அதுதொடர்பில் தேடிப்பார்த்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளனர். முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்துக்கு அறியத்தருமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, துப்பாக்கிதாரிக்கு பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டுள்ள கொழும்பு பிரதான நீதவான் சந்தேகநபரை விசாரணைக்காக சிறைச்சாலையிலிருந்து வெளியில் அழைத்துச் செல்வதென்றால் அதுதொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவித்து அதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்துக்குள் நீதவானுக்கு முன்பாகவே பாதாள உலகக் குழுத் தலைவர் எனக் கூறப்படும் கனேமுல்ல சஞ்சீவ என்றழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவித்து முன்னாள் கொமாண்டோவும் முச்சக்கரவண்டி சாரதியுமான மஹரகமவைச் சேர்ந்த சமிது தில்ஷான் பியுமங்க சந்தனாரச்சி (வயது 27) மற்றும் வேன் சாரதியான மில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த கரன்டாரகே மஹேஷ் சம்பத் பிரியதர்ஷன (வயது 44) ஆகியோர் சந்தேகத்தின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

மேலும், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் பல சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர்களை கைதுசெய்வதற்காக பரந்துபட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ள அதிகாரிகள், சந்தேக நபர்களை 03 மாத காலம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியைப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காணப்படும் பாரதூரத் தன்மை மற்றும் பாதாள உலகக் குழுத் தலைவர்களின் தொடர்பு இருக்கின்றமையால் சந்தேகநபர் களுக்கு இருக்கும் அச்சுறுத்தலை கருத்திற்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமலிருக்கவும் தேவையான நேரங்களில் நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறார்கள்.

மேலும், சந்தேகநபர்களின் சார்பில் ஆஜராகும் இரு சட்டத்தரணிகள் தவிர வேறு எவரும் அவர்களை சந்திக்க முடியாதென்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் நிலைமை இருக்கிறது என்பது தொடர்பில் சிறு சந்தேகம் வந்தாலும் அதுதொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


## நூல்கள் கொள்வனவு

மலையக எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்வதற்கு நாங்கள் தயார்.

தொடர்புகளுக்கு 0720594029

குறிப்பு: விலை கொடுத்து வாங்கப்படும்






வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, பெப்ரவரி 23, 2025

# தொடரும் அடக்குமுறை!

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த ஆசிரியரொருவருக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கொழும்பில் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் அவரிடம் தாம் கோரும் தகவல்களை வழங்காவிட்டால் கைதுசெய்யப்படவேண்டிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) கவனமாகப் பயன்படுத்தப்படுமென அரசாங்கம் உறுதியளித்திருந்தபோதிலும் கிளிநொச்சியிலுள்ள பாடசாலை ஆசிரியரொருவர் மீண்டும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, கோணாவில் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் இன்னாசிமுத்து சத்தியசீலனிடம் 2024 நவம்பர் 06ஆம் திகதி பெறப்பட்ட வாக்குமூலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு 01 இல் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

14 மார்ச் 2024 அன்று, கோணாவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின்போது, தமிழர்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கும் வகையிலான இலங்கையின் வரைபடத்தை ஒத்த வடிவமைப்பொன்றினூடாக இல்லமொன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டில் ஈழம் வரைபடம் மற்றும் கனகபுரம் மயான வாயிலின் மாதிரியை உருவாக்க உதவிய மாணவர்களின் பெயர்ப்பட்டியலுடன் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸ் தலைமையகத்தில் முன்னிலையாகுமாறு ஆசிரியர் இன்னாசிமுத்து சத்தியசீலனுக்கு பொலிஸார் அனுப்பியுள்ள தகவல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை இலேசான விடயமல்ல. மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கோரப்படுவதே அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறல்.

கடந்த ஜனவரி 20ஆம் திகதி தாம் கற்பிக்கும் வகுப்பறைக்குள் அனுமதியின்றி நுழைந்த பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் தம்மை விசாரிக்கவேண்டுமெனக் கூறி அச்சுறுத்தியதாக கோணாவில் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் சத்தியசீலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தன்னை கொழும்புக்கு மீண்டும் அழைக்கவேண்டியேற்படும் எனவும் தாம் கோரும் தகவல்களைத் தர ஒத்துழைப்புத் தர வேண்டுமெனவும் இல்லையேல் தன்னை கைதுசெய்ய வேண்டியேற்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்ததாக ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதற்கு குறித்த ஆசிரியர், தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை எனவும் ஏதாவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் தனது அடிப்படை உரிமை மீறப்படும் என முறைப்பாடுகளை செய்யவேண்டியேற்படும் எனவும் தன்னை பாதுகாக்க சட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டியேற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

14 மார்ச் 2024 அன்று, கோணாவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின்போது தமிழர்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கும் வகையிலான இலங்கையின் வரைபடத்தை ஒத்த வடிவமைப்பொன்றினூடாக இல்லமொன்று அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு, இது தொடர்பில் கடந்த காலத்தில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பல தடவைகள் அழைத்த பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

2024ஆம் ஆண்டும் கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் தலைமையகத்துக்குத் தன்னை அழைத்த அதிகாரிகள் 10 மணிநேரம் விசாரணை நடத்தியதாக ஆசிரியர் இன்னாசிமுத்து சத்தியசீலன் சுட்டிக்காட்டுகின்றார்.

விசாரணையின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றீர்களா? எனக் கேள்வி எழுப்பிய பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர், இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின்போது இலங்கையின் வரைபடத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களை அடையாளப்படுத்தும் வகையில் இல்லத்தை உருவாக்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஆகியோரின் பெயர் விபரங்களை வழங்குமாறு கோரியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறெனினும், மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோரின் பெயர் விபரங்களைப் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வழங்க அவர் கடுமையாக மறுத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஆட்சி மாறிவிட்டது. புதிய ஆட்சி வந்துவிட்டது. தமிழர்கள் மீதான அடக்குமுறை குறையப்போகிறது என்றெல்லாம் பகல் கனவு கண்டுகொண்டிருந்தவர்கள் மீது சாட்டையடி விழுந்திருக்கிறது. இந்த நாட்டில் என்ன மாறினாலும் தமிழர்கள் மீதான அடக்குமுறை மாறிவிடாது என்பதற்கு மேலுள்ள விடயத்தை உதாரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

கடந்த வாரம் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்காக பெருமளவு நிதி ஒதுக்கப் பட்டிருந்தது. உள்நாட்டுப் போர் இல்லாத காலத்திலேயே இவ்வாறு நிதி ஒதுக்கப்படுவது தமிழர்கள் மீதான அடக்குமுறைக்குப் பயன்படுத்தவா என்ற கேள்விகள் கூட சமூகத்தில் எழுப்பப்பட்டிருந்தன. இப்போது சாதாரண பாடசாலை விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற அலங்காரத்துக்கு விசாரணைகளை நடத்த இந்தளவு தூரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மேற்படி கேள்விகளை நியாயப்படுத்துகிறது.

தமிழர்கள் சுயாட்சி கோரி இந்த நாட்டில் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுக்கென ஆட்சிப்பகுதியை அடையாளப்படுத்தியிருந்தார்கள். தமிழர் தாயகம் வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருந்ததென்பது வரலாறுதானே. அந்த வரலாறை நினைவுகூரும் முழு உரிமையும் தமிழர்களுக்கு உண்டல்லவா? தமிழர்கள் அப்படிச் செய்ய முடியாதெனக் கூறுவதற்கு எவருக்கு உரிமையுண்டு? இந்த வரலாற்றை மறுத்து அல்லது இந்த வரலாற்றை தமிழர்கள் நினைவுகூரக்கூடாதென்று அடக்குமுறைகளை செய்தால் எந்த முகத்தை வைத்துக்கொண்டு நல்லிணக்கம் பற்றி பேசப்போகிறது இந்த அரசு ?

தமிழர்கள் மீதான இன்றைய அடக்குமுறைக்கு ஒரு சிறிய உதாரணமே இது. ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல தமிழர்கள் மீது மத்திய அரசு ஏவிவிடும் அதிகாரத்தின் ஓர் அம்சமே ஆசிரியர் மீதான விசாரணை. இந்நாட்டில் பிறந்த தமிழர் விதி இதுதான்!



மீநிலங்கோ தெய்வேந்திரன்

# பட்ஜெட் 2025: துண்டு யாருக்கு?



இம்முறை பட்ஜெட்டில் துண்டு விழுந்துள்ளது என்று பலர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவையும் அரசாங்கத்தையும் கிண்டல் செய்வதை ஊடகங்களில் பார்க்கக் கிடைத்தது. இலங்கையில் துண்டு விழாத பட்ஜெட்டை கடைசியாக யார் சமர்ப்பித்தது என்ற கேள்விக்கான பதிலைத் தேடினால், இந்தக் கிண்டல் வெறும் அவதூறு என்பது தெளிவாகத் தெரியும். பட்ஜெட்டில் துண்டு விழுந்துவிட்டது என்பவர்களுக்கு பொருளாதாரம் குறித்தோ பட்ஜெட் குறித்தோ இலங்கையின் பொருளாதார வரலாறு குறித்தோ எதுவும் தெரியாது என்றே கொள்ளவேண்டும். இந்த பட்ஜெட், நிறைவான பட்ஜெட் அல்ல.ஆனால், நியாயமற்ற அவதூறுகள், காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுகள். இந்த பட்ஜெட்டை விளங்கிக்கொள்வதற்கு முன்னர், சில முக்கியமான அடிப்படைகளை நாம் புரிந்துகொள்வது முக்கியம். அந்த அடிப்படைகளின் வழியே நாம் இவ்வாண்டுக்கான பட்ஜெட்டை நோக்குவது பொருத்தம். முதலாவது, இலங்கை ஒரு கடும் பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றது. நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவிட்டதென்று கடந்தகால ஆட்சியாளர்களும் அவர்தம் ஆதரவாளர்களும் நவதாராளவாதத்தின் அடிப்பொடிகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால், அது உண்மையல்ல என்பதை சாதாரண இலங்கைப் பிரஜை நன்கறிவார். அதுதான் யதார்த்தம். அதை மறைக்க அரிதாரம் பூசி ஆட்டங்காட்டத் தேவையேதுமில்லை. நாட்டின் பொருளாதாரம் மிகுந்த மோசமான நிலையில் உள்ளது.

இரண்டாவது, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கை ஐ.எம்.எவ்வின் உதவியை நாடியது. இதன்வழியாக இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையை ஐ.எம்.எவ்வுக்குத் தாரை வார்த்தது. இலங்கையின் பொருளாதாரக் கொள்கை வகுப்பை நடுநாயகமாக முடிவுசெய்யும் உரிமையை இலங்கைக்கு கடன் வழங்கி ஐ.எம்.எவ். பெற்றுக்கொண்டது. எனவே, ஐ.எம்.எவ்வை மீறிய ஒரு பட்ஜெட் சாத்தியமில்லை. அவ்வாறு ஐ.எம்.எவ்வைப் புறக்கணிப்பதற்கு, அதீத அரசியல் துணிச்சல் வேண்டும். அதை இலங்கையில் எதிர்பார்ப்பது தவறு என்பதை தேசிய மக்கள் சக்தியும் நிரூபித்துள்ளது. எனவே ஐ.எம்.எவ்வுக்கு உடன்பட்ட நிபந்தனைகளை உள்ளடக்கியதாகவே எந்தவொரு பட்ஜெட்டும் அமைய முடியும். ஐ.எம்.எவ். இலங்கையில் எதை எதிர்பார்க்கிறது என்பதை நோக்கினால் அவை இலங்கை மக்களின் நலன் சார்ந்தவையல்ல என்பது புரியும். அப்படியிருக்கையில் எவ்வாறு மக்கள் நலன் சார்ந்த பட்ஜெட்டை எதிர்பார்ப்பது. சட்டியில் இல்லாததை அகப்பையில் எவ்வாறு பரிமாறுவது?

மூன்றாவது, இலங்கையின் அந்நியக் கடன் பற்றியது. இலங்கை வங்குரோத்தானது முதல் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தின் தீர்மானகரமான சக்தி அந்நியக் கடனே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் தனியார் கடன்வழங்குநர்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து அவர்களின் கடனை வட்டியோடு திரும்பச் செலுத்த உடன்பட்டார். தேர்தல் விதிகளின்படி இது தவறானது. ஆனால், யாரும் இதைக் கேள்வி கேட்கவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இதை ஏற்றுக்கொண்டது. இப்போது இலங்கை அந்நியக் கடன்களை அதிக வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.

நான்காவது, இலங்கையின் பொருளாதார வங்குரோத்துக் காரணமான காரணிகள் பல. வெறுமனே அரசியல் அதிகாரத்தின் கொள்ளையடிப்பு மட்டும் காரணமல்ல. அரச துறையின் வினைத்திறனின்மை, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பயனற்ற அரச சேவைகள், அளவுக்கதிகமான அரச துறை ஊழியர்கள் என ஏராளமான துணைக்காரணிகள் உள்ளன. இவற்றை ஓராண்டுக்குள்ளோ அல்லது மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவோ சரிசெய்ய இயலாது. அதேவேளை, இந்தத் துறைகளை விரும்பியோ விரும்பாமலோ தக்கவைக்க வேண்டியுள்ளது. எனவே, அதற்கான செலவைச் செய்தேயாகவேண்டும். அல்லாவிடின் மிகுந்த துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐந்தாவது, ஜனாதிபதி அநுரவும் அவர்தம் சகாக்களும் இடதுசாரிகள் என்ற தவறான பிம்பமொன்று உண்டு. எனவே, அவர்கள் சந்தைக்கும் திறந்த நவதாராளவாதப் பொருளாதாரத்துக்கும் எதிரானவர்கள் என்ற கருத்துருவாக்கம் வலுவானது. ஆனால், ஜே.வி.பியின் கடந்தகால நடவடிக்கைகளை நன்கறிந்தவர்கள் ஜே.வி.பி. ஓர் இடதுசாரி இயக்கமல்ல, அதன் பொருளாதாரக் கொள்கை மிகவும் கோளாறானது என்பதை அறிந்திருப்பார்கள். எனவே, இடதுசாரி அரசாங்கக் கண்ணோடு இந்த பட்ஜெட்டை அணுக முடியாது. ஏனெனில், ஜனாதிபதியோ அவரது அரசாங்கமோ இடதுசாரி அல்ல. ஆனால், தேவைக்குப் போடும் துண்டுபோல அதைப் பயன்படுத்திக்கொள்கிறது. அந்தப் பிரதிபிம்பம் "சாதாரண மக்களின் அரசு", சிங்களத்தில் "அபே ஆண்டுவ" என்ற கதையாடலுக்குப் பயனுள்ளது, அவ்வளவே.

இந்த ஐந்து அடிப்படைகளின் பின்புலத்திலேயே இந்த பட்ஜெட்டை நாம் அணுக வேண்டும். கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி பாராளுமன்றில் சமர்ப்பித்த இவ்வாண்டுக்கான பட்ஜெட் குறித்த கலவையான கருத்துகளைக் காணக்கிடைக்கிறது. ஒருபுறம், பட்ஜெட்டை விமர்சிப்பவர்களில் பெரும்பான்மையானோர், ஐ.எம்.எவ்வின் வழிகாட்டலை முழுமையாகப் பின்பற்றவில்லை. இது நாட்டுக்குக் கேட்டைக் கொண்டுவந்து தரும் என்று சொல்கிறார்கள். மறுபுறம், இன்னும் கொஞ்சம்பேர் ஜனாதிபதி நவதாராளவாதப் பாதையில் பயணிக்கிறார். நவீன ரணிலாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள். இரண்டுமே தவறான பலவீனமான வாதங்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியேற்று, ஐ.எம்.எவ். உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு தொடரப்போவதாக அறிவித்த போதே கதை முடிந்துவிட்டது. ஆனால், அப்போது வெற்றிக்களிப்பில் எல்லோரும் இருந்தார்கள். 'அபே ஆண்டு'வக்கான முதலாவது ஆப்பு சத்தமில்லாமல் இறங்கியது. பின்னர் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்து தனியார் கடனாளிகளுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் உடன்பட்ட விதிமுறைகளை ஏற்றுக்கொண்டபோது எல்லாமே முடிந்துவிட்டது. அப்போதே நாடு நவதாராளவாதப் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. இப்போதுதான் நித்திரையால் விழித்தவர்கள் போல நவதாராளவாதப் பாதையில் ஜனாதிபதி பயணிக்கிறார் என்பது நகைப்புக்கிடமானது.

மறுபுறம், இலங்கைக்கு பிணையெடுப்புக் கடனான ஐ.எம்.எவ். நான்காவது கட்டமாக வழங்கவேண்டிய 333 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இன்னமும் நிலுவையிலுள்ளன. வரவு-செலவுத்திட்டத்தின் அடிப்படையிலேயே அத்தொகை இலங்கைக்கு வழங்கப்படும். அத்தொகையை இலங்கை பெற்றால் ஐ.எம்.எவ்வின் வழிகாட்டலை இலங்கை பின்பற்றியதா, இல்லையா என்பது தெரியவரும்.

இனி இந்த பட்ஜெட்டின் சில முக்கியமான குறிகாட்டிகளுக்கு வருவோம். இவ்வாண்டு நாட்டின் மொத்த வருமானம் 4,990 பில்லியன். மொத்த செலவினம் 7,190 பில்லியன். எனவே, துண்டுவிழும் தொகை 2,200 பில்லியன். இதில் கவனிப்புக்குரியது யாதெனில், கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டே துண்டுவிழும் தொகை குறைவாகவுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இத்தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 10 வீதமாக இருந்தது. இவ்வாண்டு இது 6.7 வீதமாக எதிர்வுகூறப்படுகிறது. அவ்வகையில் இது வரவேற்கத்தக்கது.

இலங்கையின் மொத்தச் செலவினத்தில் 41% இலங்கை வாங்கிய கடன்களுக்கான வட்டிக்காக மட்டும் செலவிடப்படுகிறது. இவ்வாண்டு இலங்கை செலுத்தவுள்ள வட்டி 2,950 பில்லியன். இன்னும் சரியாகச் சொல்வதாயின், இலங்கையின் துண்டுவிழும் தொகையை விட செலுத்தவுள்ள வட்டியின் தொகை அதிகம். ஜனாதிபதி தனது பட்ஜெட் உரையில் சொன்னவொரு செய்தி யாதெனில், 2028ஆம் ஆண்டு முதல்தான் இலங்கை கடன்களை மீளச் செலுத்தவேண்டும் என்பதாகும். இப்போது செலுத்துவது வட்டி மட்டுந்தான். "கந்துவட்டிக்காரரிடம் கடன் வாங்கியிருப்பார்களோ" என்று நீங்கள் யோசித்தால், அது தவறல்ல.

இவ்வாண்டுக்கான மொத்தச் செலவுகளில் வட்டி தவிர்த்த ஏனைய செலவுகள் பிரதானமாக இரண்டு வகைப்படும். ஒன்று, ஆண்டுதோறும் மீண்டுவரும் செலவுகள் (recurrent Expenditure) இதற்குள் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், அலுவலக செலவுகள், மின்சாரம், வாகனம் உள்ளிட்ட அரச இயந்திரத்தை இயக்குவதற்கான செலவுகள் அடங்கும். இரண்டாவது, புதிய மூலதனச் செலவுகள்(capital expenditure). இதற்குள்ளேயே புதிய திட்டங்கள், முன்னெடுப்புகள் போன்றவற்றுக்கான செலவுகள் அடங்கும். இதில் மூலதனச் செலவுகள் 1300 பில்லியன் மாத்திரமே. ஏனையவை மீண்டுவரும் செலவுகள். ஆனால், முக்கியமானது யாதெனில், கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மூலதனச் செலவுகளுக்கு இவ்வாண்டே அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, கொரோனா, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பனவெல்லாம் ஏற்பட முன்னரான 2019ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 637 பில்லியன் மட்டுமே.

இம்முறை கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளுக்கு மூலதனச் செலவுகளுக்கான அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளமை வரவேற்கத் தக்க விடயம். அதேவேளை, பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மீண்டுமொருமுறை ஏராளமான கேள்விகளை எழுப்புகிறது. பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு ஆகிய இரண்டு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை ஒன்றாக்கினால் நிதியமைச்சுக்கு அடுத்தபடியாக அதிகப்படியான நிதி இதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டை விட மேலதிகமாகப் பாதுகாப்பு செலவினத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதை இன்னமும் விரிவாகப் பார்ப்பதாயின், இவ்வாண்டுக்கான மூலதனச் செலவுகளுக்காக, கல்விக்கு 65 பில்லியனும் பாதுகாப்புக்கு 60 பில்லியனும் பொதுப் பாதுகாப்புக்கு 16.45 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த பட்ஜெட் சொல்கிற செய்தி யாதெனில், வாங்கிவந்த வரம் போல, பல விடயங்கள் முன்னைய ஆட்சியாளர்களின் தொடர்ச்சி. அதில் இராணுவச் செலவினம் பிரதானமானது. அதேபோன்றவையே ஏனைய செலவினங்களும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை அளித்த மக்களின் எதிர்பார்ப்புகள் மிக அதிகம். அந்த எதிர்பார்ப்புகள் ஒருபுறம் யதார்த்தத்துக்கு வெகுதொலைவில் இருக்கின்றன. மறுபுறம் அரசை விமர்சிப்போரால் தெளிவான, நின்றுநிலைக்கக்கூடிய மாற்றுத் திட்டத்தை இன்றுவரை முன்வைக்க முடியவில்லை என்பதையும் நாம் நினைவில் இருத்தல் வேண்டும். ஏனெனில் விமர்சிப்போர் பலர்.

''பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை''.

இந்த பட்ஜெட் யாருக்குத் துண்டு போட்டது என்பதை அரசாங்கத்தின் எதிர்கால நடத்தை முடிவுசெய்யும்.




# தன்னை சிறந்ததொரு இராஜதந்திரியென்று நிரூபித்துக்கொண்ட ஜூலி அம்மையாரின் மொட்டுக் கட்சி அலுவலக விஜயம்!

சர்வதேச நடப்புகள் மீது ஆர்வமுள்ளோர் இராஜதந்திரி என்றால் யார் என்று கேட்டால், அதற்கு வழமையாக வழங்கப்படும் பொதுவான பதில்; " A diplomat is someone who can tell you to go to hell in such a way that you actually look forward to the trip"

ஒரே பார்வையில் இது முற்றிலும் உண்மை என்று கூற முடியும். இந்தக் கருத்தின் உள் அர்த்தம் என்னவெனில், அனுபவம் வாய்ந்த இராஜதந்திரி படுமோசமானதொரு தகவலைக் கூட மிகவும் மென்மையாகக் கூறக்கூடியவராக இருப்பார். அலியானா பி. டெப்லிஸின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பைடன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தூதுவராக ஜூலி சங் இலங்கையில் பதவியேற்றார்.

அவர் 29 வருடங்கள் தொடர்ச்சியாக வெளிநாட்டு சேவை அனுபவத்தைக்கொண்ட சிறப்பு வாய்ந்த ஒரு பெண்மணியாவார். எமது நாட்டின் வெளிநாட்டுத் தூதுவர் சேவையின் கடந்த காலத்தையும் தற்போதைய காலகட்டத்தையும் இணைத்துப் பார்க்கும்போது அறிந்துகொள்ளக்கூடியதொரு விடயம் உள்ளது.

பிரேமதாச காலப்பகுதியில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராக இருந்த டேவிட் கிளஸ்டன் (1991), விக்கிரமசிங்க காலப்பகுதியில் (2000) சமாதான செயற்பாடுகளின் பின்னணியில் இருந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைப் போன்றும் அதற்கப்பாலும் விமர்சனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் தூற்றல்களுக்கும் அதேபோன்று காலத்துக்குக் காலம் வெவ்வேறுபட்ட நிலை புகழாரங்களுக்கும் உள்ளான ஒரு தூதுவராகவே ஜூலியை குறிப்பிட முடியும்.

தற்போது அவர் இலங்கையில் தனது இறுதி நாட்கள் சிலவற்றைக் கடந்துகொண்டிருக்கின்றார். அவர் தற்போது எமது நாட்டில் 1091 சேவை நாட்களைக் கடந்திருக்கின்றார். இதன்படி ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் பெரும் தலைகீழ் மாற்றங்கள் எதுவும் நிகழாதிருக்குமாயின் அவர் இந்நாட்டில் மேலும் 5 நாட்கள் மட்டுமே இருக்க முடியும். அந்த ஐந்து நாட்களுக்குள் சிலவேளைகளில் அவர் ஜனாதிபதியுடன் தனது இறுதிச் சந்திப்பை நிகழ்த்தக்கூடும்.

"நட்புடன் கூடிய சமாதானம்" என்று பொருள்படலத்தின் மொழியில் Ex Amicitia Pax என்று கூறப்படுவதற்கேற்ப சமாதானத்துக்கு உதவுவது இராஜதந்திரிகளின் தொழில் நிபுணத்துவத்தின் மிக முக்கிய அம்சமாக இருக்கும் நிலையில், இலங்கையில் சமாதானம் என்பது ஒருபுறமிருக்க, ஜூலி எப்பொழுதும் தனது நிபந்தனையற்ற அன்புக்கரங்களை நாலாபுறங்களிலிருந்து வரும் அரச மற்றும் அரச சார்பற்ற தரப்புகளை நோக்கி நீட்டி அவர்களை தக்கவைத்துக்கொள்ளும் ஆற்றல்கொண்ட ஓர் இராஜதந்திரியாக செயற்படுகின்றார் என்று கூற முடியும். அதனால் ஒரே சிந்தனைகளைக்கொண்டவர்கள் மட்டுமல்லாது, மாறுபட்ட சிந்தனைகளைக்கொண்ட அனைவர் மத்தியிலும் அவர் எந்தவிதமான வேறுபாடுகளுமின்றி பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றார். இவ்விடயம் எவ்வாறாயினும், முன்னாள் பைடன் அரசாங்கத்தின் தெரிவை ட்ரம்ப்பும் எலன் மஸ்க்கும் ஏற்றுக்கொள்வார்களாயின் பெரும்பாலும் எமது நாட்டின் அடுத்த தூதுவராக எலிசபெத் கே. ஹோர்ஸ்ட் (Elizabeth K. Horst) நியமனம் பெறக்கூடும்.

இந்த பரபரப்புகளுக்கு மத்தியில் அமெரிக்கப் பிரஜைகள் தமது நாட்டின் 47ஆவது புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்தனர். அது உலகளவில் அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது. இதனூடாக மற்றுமொரு பிரபலமானதொரு கருத்து தலைகீழாக மாறியது. அதாவது, மேற்கத்தேய நாட்டினர் அரசாங்க மாற்றங்களுக்கேற்ப தமது வெளிநாட்டுக்கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டார்கள் என்ற பொதுவான கருத்து இங்கு மாறிப்போயுள்ளது. ஐக்கிய அமெரிக்க ஓவல் மாளிகையின் ஊடகப் பேச்சாளர் கெரோலின் லெவிட் தமது பேச்சால் வெளிப்படுத்தும் சகலவிதமான ஆவேசமான ஆணவப் பேச்சுகளினூடாக டிமோக்கிரட்டிகளை திகைக்க வைக்கின்ற அதேவேளை, இதுவரை அவர்கள் செய்த ஒரு செயற்பாடும் ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகளின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை என்று கூறியிருந்தார்.

இது ஒரு சிறந்த தருணமாகும். பேம் பொன்ட் ஐக்கிய அமெரிக்காவின் சட்ட மா அதிபராகவும் எலன் மஸ்க் உத்தியோகப்பற்றற்ற அரச தலைவராகவும் கெரோலைன் லெவிட் மிகவும் இளம் வயதில் நியமனம் பெற்ற ஊடகப் பேச்சாளராகவும் டிமோக்கிரட்டிக்குகளுக்கு எதிராக மேற்கொள்கின்ற அவதூறுகளும் அச்சுறுத்தல்களும் ஐக்கிய அமெரிக்காவில் நிகழ்ந்த கொடூரமான தேர்தலுக்குப் பின்னரான வன்முறை செயல்களில் ஒன்று என்பதை இங்கு கூறிவைக்க வேண்டும். அதிகாரம் அமைதியாக கைமாற்றப்பட்டாலும், ரிபப்லிக்குகளால் டிமோக்ரட்டிக்குகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தைப் பிரயோகத் தாக்குதல்கள் பண்டைய காலங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் அசுரன் போர்களையே நினைவுபடுத்துகின்றது.

இவ்வாறான பின்னணியில் இலங்கையின் இடதுசாரிப் போக்கைக் கொண்டதும் வன்முறை வரலாற்றைக் கொண்டதுமான ஓர் அரசியல் இயக்கமான ஜே.வி.பி., தேசிய மக்கள் சக்தியாக உருமாறி, அநுரகுமார திசாநாயக்கவை முதன்மைப்படுத்தி நாட்டில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு நடத்தி முடித்ததென்பதை அமெரிக்கா நினைவிற்கொள்ள வேண்டுமென்று இங்கே கூறுவது அவர்களை அவமானப்படுத்த அல்ல.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு அண்மித்த தினங்களில் அநுரகுமார தனது ஆதரவாளர்களை வழிநடத்திய விதமானது தேர்தல் நடத்துவது எப்படி என்பது பற்றி பல தசாப்தங்களாக இலங்கைக்குப் பாடம் நடத்திய அமெரிக்கா, பல பில்லியன் டொலர்களை வழங்கி இலங்கையிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய மிக முக்கியமான பாடங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு வெற்றியிலும் மகிழ்ச்சியைக் கொண்டாட பாற்சோறு உண்ணும் இலங்கை மக்கள், இம்முறை எதிர்க்கட்சியினரை வெறுப்படையச் செய்வதற்காகவேனும் அவ்வாறு செய்யாமல் விட்டமை அநுரகுமார ஏற்படுத்திய பெரு மாற்றமாகும். அவ்வாறான ஜே.வி.பிக்காரர்கள் முன்னிலையில் அமெரிக்காவின் ரிபப்லிக்காரர்கள் தம்மிடம் இல்லாத பெருந்தன்மையைத் தேடிச்செல்பவர்களாக இருப்பதுடன், அவர்கள் என்றாவது ஒரு நாள் காணாமற்போய்விட்ட பெருந்தன்மையை நரகத்தின் வாசலிலேயே தேடிக்கொள்வர்.

ஜூலியும் இந்த அசுரன் போரில் ஒரு புள்ளியில் நிலைத்திருக்கின்றார். ட்ரம்ப் - மஸ்க் கூட்டு கருதுவதுபோன்று அமெரிக்காவை மீண்டும் உலகில் சிறப்பான நிலைக்குக் கொண்டுவருகின்ற செயற்பாடுகளுள் முக்கியமானதொரு செயற்பாடான USAID ஐ நீக்கும் பணி இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கை USAID ஐ நன்கு இறுக்கிப்பிடித்துக்கொண்டுள்ளது. நாட்டின் பாராளுமன்றம் தொடக்கம் கிராமத்தில் மரணச்சடங்கு நடத்தும் சங்கம் வரை நினைத்துப்பார்க்க முடியாதளவுக்கு ஆதரவை வழங்கிய பிரதானமானதொரு வெளிநாட்டு நிறுவனத் தொகுதியாக USAID விளங்குகின்றது. வழமைபோன்று சரத் வீரசேகர உட்பட இனவாத (தேசியவாத) சிறுபான்மையினர் காலி வீதியில் அமெரிக்கத் தூதரகத்தைப் பார்த்துக்கொண்டு முணுமுணுக்கும் வழமையான செயலை செய்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான தருணத்தில்தான் பத்தரமுல்ல, நெலும் வீதியிலுள்ள மொட்டுக் கட்சியின் அலுவலகத்துக்குள் ஜூலி அடியெடுத்து வைத்தார்.

அரசியல் கட்சியாக பதிவுசெய்த பின்பு மிகவும் குறுகிய காலப் பகுதியில் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்ட மொட்டுக் கட்சியின் அலுவலகத்துக்குள் ஜூலியின் வருகை ஒருபோதும் நிகழக்கூடாததொரு விடயமல்ல. ஆனால், சென்றிருக்கும் தருணம்தான் இங்கு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ USAID நிதியைப் பெற்றுக்கொண்ட இலங்கையர்கள் பற்றி விசாரிப்பதற்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துவிட்டு, இரவில் கனவில் கூட அதனையே கூறி பிதற்றிக்கொண்டிருக்கின்றார்

இந்நிலையில், மொட்டுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் அமெரிக்கத் தூதரகத்தின் முன்னிலையில் கூடி அதனையே மீண்டும் வலியுறுத்தினர். இவ்வாறான தருணத்தில் ஜூலியின் வருகை நாமலுக்கு பெரும் கௌரவமாக அமைகின்றது. எதிர்க்கட்சியினர் வசமுள்ள எதிர்கால முதலீடாக அவர் கருதப்படுகின்றார் என்பது இதன்மூலம் தெட்டத்தெளிவாகின்றது. மறுபுறம் ஜூலி தன் இராஜதந்திர அனுபவத்தை இங்கு சிறந்த முறையில் பிரயோகிக்கின்றார். தன்னை விமர்சிக்கக்கூடிய பெரும் அதிகாரத்தைக்கொண்ட கட்சியையும் நபரையும் அடையாளம் காண விரும்புகின்றார்.

விமல் வீரவங்ச எவ்வளவுதான் பிதற்றினாலும் இத்தருணத்தில் அவரின் கதைகளைக் கேட்க விரும்புபவர்கள் யாரும் இல்லை. அதனால் ஜூலி நெலும் மாவத்தைக்கு சென்று USAID நிதி பற்றி அமெரிக்கத் தூதரகம் கணக்காய்வொன்றை நிச்சயம் மேற்கொள்ளுமென்று ஜூலி செய்து கொடுத்தார். அதற்கு நல்ல எண்ணத்தில் பதிலளிக்கும் முகமாக மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அமெரிக்கத் தூதரகத்தின் முன்பு நின்றவர்கள் மொட்டுக் கட்சியினர்தான். என்றாலும், அது தமது கட்சியின் தீர்மானம் அல்ல என்று தெரிவித்திருந்தார். அதுவே ஜூலியின் வெற்றியாகும். என்றாவது ஒரு நாள் நாமல் ஜனாதிபதித் தேர்தலில் வெல்லுவாராயின், அந்த வெற்றியின் பின்னணியில் அமெரிக்கா நிச்சயம் இருக்கும். ஜூலியின் பிரவேசம் மொட்டுக் கட்சியில் நிகழ்ந்த நாள்தான் அந்த எதிர்கால முதலீட்டுக்கான கணக்கு ஆரம்பமான நாள்.

இந்த வகையில் உலக இயக்கத்துக்கேற்ப உலகளாவிய சக்திகளின் பதில்கள் எப்போதும் விரும்பத்தக்கதாக அமையாது என்பதை ராஜபக்ஷக்களின் எதிர்ப்பின் மத்தியில் களைத்துப்போயிருக்கும் சிவில் சமூகத்தினர் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

இப்பொழுது நான் உங்களை ஒரு கேள்வி கேட்கின்றேன். நான் இந்த பத்தியில் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல ஜூலி சங் தமது தொழில்முறை வெளிநாட்டுச் சேவையின் மீது எவ்வளவு தூரம் பற்றுள்ளவராகவும் அபரிதமான சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார் என்பதும் தென்படுகின்றதல்லவா? அதற்கு உதாரணமாக USAIDனால் எமது நாட்டுக்கு வழங்கப்படும் நிதியை கணக்காய்வு செய்வதாக அவர் கூறிய கதையை மட்டும் கூறுகின்றேன்.

இவ்வாறானதொரு கணக்காய்வை பாராளுமன்றமும் அமெரிக்கத் தூதரகமும் மேற்கொள்வதை அரச சார்பற்ற அமைப்பொன்றைச் சேர்ந்தவராக நானும் விரும்புகின்றேன்.

அவ்வாறானதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படுமாயின் அதன்போது வெளிவரக்கூடிய சில விடயங்கள் பின்வருமாறு:

01. வீரவங்ச / கம்மன்பில இருவரும் அல்லது நாமல் குமாரர்கள் கூறுவதன்படி USAID உட்பட எமது நாட்டில் இயங்கும் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் வழங்கும் நிதியில் அதிகளவை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அவை வழங்கவில்லை. மாறாக, அரசின் பலதரப்பட்ட செயற்றிட்டங்களுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் அந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

02. அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைதியாக இருந்துகொண்டு USAID உட்பட பிற மேற்கத்தேய நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்ட ஒரே நிறுவனமாக காண்பிக்கப்படுகின்றபோதிலும் எமது நாட்டின் மேற்கத்தேய வெளிநாட்டுத் தூதரகங்கள் அரசியல் கட்சிகளுக்கும் அதன் செயற்பாட்டாளர்களுக்கும் தமது நிதியில் பெருமளவை வழங்க அதிகளவில் பேரார்வம் காட்டியுள்ளது.

இன்று USAID நிதி இல்லாமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது பணிகளை சற்று இடைநிறுத்தியுள்ள பின்னணியிலும் மேற்கத்தேய தூதரகங்களும் USAID மீதும் தமது ஆக்கிரோசத்தை வாரியிறைக்கும் இனவாத சக்திகள் அவர்களின் நிதியைப் பயன்படுத்தி தமது பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை வேடிக்கையான விடயமாகும். விமர்சிப்பவருக்கே அள்ளி வழங்குவதென்பது மேற்கத்தேயம் உருவாக்கிக்கொண்ட நாகரீகமான அணுகுமுறையாக உள்ளது.

USAID நிதி பற்றி கணக்காய்வு செய்வதென்பது அரசாங்க அலுவலகத்திலிருந்து பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றைப் பெறுவதை விட மிகவும் இலகுவாக செய்யக்கூடிய ஒன்றாகும். அமெரிக்கத் தூதரகம் அந்த நிதி பற்றி ஒவ்வொரு நிமிடமும் விழிப்புடனும் புரிதலுடனும் இருக்கின்றது. அமெரிக்கத் தூதரகமும் USAID ம் எமது நாட்டில் ஜனாதிபதி செயலகமும் பிரதமர் அலுவலகமும் போன்று தொலைவில் இயங்கும் நிறுவனங்கள் அல்ல. மொட்டுக் கட்சி நினைப்பதை விட ஜூலி மிகவும் ஸ்மார்ட் பேர்வழி.

இவ்வாறான கணக்காய்வில் நிகழக்கூடிய ஒரு பாதிப்பு என்னவெனில், USAID என்றால் என்ன என்பது பற்றி தெரியாததுபோல் செயற்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் இதர தொழில்வல்லுனர்கள் மற்றும் பெருமளவான ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்கள் தெரியவரப்போகின்றது. எவ்வாறாயினும், இறுதியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் விமர்சனங்களுக்குள்ளானாலும் USAID மற்றும் அமெரிக்கத் தூதரகம் போன்று பிற தூதரகங்களும் உயர்ஸ்தானிகராலயங்களும் வழங்கும் நிதியென்பது எமது நாட்டின் அரச கட்டமைப்பின் முக்கியமான பகுதி என்பதை இவ்வாறான கணக்காய்வின் மூலம் எமது மக்கள் தெளிவாக அறிந்துகொள்வார்கள்.

ஜூலி தனது இடது காலில் இலங்கையின் வரைபடத்தை பச்சைகுத்தியிருப்பதாக கார்டியன் இணையதளம் அண்மையில் கூறியிருந்தது. இந்தச் செய்தியை அறிந்துகொண்ட பலர் அதற்கு வழங்கிய அர்த்தத்தில் பெரும்பாலானவை ஜூலியின் அந்தச் செயல் ஒரு குறியீடாக உள்ளதென்றும் அது இலங்கையை அவதூறுக்குட்படுத்த எடுத்த முயற்சி என்றும் குறிப்பிட்டிருந்தனர். எனினும், ஜூலி மூன்றாண்டுகள் இலங்கையிலிருந்து ஆற்றிய பணிகளை ஆராய்ந்து பார்க்கும்போது தெரியவருவது என்ன?

அவர் தூரநோக்குள்ள இராஜதந்திரி என்பதுடன், ட்ரம்ப்-மஸ்க் கூட்டு, அமெரிக்க வெளிநாட்டு நடைமுறைகளை புறந்தள்ளிவிட்டு இலங்கையில் சேவையாற்ற அவரை மீண்டும் அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்பொழுது ஜூலி இலங்கை வரைபடத்தை தமது இடது காலில் அல்ல தனது சரீரத்தில் எந்தப் பகுதியிலும் பச்சைகுத்திக்கொண்டாலும் பரவாயில்லை என்று ராஜபக்ஷக்கள் கருதும் அளவுக்கு அவ்விடயம் முக்கியமற்றதாக விளங்கப்போகின்றது.


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209





# காக்கப்பட வேண்டிய "சிறுநீரகம்"

## மார்ச் 13 உலக சிறுநீரக தினம்

**நா.தினுஷா**

***சி**றுநீரகங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சிறுநீரகங்கள் செயலிழக்கும் போது ஏற்படும் துன்பங்களை வெளிப்படுத்து வதற்காகவும் வருடந்தோறும் உலக சிறுநீரக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், சிறுநீரகங்கள் என்ன செய்கின்றன மற்றும் உங்கள் சிறுநீரக ஆரோக்கியத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் நோக்கமாக இருக்கிறது.*

*இலங்கையைப் பொறுத்தவரையில் 2 மில்லியனுக்கும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் மத்தியில் சிறுநீரக நோய் நிலைமை அடையாளங்காணப்பட்டுள்ளதாக ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறுநீரகவியல் விசேட மருத்துவ ஆலோசகர் வைத்தியர் அனுபமா டி சில்வா தெரிவிக்கிறார்.*

### சிறுநீரகங்களின் முக்கியத்துவமும் அவற்றின் தொழிற்பாடும்


உடலில் ஏற்படுகின்ற செயற்பாடுகளின்போது உடலிலுள்ள கலங்கள் பல்வேறு கழிவுப்பொருட்களைத் தோற்றுவிக்கின்றன. அவ்வாறான கழிவுப்பொருட்களை உடலிலிருந்து அகற்றுவதற்கான முக்கிய ஓர் உடலுறுப்பே சிறுநீரகம். இதற்கப்பால் உடலுக்குத் தேவையான குருதியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஹோர்மோன்களை உருவாக்குதலையும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பங்களிப்பையும் சிறுநீரகங்கள் செய்கின்றன. சிறுநீரகங்கள் முறையாகச் செயற்படாமல் - உடலிலுள்ள கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் உடலில் தேங்கியிருக்கும்போது அவை மூளை, இருதயம் போன்ற உறுப்புகள் பாதிப்படைகின்றன. சிறுநீரகங்கள் முற்றாகச் செயலிழந்திருக்கும்போது அவற்றுக்கேற்ற சிகிச்சை இல்லாவிட்டால் இருதயம் முழுமையாகச் செயலிழந்து மூளையும் சிதைவடைந்துவிடும். எனவே, மனிதன் உயிர்வாழ்வதற்கு சிறுநீரகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

### இலங்கையின் சிறுநீரக நோய் நிலைமையின் பாரதூரம் என்ன? காரணங்கள் எவை?

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறுநீரக நோயின் தாக்கம் இருக்கிறது. நூற்றுக்கு 10 சதவீத மக்கள் மத்தியில் சிறுநீரக நோய் பரவலடைந்துள்ளது.

சிறுநீரக நோய்க்கான காரணிகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும். 2 மில்லியனுக்கும் அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு சிறுநீரக நோய்நிலைமை அடையாளங் காணப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படாத தரப்பினரும் இருக்க முடியும். பிரதானமாக நீரிழிவு நோயே சிறுநீரகம்சார் நோய்களில் (DKD) தாக்கம் செலுத்துகின்றன. அதேபோன்று, உயர் இரத்த அழுத்தம், இருதயம் சார்ந்த நோய்கள் போன்றனவும் சிறுநீரகம் சார்ந்த நோய்களில் தாக்கம் செலுத்தும் இரண்டாம், மூன்றாம் காரணங்களாக இருக்கின்றன. குளோமெருலோனெப்ரிடிஸ் (Glomerulonephritis) என்றதொரு நோய் நிலைமையும் இருக்கிறது. பொதுவாக இது சிறு வயது முதல் ஆரம்பமாக முடியும். அவ்வாறில்லாவிட்டால் இடைக்காலப் பகுதியில் உருவாகும் குளோமெருலோனெப்ரிடிஸ் வகைகளும் இருக்கின்றன. இந்த நோய்க் காரணி உடலுக்குள்ளேயே தோற்றம்பெறும். இந்த நோய் நிலை ஏற்படும்போது பொதுவாக புரோட்டின் வெளியேற்றம், இரத்த வெளியேற்றம் போன்றன இடம்பெற்று சிறுநீரக நோய் ஏற்படுகிறது.

உடலுக்குள் செல்லும் நச்சுப்பொருட்களாலும் சிறுநீரக நோய்கள் (CKDU) ஏற்படுகின்றன. அநேகமாக வடமேல் மாகாணத்தில் நிலத்தடி நீரால் ஏற்படும் சிறுநீரக நோய்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. நிலத்தடி நீரால் மாத்திரமல்ல, நீரில் சேரும் அநேகமான இரசாயனப் பொருட்களால் (கிருமிநாசினிகள், உரம்) போன்றவற்றால் இந்த இரசாயனப் பொருட்கள் நிலத்தடி நீரில் கலந்துள்ளதாக நம்பப்படுகிறது.




எலிக்காய்ச்சல் தொடர்ச்சியாக ஏற்படுமாக இருந்தால் அதுவும் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதுடன், தொடர்ச்சியாக பாம்பு தீண்டியிருந்தால் அதுவும் சிறுநீரக நோயை ஏற்படுத்தும். அது மாத்திரமல்லாமல் வலி நிவாரணிகளாக தொடர்ச்சியாக மருந்துகளைப் பயன்படுத்துதல், அநேகமான அழகுசாதனப் பொருட்கள், உடல் தசையை மேம்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளும் புரோட்டின் மா போன்றனவும் சிறுநீரக நோயை ஏற்படுத்துகின்றன. இரசாயனப் பொருட்களால் ஏற்படும் சிறுநீரகம் சார்ந்த நோய் ஒன்றாக இருந்தாலும் நோய்க் காரணி வேறுபட்டதாகவே இருக்கும். மூலிகைப் பொருட்களாலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுகின்றன.

### எவ்வாறு நோயை அடையாளம் காண்பது?

★ சிறுநீரகப் பரிசோதனை செய்தல். (புரோட்டின் வெளியேற்றம்)

★ இரத்தப் பரிசோதனை செய்தல்.

★ ஸ்கேன் செய்தல்.

★ சிறுநீரகம் சார்ந்த நோயை அடையாளம் கண்டதும் அதற்கான காரணத்தை இனங் காண்பதும் அவசியமாகும்.

★ நோய் நிலைமை ஏற்பட்டு காலம் கடந்ததன் பின்னரே இயற்கையான நோய் அறிகுறிகள் உடம்பில் தென்படும்.

★ இரத்த அழுத்தம் இருந்தால் சிறுநீரகம் சார்ந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

★ இரத்தசோகை (Anemia) நிலைமை இருந்தால் அவர்களுக்கும் சிறுநீரகம் சார்ந்த நோய்கள் ஏற்படுவதற்காக வாய்ப்புகள் இருக்கின்றன.

★ இதற்கப்பால் உடல் வீக்கம், கால் வீக்கம், மூச்செடுப்பதில் சிரமம், சிறுநீர் கழிப்பதில் சிரமம் போன்ற நோய் அறிகுறிகள், சிறுநீரகம் சிதைவடைந்து நோய் நிலைமை தீவிரமடைந்து இந்த அறிகுறிகள் இறுதிக் கட்டத்திலேயே தென்படும்.


வைத்தியர் அனுபமா டி சில்வா


### எவ்வாறு இந்த நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்வது? எவ்வாறு சிகிச்சை வழங்கப்படுகிறது?

★ சிறுநீரக பாதிப்பின் நிலையை அறிந்து அதற்கு ஏற்றவாறு சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுதல்.

★ ஆரம்பகட்டம் என்பதால் இரத்த உருவாகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு, கல்சியம் குறைவடைந்து யுரிக் அமிலம் (Uric Acid) அதிகரிக்கலாம். அப்படியொரு நிலைமை இருந்தால் அதனைக் கட்டுப்படுத்தவே ஆரம்பகட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

★ நோய் நிலைமை அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும்போது உடம்பில் கழிவுப்பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்து உடலுக்கு அவசியமானவை இல்லாமல் போகும். இரத்த அழுத்தத்தை நிர்வகிப்பதற்கு மேலதிகமான உடம்புக்குத் தேவையான நல்ல ஊட்டபொருட்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ சிறுநீரக நோய் ஏற்பட்டு சிறுநீரகம் முழுமையாக சிதைவடைகின்றதென்றால் டயலிஸிஸ் சிகிச்சை (Dialysis Treatment) வழங்கப்படுகிறது.




01. **ஹீமோடையலிசிஸ் (Hemodialysis):** இரத்தம் வடிகட்டும் இயந்திரத்துக்கு திருப்பி விடப்பட்டு பின்னர் உடலுக்குத் திருப்பியனுப்பப்படும்.

02. **பெரிட்டோனியல் டயலிசிஸ் (Peritoneal dialysis):** இரத்தத்திலிருக்கும் கழிவுகளை அகற்ற டயலிசிஸ் திரவம் வயிற்றுக்குள் செலுத்தப்படும். இந்த சிகிச்சை முறையை வீட்டிலேயே செய்து கொள்வதற்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

★ இந்தச் சிகிச்சைகளுக்கிடையில் புதிதாக சிறுநீரகத்தைப் பொருத்துவதற்கான அறுவை சிகிச்சைக்கும் நோயாளர்கள் தயார் செய்யப்படுகிறார்கள். இலங்கையைப் பொறுத்த வரையில் தேசிய சிறுநீரகவியல், டயலிசிஸ் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை நிறுவனம் (National Institute for nephrolohy, Dialysis and Transpantation) சிறுநீரகம் சார்ந்த நோய்களுக்குச் சிறந்த சிகிச்சைகளை வழங்கி வருகிறது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின்போது எதிர்கொள்ளும் சவால்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின்போது நோயாளரின் இரத்த வகையுடன் இணையக்கூடிய இரத்த வகையுடைய ஒருவரே சிறுநீரகத்தை தானம் செய்யவேண்டும். ஆரம்பத்தில் உறவினர்களினூடாக மாத்திரமே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது நண்பர்கள் அல்லது வேறு நண்பர்களினூடாக முன்னெடுக்கப்படுகிறது. அதேபோன்று சிறுநீரகத்தை தானம் செய்பவருக்கு 40இற்கும் மேற்பட்ட மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் பின்னரே சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

***போதுமனளவு நீர் அருந்துவதனூடாக சிறுநீரகக் கல் தோற்றம் பெறாமல் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறுநீரக நோய் சார்ந்த ஆலோசகரும் அறுவை சிகிச்சை நிபுணருமான வைத்தியர் குமரதாசன் உமாசங்கர் கூறுகிறார்.***

### சிறுநீரகம் சார்ந்த நோய்கள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன? பாதிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு சிறுநீரகங்களைப் பாதுகாப்பது?

சிறுநீரக நோயாளரொருவர் உடலிலுள்ள சர்க்கரையின் அளவையும் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதன் மூலம் சிறுநீரகம் செயலிழப்பதை தவிர்த்துக்கொள்ளமுடியும் அல்லது சிறுநீரகம் செயற்படும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும். குருதியில் சீனியின் அளவு அதிகரித்துக் காணப்படும்போது சிறுநீரகங்கள் விரைவாக பழுதடைந்துவிடுகின்றன.

இதற்கப்பால் சிறுநீரகம் அல்லது சிறுநீரகத் தொகுதியில் ஏற்படுகின்ற கற்கள் இன்னுமொரு நோய் நிலைமையாகக் கருதப்படுகிறது. நாம் பருகும் திரவ பதார்த்தங்களின் அளவு குறைவாக இருக்கின்றபோது சிறுநீரகக் கற்கள் தோற்றம் பெறுகினறன. சிறுநீரகக் கற்கள் மீண்டும் மீண்டும் தோன்றும்போது அல்லது அதற்கு முறையான சிகிச்சையளிக்கப்படாதபோது சிறுநீரகங்கள் செயலிழந்துவிடுகின்றன.

அதுமட்டுல்லாமல் புகைபிடித்தல், அதிக அளவு மது அருந்துதல் போன்ற விடயங்களால் சிறுநீரகங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே செயலிழக்கின்றன. விபத்துகளாலும் சிறுநீரகங்கள் பாதிப்படையலாம். சிறுநீரகப் புற்றின் காரணமாகவும் சிறுநீரகங்கள் செயலிழக்கலாம். அவ்வாறில்லாவிட்டால் வேறு உடலுறுப்புகளில் ஏற்படும் புற்றுநோய் சிறுநீரகத்தைப் பாதிப்பதாலும் சிறுநீரகங்கள் செயலிழக்கலாம். ஆண்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு புரோஸ்டேட் (Prostate Gland) என்றவொரு சுரப்பி இருக்கிறது. அந்தச் சுரப்பி பெரிதடையும் போது சிறுநீர் பொழிப்பில் ஏற்படும் அடைப்பு களுக்கு முறையான சிகிச்சைகள் பெறாவிட்டாலும் சிறுநீரகத்தைப் பாதிக்கும். மருத்துவரின் ஆலோசனையின்றி முறையற்ற வகையில் மருந்துகளை அருந்துதல், வலி நிவாரணிகள் போன்றவும் சிறுநீரகம் சார்ந்த நோய்களை ஏற்படுத்துகின்றன.

சிறுநீரகங்களைப் பாதிக்கும் பரம்பரை நோய்கள் வெகு குறைவு. ஆனால், நீரிழவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் பரம்பரையாக இருக்கும் நிலைமையால் சிறுநீரகம் பதிப்படையும். உதாராணமாக, பொலிசிஸ்டிக் சிறுநீரக நோய் (Polycystic kidney disease) சிறுநீரகத்தில் சிறுசிறு நீர்க்கட்டிகளை உருவாக்கி, நீண்டநாட்களின் பின்னர் அந்த நீர்க்கட்டிகள் ஒரு கட்டியாக மீளமைக்குப்படும் ஒரு நிலைமையும் இருக்கிறது. இந்த நோய் நிலைமை இலங்கையிலும் இருக்கிறது. சிறுநீரகத்தில் ஏற்படும் பரம்பரை புற்றுநோய்கள் அடுத்த பரம்பரைக்கு கடத்தப்படும் வாய்ப்பும் இருக்கிறது. அப்படி பரம்பரைக்கு இந்த நோய் இருந்தால் அதுதொடர்பில் சகோதரர்கள் போன்ற நெருங்கிய உறவினர்களைப் பரிசோதித்து கிசிச்சை வழங்குவதன்மூலம் அதனைக் குறைத்துக் கொள்ள முடியும். இதுபோன்ற சிறுநீரக நோய்கள் வருவதைத் தடுக்க முடியாது என்றாலும் முறையான சிகிச்சையை வழங்குவதன் மூலம் அதனைத் தடுத்துக்கொள்ள முடியும்.


வைத்தியர் குமரதாசன் உமாசங்கர்

### சிறுநீரகக் கற்கள் தோற்றம் பெறுவதற்கான நோய் அறிகுறிகள் ?

சிறுநீரகத்தில் கற்கள் தோற்றம் பெறுமாக இருந்தால் கல் உருவாகும் இடத்தைப் பொறுத்து வலி ஏற்படும். சிலருக்கு கடுமையான வலி, வாந்தி, சிறுநீரோடு இரத்தம் வெளியேறும் அறிகுறிகளும் தென்படும். சிறுநீரகக் கற்களை அறிந்துகொள்வதற்கான இலகுவான பரிசோதனைகளும் இருக்கின்றன. சிறுநீர் பரிசோதனை, கற்களை கண்டறிவதற்கான ஸ்கேன் பரிசோதனைகளினூடாக கற்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதையும் அறிந்துகொள்ளக்கூடியதாகும்.

பரம்பரையில் இல்லாமல் புதிதாக நீரிழிவு நோய் ஏற்படுமாக இருந்தால் சிறுநீரகக் கல் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். 40 வயதுக்கு மேல் தொடர்ச்சியான மருத்துவ பரிசோதனைகளினூடாகவும் இதனை கண்டறிய முடியும். அதேபோன்று இரத்த அழுத்தம் அல்லது வேறு காரணங்களால் சிறுநீரகம் செயலிழந்து பின்னர் சிறுநீரில் குமிழிகள் வெளியேறுவதும் அறிகுறிகளாக இருக்கின்றன. (இவ்வாறு நீர்க்குமிழிகள் வெளியேறுவதானது இரத்தத்திலுள்ள புரதம் வெளியேற்றப்படுகின்றதாகக்கொள்ளப்படுகிறது. அதாவது சிறுநீரகம் உடலிலுள்ள நல்ல பொருட்களை வடி கட்டாமல் வெளியேற்றுகின்றன).

கற்கள் தோற்றம் பெற்றிருக்கும்போது நுண்ணுயிர்களால் தொற்று ஏற்பட்டு அதன்காரணமாக காய்ச்சல், உடல் பலவீனமடைகிறது.

எனவே, போதுமனளவு நீர் அருந்துவதனூடாக சிறுநீரகக் கல் தோற்றம் பெறாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாந்தோட்டையிலுள்ள நீர் அதிக கனிய செரிமானம் கொண்ட வன்நீராக இருக்கிறது. அந்தப் பிரதேசங்களிலுள்ளவர்கள் போத்தலில் அடைக்கப்பட்ட நல்ல நீரை அருந்துவது பொருத்தமானதாக இருக்கும். அதேபோன்று குளிர்பானங்கள் அருந்துவதை குறைப்பது அவசியமாகும்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)




# ★ தீவிரமாகும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள்

# ★ உயர்மட்ட உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து கரிசனை

# ★ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்க ஏற்பாடு

நாட்டில் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள் தீவிரமாக அதிகரித்து வருவதால் ஆடிப்போயிருக்கிறது அரசு.

இப்படி இடம்பெற்ற குற்றச்செயல்கள் அனைத்தும் பாதுகாப்புப் படையினருடன் தொடர்புபட்டதாகவே இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இந்தச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தும் ஆயுதங்களை ஒத்த ஆயுதங்களாகவே இருப்பது அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து அன்றையதினம் மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஜனாதிபதி அநுர கண்டிப்பான கருத்துகளைத் தெரிவித்துள்ளார். உடனடியாக சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துமாறு அவர் பணித்துள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டியினரின் இந்தச் செயற்பாடுகள் பாதுகாப்புத் துறையினருக்கும் பெரும்



சவால்மிக்கதாக அமைந்துள்ளது. நீதிமன்றத்துக்குள்ளே வந்து துப்பாக்கிச்சூட்டை நடத்துகிறார்களென்றால் முக்கிய பிரமுகர்களுக்கும் அப்படி இலக்கு வைக்கப்படலாமென்று அரச புலனாய்வுத்துறை கருதுவதால் அரச மற்றும் பாதுகாப்புத்துறை உயர்மட்டங்களில் பாதுகாப்பு வியூகங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் உயர்மட்டப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளுக்கு உச்சகட்ட பாதுகாப்பு வழங்குவது, முக்கியமான அரசியல் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது உட்பட்ட பல விடயங்களை உடனடியாக மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வெள்ளிக்கிழமை அமர்வின் இடையில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பல்வேறு தடவைகள் தன்னிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தான் பதில் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் தலா 2 உத்தியோகத்தர்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விசேட அறிவித்தலை பதில் பொலிஸ் மா அதிபர் வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளார்.

## மஹிந்தானந்த இல்லத்தில் கூட்டம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் பலரும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் இல்லத்தில் கடந்த வாரம் சந்தித்துக் கொண்டனர். மஹிந்தானந்தவின் ஏற்பாட்டில் தடல்புடலாக விருந்துபசாரமொன்று இடம்பெற்றது. இங்கு உற்சாகப் பானங்களை அருந்திய அரசியல் பிரமுகர்கள் ஒன்றுபட்டு அரசியல் செய்யவேண்டியதன் அவசியம் பற்றி பேசிக்கொண்டனர்.

## அதானிக்குப் பதில் யார் ?

இந்திய தொழிலதிபர் அதானியின் காற்றாலை மின்திட்டம் மீளப்பெறப்பட்டுள்ளதால் காற்றாலை மின்திட்டமொன்றை இலங்கைக்கு வழங்க சீனாவின் நிறுவனமொன்று முயற்சிகளை எடுத்து வருகிறது. நேரடியாக சீனா இதில் சம்பந்தப்படாத வகையில் முதலீட்டை செய்ய திட்டங்கள் வகுக்கப்படுவதாகத் தகவல்.

எவ்வாறாயினும், இந்தியாவால் மீளப்பெறப்பட்ட முதலீட்டுக்குப் பதிலாக சீன முதலீட்டை உள்வாங்கினால் புதுடில்லியின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதால் அது தொடர்பில் அரச மேல்மட்டத்தில் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் சீனாவின் இன விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பௌ ஜு கொழும்பு வந்துள்ளார். அவரும் அவரது குழுவினரும் வடக்கிலும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை அரசின் இன விவகாரக் கையாளுகை தொடர்பாக இலங்கையோடு உறவாடி, கருத்துப் பரிமாறி, சில செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நோக்கத்தோடுதான் சீன நாட்டின் இன விவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்தார் எனக் கூறப்படுகிறது.

## அமெரிக்கத் தூதுவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையில் விசேட சந்திப்பு

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று வியாழன் (20) பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இருவருக்குமிடையிலான இந்தப் பிரத்தியேக சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது. இதன்போது முக்கியமான விடயங்கள் பேசப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து இருவரும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டதாக அறியமுடிந்தது.

## செம்மணியில் மற்றொரு மனிதப்புதைகுழி?

யாழ்ப்பாணம், அரியாலையில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பகுதியை யாழ்ப்பாண நீதவானும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியும் கடந்த வியாழன் பார்வையிட்டனர்.

அரியாலை, சித்துபாத்தி இந்து மயான பகுதியில் மின் தகன மேடை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, இந்த மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நீதவான் ஏ.ஆனந்தராஜா, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி செ.பிரணவன் ஆகியோர் அங்கு சென்று பார்வையிட்டனர்.

இந்த விவகாரத்தில் அடுத்த கட்டமாக, அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகுமென அறிய முடிகிறது.

சித்துபாத்தி இந்து மயானத்தின் முன்னைய எல்லைக்கு வெளியே உள்ள பகுதியிலேயே தற்போது இந்த மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மயானத்துக்கு பின்பக்கமாக உள்ள காணி அண்மையிலேயே தமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகவும் அதிலேயே தற்போது மின்தகன எரியூட்டி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் மயான நிர்வாகத்தினர் குறிப்பிடுகிறார்கள்.

இதுவரை மயானம் இருந்த எல்லைக்கு வெளியில் எந்த மனித எச்சங்களையும் எரிக்கவோ புதைக்கவோ இல்லையென்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தப் பின்னணியில், மீட்கப்படும் மனித எச்சங்கள் மற்றொரு மனிதப் புதைகுழியின் தோற்றுவாயா என்ற அச்சம் எழுந்துள்ளது.

## இதற்குக் காரணங்கள் சில உள்ளன

முதலாவது: செம்மணி ஏற்கனவே மனிதப் புதைகுழிக்காக அறியப்பட்ட பகுதி. கிருஷாந்தி உள்ளிட்ட பலர் அங்கு கொன்று புதைக்கப்பட்டிருந்தனர். செம்மணியில் அமைந்திருந்த இராணுவ முகாமுக்கு நெருக்கமான பகுதியிலேயே தற்போதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டாவது: தற்போது மீட்கப்படும் எலும்புக்கூடுகள் நில மட்டத்திலிருந்து இரண்டடி ஆழத்திலேயே மீட்கப்பட்டுள்ளன. மயானத்தில் அடக்கம் செய்யப்படும் சடலங்கள் இரண்டடி ஆழத்தில் அடக்கம் செய்யப்படுவதில்லை. எலும்புக்கூடுகள் நிலமட்டத்திலிருந்து இரண்டடி ஆழத்திலிருந்து மீட்கப்பட்டன. இந்த எலும்புக்கூடுகள் சமயச்சடங்குகளின் பின்னர் முறைப்படி அடக்கம் செய்யப்பட்ட உடல்கள் அல்ல என்ற வலுவான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்தச் சடலங்கள் அசாதாரண சூழலுடன தொடர்புபட்டவை என்பது ஊகிக்க முடிகிறது. அது என்ன அசாதாரண சூழல் மனிதப் புதைகுழியா அல்லது போரில் உயிரிழந்த ஒரு தரப்பினதா என்ற பல கேள்விகள் உள்ளன. அரசாங்கம் இது தொடர்பில் ஆராய விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென தமிழர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

## அர்ச்சுனா எம்.பி. தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்துக்கு

பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனாவின் நடத்தை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக தன்னால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையை சபையில் முன்வைப்பதாக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன வெள்ளிக்கிழமை (21) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

குழுக்களின் பிரதித் தவிசாளரான (திருமதி) ஹேமாலி வீரசேகர தலைமையில் விஜித ஹேரத் மற்றும் ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குவதாக சபாநாயகர் அறிவித்தார். அத்துடன், இந்த அறிக்கையானது, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களால் அவர்களது பாதுகாப்புத் தொடர்பான கோரிக்கைகள் பற்றியும் சபாநாயகர் அறிவித்தல் மேற்கொண்டார். அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களால் அவர்களது பாதுகாப்புத் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அடிக்கடி தனக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து பரிசீலனைசெய்ததன் பின்னர், அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபருக்கு அக்கோரிக்கைகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.


## கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

COMMERCIAL CREDIT

மாபெரும் முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் ஏலம்

### 2025 பிப்ரவரி மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை

தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல் எனும் முகவரியில் காலை 10.00 மணி முதல்

முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் சுமார் 156

| முச்சக்கரவண்டிகள் | | | |
|---|---|---|---|
| SP-JH | - 7XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| SP-HY | - 2XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| SP-JZ | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| SP-JF | - 1XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| SP-GN | - 3XXX | BAJAJ 2 STROKE | 2001 |
| WP-GU | - 1XXX | BAJAJ 2 STROKE | 2002 |
| SP-YZ | - 7XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| WP-QB | - 9XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| SG-GV | - 1XXX | BAJAJ 2 STROKE | 2002 |
| SP-QB | - 6XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| SG-HS | - 0XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-QL | - 1XXX | PIAGGIO APE | 2007 |
| WP-QP | - 4XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| WP-QT | - 0XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| WP-QV | - 4XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| SP-JF | - 5XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-QT | - 8XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| WP-HJ | - 0XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| 204 | - 6XXX | BAJAJ 2 STROKE | 1998 |
| WP-QW | - 2XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-AAL | - 3XXX | BAJAJ 4 STROKE | 2013 |
| CP-QH | - 9XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-JV | - 5XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| CP-QS | - 9XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-QZ | - 0XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| NW-QJ | - 5XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-QX | - 0XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QX | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QZ | - 7XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QL | - 4XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| NC-QF | - 8XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| WP-QO | - 7XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| WP-AAC | - 9XXX | TVS KING | 2012 |
| WP-QD | - 7XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| EP-AAS | - 2XXX | BAJAJ 4 STROKE | 2014 |
| EP-YO | - 9XXX | TVS KING | 2011 |
| WP-JM | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-AAX | - 3XXX | BAJAJ 4 STROKE | 2014 |
| WP-HK | - 6XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-QM | - 0XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| WP-AAY | - 0XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| WP-QF | - 1XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-QV | - 3XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| EP-ABF | - 0XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| SG-YY | - 0XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| CP-JG | - 7XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-JZ | - 0XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| UP-QP | - 4XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| WP-JV | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-AAA | - 7XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| CP-YB | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-AAH | - 0XXX | BAJAJ 4 STROKE | 2013 |
| CP-QE | - 8XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| NP-YU | - 8XXX | TVS KING | 2011 |
| NP-JX | - 3XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-QV | - 6XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| WP-YB | - 2XXX | TVS KING | 2010 |
| NC-QR | - 3XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| NW-QE | - 4XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-QO | - 7XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QX | - 9XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QH | - 3XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-YB | - 5XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QU | - 2XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-QO | - 8XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-GH | - 1XXX | BAJAJ 2 STROKE | 2001 |
| WP-QF | - 5XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| WP-HG | -7XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-QB | - 0XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-QE | - 8XXX | BAJAJ 2 STROKE | 2006 |

| மோட்டார் சைக்கிள் | | | |
|---|---|---|---|
| SP-BDQ | - 1XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| SP-BGR | - 0XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| SP-BCG | - 9XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| NC-BGB | - 7XXX | BAJAJ PULSAR 160 NS | 2017 |
| EP-BEJ | - 2XXX | TVS APACHE RTR 180 | 2016 |
| WP-MC | - 6XXX | BAJAJ DISCOVER 125 ES | 2005 |
| UP-WV | - 1XXX | TVS APACHE 150 | 2011 |

| மோட்டார் சைக்கிள் | | | |
|---|---|---|---|
| NP-BGC | - 7XXX | BAJAJ DISCOVER 125 | 2017 |
| SG-BDZ | - 2XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| SG-BAZ | - 9XXX | BAJAJ PULSAR 150CC | 2014 |
| SG-BAH | - 5XXX | HERO HUNK | 2012 |
| SG-BHI | - 5XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| SG-BID | - 5XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| SG-BIE | - 6XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| WP-BDX | - 1XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-BDN | - 4XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| NP-BEP | - 4XXX | HONDA HORNET | 2016 |
| EP-BEP | - 2XXX | BAJAJ PULSAR 150CC | 2016 |
| EP-BHQ | - 6XXX | HONDA GRAZIA APPS | 2019 |
| EP-BJD | - 9XXX | SENARO GN 125 | 2023 |
| UP-BDR | - 9XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| NW-BDB | - 0XXX | HERO XTREME SPORTS | 2015 |
| NW-BEA | - 4XXX | BAJAJ PULSAR 150CC | 2016 |
| EP-BDB | - 8XXX | BAJAJ PLATINA | 2015 |
| WP-BFQ | - 0XXX | HERO MAESTRO EDGE | 2017 |
| SP-BBG | - 7XXX | BAJAJ DISCOVER 100 M | 2014 |
| NC-BCX | - 6XXX | BAJAJ PULSAR 135 LS | 2015 |
| NC-BJA | - 8XXX | HERO APRILIA | 2020 |
| CP-JD | - 5XXX | BAJAJ PULSAR 150CC | 2004 |
| CP-TV | - 2XXX | BAJAJ PULSAR 150CC | 2007 |
| EP-BJG | - 7XXX | RANOMOTO GN 125 | 2023 |
| WP-XW | - 9XXX | BAJAJ PULSAR 180 DTSI | 2012 |
| WP-BAV | - 2XXX | BAJAJ PULSAR 135 LS | 2014 |
| WP-BBB | - 7XXX | BAJAJ DISCOVER DTS SI | 2013 |
| WP-BGZ | - 1XXX | BAJAJ PULSAR 200 NS | 2018 |
| WP-BJB | - 1XXX | RANOMOTO SWEETY DOUBLE POWER | 2020 |
| WP-BFD | - 4XXX | HERO HF DELUXE | 2016 |
| CP-BJG | - 9XXX | TVS NTORQ | 2024 |
| NW-BEZ | - 0XXX | BAJAJ CT 100 | 2017 |
| WP-BFX | - 3XXX | YAMAHA RAY ZR | 2017 |
| NW-BBP | - 8XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| NW-BEG | - 0XXX | TVS WEGO | 2016 |
| EP-BHA | - 1XXX | BAJAJ V12 | 2018 |
| CP-BJC | - 8XXX | TVS NTORQ | 2022 |
| WP-BJH | - 0XXX | TVS NTORQ | 2024 |
| UP-BAC | - 8XXX | BAJAJ DISCOVER DTS SI | 2013 |
| UP-BDO | - 1XXX | HERO DASH VX | 2016 |
| EP-BEZ | - 4XXX | TVS APACHE RTR 200 | 2017 |
| UP-BAT | - 1XXX | BAJAJ PLATINA | 2014 |
| UP-XV | - 9XXX | HERO HONDA PLEASURE | 2012 |
| UP-VV | - 2XXX | BAJAJ DISCOVER DTSI | 2010 |
| SP-WC | - 2XXX | BAJAJ PULSAR 135 LS | 2010 |
| WP-BDF | - 0XXX | BAJAJ PULSAR 200 NS | 2015 |
| WP-XI | - 6XXX | BAJAJ PULSAR 180 DTSI | 2012 |
| WP-BFV | - 2XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BEH | - 2XXX | HERO HUNK | 2016 |
| SG-UW | - 7XXX | BAJAJ PULSAR 200 DTSI | 2008 |
| NW-BFV | - 5XXX | YAMAHA RAY ZR | 2017 |
| CP-BBK | - 5XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| NP-BEE | - 1XXX | BAJAJ PULSAR 150 NS | 2016 |
| NP-BCL | - 2XXX | BAJAJ DISCOVER 125 M | 2015 |
| NP-WW | - 0XXX | HERO HONDA PASSION PRO | 2011 |
| UP-XK | - 8XXX | TVS SCOOTY STREAK | 2012 |
| WP-BDY | - 6XXX | HERO DASH VX | 2016 |
| SG-BAC | - 2XXX | TVS FLAME | 2012 |
| NC-BHS | - 5XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| NC-VY | - 4XXX | BAJAJ PULSAR 135 LS | 2010 |
| NW-BAN | - 9XXX | HONDA ACTIVA | 2016 |
| NP-BFO | - 8XXX | BAJAJ PULSAR 200 NS | 2017 |
| CP-BBE | - 7XXX | YAMAHA FZ S | 2014 |
| CP-BAR | - 9XXX | HERO PLEASURE | 2013 |
| NW-BHA | - 3XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| EP-BAJ | - 6XXX | BAJAJ PULSAR 150CC | 2013 |
| NW-BEC | - 6XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| CP-BDS | - 1XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| CP-XT | - 3XXX | BAJAJ PULSAR 150CC | 2012 |
| EP-BAL | - 0XXX | BAJAJ PULSAR 135 LS | 2013 |
| EP-BDV | - 9XXX | BAJAJ PULSAR 150CC | 2016 |
| EP-BHS | - 9XXX | TVS NTORQ | 2019 |
| NC-BEC | - 0XXX | YAMAHA RAY ZR | 2016 |
| NC-BAU | - 2XXX | BAJAJ PULSAR 135 LS | 2013 |
| EP-MV | - 1XXX | BAJAJ PULSAR 150CC | 2006 |
| NC-WO | - 2XXX | YAMAHA FZ S | 2011 |
| WP-XS | - 9XXX | HERO HONDA PLEASURE | 2012 |
| WP-BAT | - 8XXX | BAJAJ DISCOVER 125 | 2014 |
| WP-BGB | - 6XXX | HERO MAESTRO EDGE | 2017 |

வாகன பரிசீலனை : பிப்ரவரி 24ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை ஏலம் நடைபெறும் இடம் தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல். தொடர்புகளுக்கு : 0112 000 000

வாகன விற்பனைக்கான நிபந்தனைகள்

- உள்நுழைவு : ஒருவர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.1,500/- யும் மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ.10,000/- யும் வைப்புத்தொகையாக ஏலம் இடம்பெறும் தினத்தில் செலுத்த வேண்டும்.
- பணக் கொடுப்பனவு : மீளளிக்கப்படாத ஆரம்ப வைப்பு வாகன பெறுமதியிலிருந்து 25% ஆகும். ஏலம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் வாகனத்தை கொண்டு செல்வதற்கு 75% மீதிப்பணத்தை 2025 பெப்ரவரி மாதம் 28, மார்ச் 01 மற்றும் 03ஆம் திகதிகளில் பி.ப 4.00 மணி வரையில் கீழ்க்காணும் எமது வாகன வளாகத்தில் செலுத்த வேண்டும்.
- வாகன வளாகம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ. தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்.
- ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் லிமிடெட். தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்
- எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து நீக்குவதற்கான உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலம் விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

## ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம

ஒரு நாடு - ஒரு ஏல விற்பனையாளர்

133 வருட சேவைக்காலத்தின் கொண்டாட்டம்

www.sandslanka.com

பிரதான காரியாலயம். - 24, டொரின்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 0812 227 593 பெக்ஸ் : 0812 224 371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர காரியாலயம். - 6A, பெயார்பீல்ட் கார்ட்ன்ஸ், கொழும்பு 08.
தொலைபேசி : 011 2 671 467, 2 671 468 பெக்ஸ் : 011 2 671 469
மின்னஞ்சல் : schokman@samera1892.com

# மக்களுக்கான வரவு– செலவுத் திட்டம்

அக்கினியான்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டத்தை நிதியமைச்சர் என்ற பொறுப்பிலுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி சமர்ப்பணம் செய்த விடயம் சகல மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோல் வரவு-செலவுத்திட்டத்தை நிதியமைச்சர்கள் சமர்ப்பிக்க வரும்போது ஏற்படுத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள், ஆருடங்கள் கடந்த காலங்களில் அட்டகாசமாக இருக்கும். இம்முறை அந்த ஆடம்பரங்கள் எதுவுமில்லாமல் மிக அமைதியான முறையில் மிகக் கச்சிதமாக வாசிக்கப்பட்டமை அனைவரது கவனத்தையும் ஒரு திசைக்குக் கொண்டு வந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கன்னி வரவு-செலவுத்திட்டமானது நாட்டுக்கு நன்மை தரக்கூடிய பல முக்கிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டதாகவும் நிலையான அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைத்தரம், தேசியப் பார்வை ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டதாக இருந்தமை முக்கியமான அவதானிப்பாகும். அதிலும் குறிப்பாக, வடக்கு, கிழக்கு மக்களைக் கவனத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பது கவனத்துக்குரியதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும். என்றுமே இல்லாதவாறு கல்வி மேம்பாட்டுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வரலாற்று முக்கியம் வாய்ந்த செய்தியாகும். வழமையாக கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக யுத்தம், பந்தோபஸ்து என்பவை முதன்மைப்படுத்தப்பட்டு பாதுகாப்புக்கான செலவினங்கள் உச்சப்படுத்தப்பட்டிருந்தது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்பும் அந்த கைங்கரியத்தையே முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்தன.

அந்த நிலைக்கு முடிவு கட்டப்பட்டு கல்விக்கு முதலிடம் அளித்திருப்பது நாட்டின் எதிர்காலத்துக்கான பொருளாதார மற்றும் தேசிய வளர்ச்சிக்கான அடியிடுதலாகக் கொள்ள முடியும். உதாரணமாக, முன்பள்ளிச் சிறார்களின் அபிவிருத்தி மற்றும் போசனையை அதிகரிக்க 1000 மில்லியன் ரூபாவும் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப பராய அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்திக்கு 80 மில்லியன் ரூபாவும் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு 1000 மில்லியன் ரூபாவாகவும் பாடசாலைகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த 1000 மில்லியன் ரூபாவும் கல்வித்துறைக்கான தேசிய திட்டத்தை தயாரிக்க 500 மில்லியன் ரூபாவும் தரம் 5 புலமைப்பரீட்சை கல்வி உதவுதொகையாக 1000 மில்லியன் ரூபாவும் விளையாட்டுத்துறை, சத்துணவு 10,000 மில்லியனுமென இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் கல்விக்கென முன்னுரிமை அளித்திருப்பது நாட்டின் நிலையான மூலதன அபிவிருத்திக்கும் மனித மூலதன அபிவிருத்திக்கும் மிக நீண்டகால தூர நோக்கில் ஒதுக்கியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த கவனத்தைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கோட்டாபய அரசாங்கம் வீழ்த்தப்பட்டபின் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியபோது, 2024ஆம் ஆண்டு நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் திட்டமென பிரஸ்தாபித்தபோதும் மக்கள் அதை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு அதை ஏற்றுக்கொண்டிருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் அல்லது பொதுத் தேர்தலில் ஒரு சாதகமான நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். குறித்த இந்த வரவு-செலவுத்திட்டத்தில் காணக்கூடிய மிக முக்கியமான இன்னொரு அம்சம் வடக்கு, கிழக்கு அபிவிருத்தியின் மீதும் அப்பிரதேச மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மீதும் அதிக கவனம் செலுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகப் பார்க்கப்படுகிறது. அது தொடர்பில் இக்கட்டுரையில் அதிக கவனம் செலுத்த முனைகிறேன்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கென 5000 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு வட்டுவாகல் பால அபிவிருத்திக்கு 1000 மில்லியன் என 6000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கியிருப்பது ஒரு தேசிய ஒற்றுமைக்கான குறிகாட்டியாக எடுத்துக் கொள்ளலாம்.



வடக்கு, கிழக்கு மீள் குடியேற்றம் மற்றும் வீட்டு நிர்மாணத்துக்கு 7,500 மில்லியன் ரூபாவும் வடக்கு மாகாண தெங்கு அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபாவும் யாழ்ப்பாண நூலக அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபாவும் எனப் பாரிய தொகை வடக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மிக நீண்ட காலத்துக்குப் பின் குறிப்பாக, யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னும் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட்ட தன்மையே காணப்பட்டது. முன்னைய ஜனாதிபதிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவோமெனப் பகிரங்கமாகக் கூறியபோதும் அதை அவர்கள் செய்யவில்லை. ஆனால், ஆட்சி மாற்றம் நிகழ்ந்ததன்பேரில் ஆட்சி ஏறியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு, கிழக்கு, மலையக மக்களை கவனத்திற்கொண்டு ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவோமாக இருந்தால், வடக்கு, கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்காக இந்த வரவு-செலவுத்திட்டத்தில் 2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக வடமராட்சிக் கிராமங்கள், தென்மராட்சி கிராமங்கள் மற்றும் வலிகாமம் கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற கிராமங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் குடிபெயர்ந்தார்கள். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னும் இவர்களின் காணிகள், பூமிகள் விடுவிக்கப்படாமலும் இராணுவ முகாம்களாகவும் கையகப்படுத்தப்பட்ட நிலபுலங்களாகவும் இருந்துவரும் நிலையில், முறையான மீள் குடியேற்றம் இன்னும் முடிவுறாத நிலையில், இந்த வீடற்ற குடும்பங்களுக்கு மீள் குடியேற ஒதுக்கப்பட்டிருப்பது யானைப்பசிக்கு சோளப் பொரி கொடுத்ததுபோல் இருந்தாலும் மிகச் சின்னளவான ஆறுதலை கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மீள் குடியேற்றம் தொடர்பான தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்துக்கு 1500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது போதாத எண்ணிக்கை கொண்டது. யுத்தம் முடிவடைந்தபோதும், இன்னும் அங்கு மீள் குடியேற்றம் முடிவுறவில்லை. சுமார் 17 ஆயிரம் குடும்பங்கள் இன்னும் மீள்குடியேற்றப்படாமல் இருக்கிறார்கள். எனவே, இந்த அரசு வடபுலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர 5 ஆயிரம் மில்லியனை ஒதுக்கவேண்டுமெனக் கோருகிறோமென மஸ்தான் தெரிவித்திருந்தார்.

யாழ். நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கணினி மயப்படுத்தல் மற்றும் அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த நிதி பயன்படுத்தப்படவிருக்கிறதெனவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் அயலிலுள்ள தீவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உட்பட்ட ஏராளமான வாசகர்கள் யாழ். நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்த மாணவர்கள் நலனுக்காக நூலகத்தின் உட்கட்டமைப்பு போதுமான அளவு மேம்படுத்தப்படவில்லை. எனவே, இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

யாழ். நூலகத்துக்கென்று மிகப் பிரசித்தமான வரலாறு இருந்துவந்துள்ளது. 1953ஆம் ஆண்டு இந்நூலகம் அத்திவார மிடப்பட்டு 1959ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவுபெற்றது. சுமார் 97,000க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் 1800 ஆண்டுகளுக்கு முன்னுள்ள பழம் பெரும் ஓலைச்சுவடிகள், பத்திரிகைகள் கொண்ட இந்த நூலகம் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி விஷமிகளால் எரித்து சாம்பலாக்கப்பட்டது. தென்னிலங்கையைச் சேர்ந்த அமைச்சர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் மிகத் திட்டமிட்ட முறையில் இந்த நூலகம் எரிக்கப்பட்டது. மாவட்ட சபைத் தேர்தலை மையமாகக்கொண்டு நாசமாக்கப்பட்ட இந்த நூலகத்தின் எரிப்பு கொடுமை ஓர் இனத்தின் கலாசாரம் மற்றும் மொழிக்கான அழிப்பு என உலகத்தவர்களால் கண்டிக்கப்பட்டது.

மிக முக்கியத்துவம் வாய்ந்த இன்னொரு செயலாக முல்லைத்தீவிலுள்ள வட்டுவாகல் பாலத்தைப் புனரமைப்பதற்கு 1000 மில்லியன் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வட்டுவாகல் பாலம் முல்லைத்தீவிலுள்ள மிக முக்கியமான பாதை இணைப்புகளில் பிரதான இடம் வகிக்கும் பாலமாகும். மிக நீண்டகாலமாக இது கவனிக்கப்படாத நிலையில் இதனைப் புனரமைக்க இப்பகுதி மக்கள் பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்துள்ளபோதும் அது எந்த அரசாங்கத்தாலும் கவனிக்கப்படாத நிலையிலேயே புதிய அரசாங்கமானது இதற்கான நிதியை ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை தாங்கி நிற்கும் ஒரு சமூகமாக கடந்த 200 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் உயிர்நாடிகளாக விளங்குபவர்கள் மலையக மக்கள். மலையக மக்களில் சுமார் 90 வீதமானவர்கள் தொழிலாளர்களாவர். இவர்களில் 85 வீதமானோர் தோட்டத் தொழிலாளர்கள். 1931ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின்படி மலையகத் தமிழர்களின் மொத்த தொகை 8,18,500 ஆகும். இதில் சுமார் 86 வீதம் தோட்டத் தொழிலாளர்களாவர். ஏனையோரில் தோட்டத்துறையைச் சாராத, துறைமுகத் தொழிலாளர்கள், அரசாங்க ஊழியர்கள், உள்ளூராட்சி ஊழியர்கள், சிறு வர்த்தக கடன் வழங்குவோர், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், சிந்து மார்வாரி, கடைச்சிப்பந்திகள், எழுதுவினைஞர்கள், சிறு நில உடைமையாளர்கள், விவசாய தொழிலாளர்கள் ஆகியோர் அடங்குவர். அண்மைய ஆய்வுகளின்படி இந்நிலை இன்னும் மாறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆதாரம் (இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம், ஈழ ஆய்வு நிறுவனம்).

இந்தச் சமூகத்தவர்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக அடிமைகள்போல் பாவனை பண்ணியே சிங்கள அரசாங்கங்கள் நடத்தி வருகிற நிலையிலேயே நீண்ட காலமாக அதிக சிரமங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு இந்தச் சமூகத்தின் வாழ்வாதாரங்கள் இன்னும் சிறந்த வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் முன்னேற்றங்களுக்காக 7583 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வரவு-செலவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 4267 மில்லியன் ரூபாவும் மலையக இளைஞர்களின் வாழ்வாதாரத்தை முன்னிலைப்படுத்தி 2450 மில்லியன் ரூபாவும் மலையக பாடசாலை அபிவிருத்திகளுக்கு 866 மில்லியனும் பெருந்தோட்ட தேயிலை, இறப்பர், தெங்கு, ஆகிய துறைகளில் சுமார் 1.5 மில்லியன் தொழிலாளர்கள் ஈடுபட்டுவரும் நிலையில் அவர்களது வாழ்க்கைத்தரமானது மேலும் மேம்படுத்தப்படவேண்டுமென அரசு கருதுவதனால் அத்துறை சார்ந்த தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் மலையக அபிவிருத்தியில் தனது ஆழமான பார்வையை செலுத்தியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல்வேறு விமர்சனங்கள், கண்டனங்களுக்கு மத்தியில் கிழக்கின் அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் நீண்டகாலமாக அதிக சிரமங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள். இந்த சமூகத்தின் வாழ்வாதாரங்கள் இன்னும் சிறந்த வாழ்க்கைக்கான தரத்தை அடையவில்லை. அதன்பிரகாரம் பின்வரும் முன்னேற்றங்களை ஆதரித்து கல்வி, சுகாதாரம் , விவசாயம், மீன்பிடி சுற்றுலாத்துறை மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் முக்கிய கவனம் செலுத்தி உட்கட்டமைப்பு வாழ்வாதாரம் மேம்பாட்டுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கிழக்கு மாகாணத்துக்கு விரிவான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி அறிவித்துள்ளார். அத்துடன் திருகோணமலை, சீனக்குடா எண்ணெய்க்குதங்கள் 61 ஐ சர்வதேச பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கூற்றை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் மிக கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் தனது கண்டனக் கூற்றில் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்த அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்திருக்கிறது. அப்படியானால் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்தியத் தூதுவரைச் சந்தித்து பிரச்சினையைக் கூறவேண்டும். அதற்காக அவரிடம் கையேந்தவேண்டு மென்று இந்த அரசாங்கம் எதிர்பார்க்கிறதா? கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள், கடந்த தேர்தல்களில் தமது முழுமையான ஆதரவை அரசாங்கத்துக்கு வழங்கினார்கள். அப்படிப்பட்ட எங்களை எங்கு சென்று யாரிடம் நிதி கேட்கச் சொல்கிறீர்கள். இவ்வாறு இந்த அரசாங்கம் நடந்துகொள்வது வெட்கக்கேடான விடயம். நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த ஸ்ரீவர்தன எழுதிய 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாண அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்காமல் எங்களை கையேந்த சொல்கிறார். இந்தத் திட்டத்தை தூக்கி எறியுங்கள் என நிஸாம் கடுமையாகச் சாடியுள்ளார்.

நிஸாம் காரியப்பரின் தார்மீகமான கோபம் நியாயமானதாகும். கடந்து 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் கிழக்கு மாகாணம் பாரிய பாதிப்புக்களை அடைந்துள்ளதென்பது அரசாங்கம் அறியாத ஒன்றல்ல. ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். நூற்றுக்கணக்கான கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன, தீக்கிரையாக்கப்பட்டுள்ளன, ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பற்று பல போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள் சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வாழ்வாதாரமற்று யாசிக்கும் நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். யுத்த கொடுமைகளால் மாற்றுத்திறனாளிகளாக ஆக்கப்பட்டவர்கள் அநேகர். வீடு வாசல்கள்,தோட்டம் துறவுகள் அழிக்கப்பட்ட குடும்பங்கள் அதிகம். இவ்வாறிருக்கும் போது கிழக்கு மக்களின் அபிவிருத்தியில் இன்னொரு நாட்டை யாசிக்கும் நிலைக்கு அரசு வழிகாட்டி நிற்பது பொருத்தமற்ற செயற்பாடு என்பதை பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் மிகக் கச்சிதமாக எடுத்துக் கூறியுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், புதிய அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டமானது ஒரு தேசியப் பார்வையையும் தேசிய அபிவிருத்தியையும் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.எனினும்,பிரதேச வேறுபாடுகள், சமூகவேறுபாடுகளைக் கொண்டதாக இதுதயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தியலைமாற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டுமென்பது மக்களது எதிர்பார்ப்பாக இருக்கலாம். இந்தத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிடுகையில், இந்த வரவு-செலவுத்திட்டமானது இடதுசாரி முலாம் பூசிய வலதுசாரி பஜெட் என்று விமர்சித்துள்ளார். எனவேதான் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் ஏன் இவ்வளவு தொகையை ஒதுக்கியுள்ளீர்கள். இது பாரபட்சமான நடவடிக்கை எனச் சாடியுள்ளார். அவரின் அக்குற்றச்சாட்டு ஓர் இனவாத தன்மையில் கேட்கப்பட்டதே தவிர நியாயம் கொண்டதல்ல. வடக்குக்கான அபிவிருத்திகள் கடந்த நான்கு தசாப்த காலத்துக்கு மேலாக முடக்கப்பட்டதன் காரணமாகவே ஓர் இனப்போர் வெடித்தது என்பதை இனவாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தியின் நியாயமான - நீதியான நடவடிக்கைகளை இலங்கை மக்கள் கைதட்டி வரவேற்கவேண்டியது அவர்களது தேசியக் கடமையாகும்.

---

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சிறுநீரக மாற்று சிகிச்சை – இலங்கையில் நிலைமை

1985 -1986ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே இலங்கையில் சிறுநீரக மாற்று சிகிச்சை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் மாற்று சிகிச்சைகள் குறைந்தளவிலேயே இடம்பெற்றன. ஆனால், தற்போது அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் வருடாந்தம் 300- 400 சிறுநீரக மாற்று சிகிச்சைகள் இடம்பெறுகின்றன. உயிருள்ள ஒருவரிடமிருந்து ஒரு சிறுநீரகத்தைப் பெற்று இன்னுமொருவருக்கு பொருத்துதல், இறந்தவர் ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைப் பெற்று பொருத்தல் என இரண்டுவிதமான சிகிச்சைகளும் இடம்பெறுகின்றன. ஆனால், அரச வைத்தியசாலைகளில் மாத்திரமே இறந்தவர்களின் உடலிலிருந்து சிறுநீரகங்கள் எடுக்கப்பட்டு மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உயிரோடுள்ள ஒருவரிடமிருந்து சிறுநீரகங்களை மாற்றுவது என்றால் மனித திசுக்களின் மாற்றுச் சட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், பணம் பரிமாற்றத்தினூடாக சிறுநீரகத்தைப் பெற்றுக்கொள்வதென்பது தண்டனைக்குரிய குற்றமாகும். உறவினர்கள் அல்லது நண்பர்கள் நன்மை கருதி சிறுநீரகங்களை வழங்கலாம். ஒருவேளை, சிறுநீரகம் கொடுப்பவருக்கு சிறுநீரகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நோய் நிலைமைகள் இருக்குமாக இருந்தால் அவரிடமிருந்து சிறுநீரகங்கள் பெறப்படமாட்டாது. பணப்பரிமாற்றத்தினூடாக சிறுநீரகங்களைப் பெறுவதைத் தடுப்பதற்கு வைத்தியசாலைகளில் நெறிமுறைக் குழுவொன்று இருக்கிறது. அந்தக் குழுவில் இரு தரப்பையும் விசாரித்து சிறுநீரகம் வழங்கும் நபரால் சிறுநீரகம் வழங்க முடியுமா இல்லையா என்பது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு சிபாரிசு செய்யப்பட்டு பின்னர் சுகாதார அமைச்சில் அனுமதி பெறப்பட்டதன் பின்னரே சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒருவேளை இறந்தவரிடமிருந்து சிறுநீரகம் பெறுவதென்றால் அவர் எழுத்துபூர்வமாக ஏதாவது ஒப்புதல் வழங்கியிருந்தால் அதனையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்தோடு, விபத்துகளில் உயிரிழப்பு ஏற்பட்டு அவரிடமிருந்து உடலுறுப்பு நன்கொடைக்கான அட்டை இருந்தால் அதனூடாகவும் சிறுநீரகங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இருந்தபோதும இலங்கையில் சிறுநீரக நன்கொடையாளர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். அதேபோல் இறந்தவர்களிடமிருந்து சிறுநீரகம் பெற்றுக்கொள்ளும் செயற்பாடும் 10 சதவீதத்துக்குக் குறைவாகவே இருக்கிறது. அதற்குக் காரணம், இதுதொடர்பில் மக்கள் மாத்தியில் விழிப்புணர்வு போதாமையாகும். அவ்வாறே மாற்று சிகிச்சைக்காக உட்கட்டமைப்பு வசதிகளும் இலங்கையில் குறைவு.

### சிறுவர்களுக்கு எவ்வாறு சிறுநீரகம் சார்ந்த நோய்கள் தோற்றம் பெறுகின்றன?

வயது வந்தவர்களுடன் ஒப்பிடும்போது சிறுவர்களுக்கு சிறுநீரகம் சார்ந்த நோய்கள் ஏற்படுவது குறைந்த எண்ணிக்கையிலேயே பதிவாகின்றன. ஆனால், சிறுவர்களுக்கும் இந்தச் சிறுநீரகம் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. சிறுவர்களுக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்கு பரம்பரை நோய்கள், பிறக்கும்போதே ஏற்படுகின்ற நோய் நிலைமைகள் என்பனவே பிரதான காரணமாக இருக்கின்றன. சிறுவர்களுக்கு நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் என்பன ஏற்படுகின்றன. சிறுநீரக அழற்சி, சத்திர சிகிச்சை நோய்கள் காரணமாகவும் சிறுவர்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுகிறார்கள். பிறக்கும்போதே சிறுநீர்க் குழாயில் ஏற்படும் சிறுநீரக அடைப்பும் சிறுவர்களுக்கு குறித்த நோயை ஏற்படுத்துகிறது. அதனை அடையாளங்கண்டவுடன் உடனடியாக அதற்கு சிகிச்சை அளித்தால் அதனை முற்றாகக் குணப்படுத்திவிடலாம்.

# IMF ஐ திருப்திப்படுத்துவதாக அமைகின்றதா வரவு-செலவுத் திட்டம்?



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் 2025.02.17ஆம் திகதி ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுரகுமார திசாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் 18 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை நடைபெற்று 25ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறவிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து 2025.02.27ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 21ஆம் திகதிவரை வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் நடைபெறும். 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும். இந்தக் குழுநிலை விவாதத்தின்போது ஒவ்வொரு அமைச்சுக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான விரிவான விவாதம் நடைபெறும். விவாதம் நடைபெறும் நாட்களில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் விவாதத்தில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின்படி மொத்த அரச வருமானம் 04 இலட்சத்து 99 ஆயிரம் கோடி (4,990 பில்லியன்) ரூபாவாகும். மொத்த உத்தேச செலவினம் 07 இலட்சத்து 19 ஆயிரம் கோடி (7,190 பில்லியன்) ரூபாவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதன்படி வருமானத்தை விட செலவினம் அதிகரித்திருப்பதால் துண்டு விழும் தொகை 02 இலட்சத்து 20 ஆயிரம் கோடி (2,200 பில்லியன்) ரூபா என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தத் துண்டு விழும் தொகையை ஈடுசெய்வது அரசாங்கத்துக்குப் பாரிய சவாலாக அமையவிருக்கின்றது. இந்தப் பற்றாக்குறையை எவ்வாறு ஈடுசெய்வதென்று பார்க்கும்போது உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதா அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்பெறுவதா என்ற பாரிய கேள்விக்கு விடை காண வேண்டும். அத்துடன், உள்நாட்டில் வரிவிதிப்புகளை அதிகரிப்பதும் இன்னுமொரு வழியிலான தீர்வாகும்.

இவ்வருடம் வரிகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற உத்தேச வருமானம் 04 இலட்சத்து 59 ஆயிரம் கோடி (4,590 பில்லியன்) ரூபாவாகும். ஆனாலும் 2024ஆம் ஆண்டு பொதுமக்களின் வரிகள் மூலமான மொத்த வருமானமாகப் பெறப்பட்ட தொகை 03 இலட்சத்து 70 ஆயிரத்து 500 கோடி (3,705 பில்லியன்) ரூபாவாகும். அவ்வாறாயின், இந்த வருடம் பொதுமக்கள் மீது மேலும் வரிச் சுமை அதிகமாக சுமத்தப்பட்டிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

இந்நிலையில், இந்த வரவு-செலவுத் திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட தயாரிக்கப்பட்டதாகும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தியிருக்கின்றனர். சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே உடன்பட்டுள்ள கடன் தொகையில் மேலும் 33 கோடி 30 இலட்சம் அமெரிக்க டொலர்களை (10100 கோடி ரூபா) மூன்றாவது அங்கீகாரத்தின் பின்னர் விடுவிக்கவிருக்கின்றது. அது தொடர்பாக ஆராய்வதற்கான நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 2025.02.28ஆம் திகதி இலங்கை வரவிருக்கின்றனர்.

இதற்கிடையில் அரச செலவினமாக



ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குள்ளிருந்து அரசாங்கம் சம்பள அதிகரிப்புகள், மானிய உதவிகள், நாடளாவிய அடிப்படையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்று அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை மூலதனச் செலவினங்களாகவும் மீண்டெழும் செலவினங்களாகவும் குறிக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 15,750 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், பெருந்தோட்டத் துறை மற்றும் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக 758 கோடியே 30 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த சம்பளம் 1,700 ரூபா வழங்கப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறே பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு 5000 ரூபாவிலிருந்து 7000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் வறிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் நிதியுதவி 750 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக அதிகரிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்காக 3500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. வடக்கில் கணிசமான அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறாக பல முக்கியமான துறைகளில் அதிகரிப்பும் தேவையான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அவையே அரச செலவினமாகக் காட்டப்படுகின்றது.

இந்நிலையில், அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பில் முன்னைய ஆட்சிக்காலத்தில் - குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டுவந்த அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை (அலவன்ஸ்) அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்படும் கொடுப்பனவு தொகையைக் கழித்துப் பார்த்தால் 15,750 ரூபா சம்பள உயர்வில் கிடைக்கவிருப்பது 8,250 ரூபாவாகும். ஆனாலும் அந்தத் தொகையில் இந்த வருடம் சம்பளத்தில் கிடைக்கவிருப்பது 5,975 ரூபாவாகும். மேலும் 1337 ரூபா 2026ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்தும் 2027ஆம் ஆண்டும் வழங்கப்படும். அத்துடன், 250 ரூபா முதல் 450 ரூபா வரையான வருடாந்த சம்பள அதிகரிப்பொன்றும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் அதிகரிக்கப்பட்டுள்ள இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்க 32,500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறாக பார்க்கின்றபோது இந்த அரசாங்கம் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றாலும் வரவு-செலவுத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்கின்றபோது தெளிவாக புரிந்திருக்கும் விடயம் முன்னைய அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தை சரிசெய்து கட்டியெழுப்பவும் தொடரான பொருளாதார அபிவிருத்தியை அடையவும் எந்தளவுக்கு சிரமங்களை அனுபவித்திருக்கும் என்று.

துண்டு விழும் தொகை இரண்டு இலட்சம் கோடி ரூபாவைத் தாண்டியிருக்கின்றது. ஆனாலும் இந்த அரசாங்கம் பதவிக்கு வர முன்னர் கூறிய விடயங்களை மீட்டுப் பார்த்தால் இந்த நாடு பொருளாதார அபிவிருத்தியடையவில்லை அல்லது அதற்கான அடித்தளம் இடப்படவில்லை. நாடு சூறையாடப்பட்டுவிட்டது, 75 வருடங்களாக நாடு நாசமாக்கப்பட்டிருக் கின்றது என்றெல்லாம் குற்றச்சாட்டுகளை முன்வைத்து முன்னைய ஆட்சியாளர்கள் குறித்து வெறுப்பும் வைராக்கியமும் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் எதனையும் காண முடியவில்லை.

2005ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையான மஹிந்தவின் ஆட்சிக் காலப் பகுதியில் நாடு சூறையாடப்பட்டது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

---



# வக்பு சபைக்கு அழுத்தம் வழங்கும் NPP எம்.பிக்கள்

## சாய்ந்தமருது பெரிய பள்ளி நிர்வாகிகள் அரசியல்வாதியின் நேரடி சிபாரிசில் நியமனம்

ரிப்தி அலி

நாட்டிலுள்ள பள்ளிவாசல்களைக் கண்காணிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள வக்பு சபைக்கு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக அழுத்தம் வழங்கி வருகின்ற விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

குறிப்பாக, பள்ளிவாசல்களுக்குப் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்திலேயே இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களை பள்ளிவாசலின் நிர்வாகிகளாக நியமிக்கும் நோக்கிலேயே இந்த அழுத்தம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. இதனூடாக பள்ளிவாசல்களையும் தங்களின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான ஏ.ஆதம்பாவாவின் அழுத்தம் காரணமாக சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலுக்கு அவரால் சிபாரிசு செய்யப்பட்ட 42 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக வக்பு சபையால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.


கடந்த சில வருடங்களாக இப்பள்ளி வாசலுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்யுமாறு வக்பு சபையால் பல தடவைகள் இப்பள்ளி வாசலின் பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த அறிவுறுத்தல் தொடர்பில் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர்களிடமிருந்து எந்தவித பதிலும் வக்பு சபைக்கு கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில், இப்பள்ளி வாசலின் நிர்வாகம் தொடர்பில் வக்பு சபைக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இவற்றைக் கருத்திற்கொண்டு இப்பள்ளிவாசலுக்கு புதிய நிர்வாகமொன்றை உடனடியாக தெரிவுசெய்யுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வக்பு சபை அறிவுறுத் தியது.

இதற்கமைய, எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இந்தப் பள்ளி வாசலுக்கான நிர்வாகத் தெரிவை இரகசிய வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அலா அஹமட்டினால் கடந்த 10ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். அஷீக்குக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்காக இப்பள்ளிவாசலின் 99 மரைக்கார்களுக்கு அழைப்பு விடுக்குமாறு



வேண்டப்பட்டிருந்தது. எனினும், இந்த விடயம் தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை வரை எந்தவொரு மரைக்காருக்கும் பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட வில்லை என்ற விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், தெரிவுக்குத் தேவை யான அனைத்து நடவடிக்கைகளும் எடுக் கப்பட்டுள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் கடந்த 17ஆம் திகதி வக்பு சபைக்கு அறிவித் திருந்தார்.

இவ்வாறான நிலையில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.அஷீகினால் கடந்த 11ஆம் திகதி திணைக்களப் பணிப் பாளருக்கு கடிதமொன்று அனுப்பப் பட்டுள்ளது.


சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான ஏ.ஆதம்பாவாவால் இப்பள்ளி வாசலுக்கு 42 பேரைக்கொண்ட நிர்வாக மொன்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிபாரிசுக் கடிதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் தேசியப்பட்டியல் பாராளு மன்ற உறுப்பினர் ஆதம்பாவாவின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும் இடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கடந்த வருடம் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெற்ற இந்தப் பள்ளிவாசலின் நிர்வாகத் தெரிவின் போதும் செயலாளர் தெரிவின் போதும் பிரச்சினை ஏற்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற சர்ச்சைகள் ரமழான் மாதத்தில் இடம்பெறுவதைத் தவிர்க்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினரால் சிபாரிசு செய்யப்பட்ட பட்டியலை இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்களாக நியமிக்குமாறு சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எவ்.இஸானாவாலும் சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப் பினர் ஆதம்பாவாவால் சிபாரிசு செய்யப் பட்டுள்ள நிர்வாக சபை உறுப்பினர் பட்டி யலுக்கு உடனடியாக நியமனம் வழங்கு மாறு சமய விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி வக்பு சபைக்கு வாய்மொழி மூலம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரின் சபைப் பத்திரம், சாய்ந்தமருது பிரதேச செயலாளரின் கடிதம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவால் சிபாரிசு செய்யப்பட்ட 42 பேரும் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலின்



இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்களாக வக்பு சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 2026ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி வரையான ஒரு வருட காலப் பகுதிக்கு செயற்படுவதற்கு இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ஜமாத்தார் மற்றும் மரைக்காயர் ஆகியோரின் பட்டியலைத் தயாரித்தல், பள்ளிவாசல் தொடர்பான கணக்குகளை இறுதிசெய்தல், பள்ளிவாசலுக்குச் சொந்தமான சொத்து களைப் பட்டியல்படுத்தல், கடந்த கால நடைமுறைகளின் அடிப்படையில் பள்ளிவாசலுக்கான யாப்பை தயாரித்தல், மற்றும் கடந்த கால நடைமுறைகளின் அடிப்படையில் புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்தல் ஆகிய ஐந்து விசேட உத்தரவுகள் புதிய நிர்வாகத்துக்கு வக்பு சபையால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் அரசியலின் நிலைமாறு காலமும்

# சேகு இஸ்ஸதீனும்

பாகம்: 08

கங்கத்தியப்பா

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் பேரினவாத அரசுக்கு எதிரான மூர்க்கமான பக்கத்தை தமிழ்த் தரப்பினரிடம் இரண்டு கோட்பாடுகள் வளர்த்துவிட்டன. பூகோள அரசியலின் எதிர் எதிர் முகாம்களிலிருந்த அந்த இரண்டு கோட்பாடுகளும் இந்திய விஸ்தரிப்புவாதமும் மேற்கத்தேய விடுதலை இறையியலுமாகும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையிலும் இலங்கையின் இனப் பிரச்சினையில் ஆர்வங்கொண்ட புலமையாளர்கள் இப்பாகுபாட்டை இன்றுவரை அடையாளம் காட்டுகின்றனர். இந்தக் கோட்பாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினையை தத்தம் நலன்களுக்கு ஏற்புடையதாகவும் தங்களுக்கு இடையிலேயான போட்டியின் ஆடுகளமாகவும் ஆக்கிக்கொண்டன.

ஆர்.பிரேமதாசவை ஜனாதிபதி சிம்மாசனத்தில் அமர்த்துவதற்கு இந்திய விஸ்தரிப்புவாதம் இராஜதந்திர நாகரிகங்களுக்கப்பால் பல படிகள் தாண்டிச் சென்று பல்வேறு காய்களை நகர்த்தியமை பரம இரகசியமாகும்.

***மேற்கத்தேய (western) நாடுகள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் இலங்கை தொடர்பான நகர்வுகளை சில கட்டங்களில் நெடுங்கயிற்றில் விட்டிருந்தன. அதில் முக்கியமான ஒரு கட்டம்தான் பிரேமதாசவின் ஜனாதிபதித் தேர்தலாகும். ஆனாலும், விடுதலை இறையியல் இதனை உன்னிப்பாகக் கவனித்தே வந்தது. இந்திய விஸ்தரிப்புவாதத்தின் எல்லை கடந்த இராஜதந்திர நகர்வுகளுக்கு அடிப்படைக் காரணம், தமிழ் மக்களுக்காக தான் இணைத்து உருவாக்கிய வடக்கு, கிழக்கு மாகாண சபையை பலமிக்க சபையாக மாற்றி தமிழ் ஈழம் என்ற கோட்பாட்டுக்குச் சமாந்திரமான ஒரு மாற்றீடாக அதனைக் கொண்டுவருவதாகும்.***

அப்போது ஜே.ஆரால் குடியுரிமை பறிக்கப்பட்டிருந்த சிறிமாவோ அணியை விட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையே எதிர்த்த - ஆனால், ஜனாதிபதிக் கனவில் திளைத்துள்ள பிரேமதாசவையே அப்பதவிக்கு அவர்களுக்கு வாய்ப்பானவராகக் கருதியது. அதற்கான காரணம் பிரேமதாச என்ற இந்த எறும்பின் தலைமீது அந்தப் பனம்பழத்தை ஒரு பாரிய சுமையாக்கி அவரை இலகுவாக வளைத்துப் போடலாம் என்றும் இந்திய விஸ்தரிப்புவாதம் நம்பியது.

ஏனென்றால், அவர் மேட்டுக்குடியைச் சாராத ஒருவராகவும் அதேவேளை, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவைப்போல சிங்கள தேசியவாதத்தைப் பூரணமாக ஜீரணிக்காத ஒருவராகவும் திகழ்ந்தார் என்பதாகும். (எனினும் அவர்களின் கனவை சரியாக ஓர் ஆண்டு முடிவதற்குள்ளேயே பிரேமதாச சுக்குநூறாக்கிவிட்டார் என்பது வேறு கதை.)

இணைந்த வடக்கு - கிழக்கு (மாநிலம்) ஈழத்துக்கு மாற்றீடானது என்ற கற்பிதத்தைத் தமிழ் மக்களின் புலக்காட்சிக்குத் தென்படவைப்பது இந்திய விஸ்தரிப்புவாதத்தின் Action Plan ஆக இருந்தது. அதன்மூலம் தமிழ் ஈழக் கனவை மாத்திரமே தாரக மந்திரமாகக் கொண்டவர்களும் அதேவேளை, இந்திய விஸ்தரிப்புவாதத்திடம் மாமிசப் பகை கொண்ட எதிரிகளுமான விடுதலைப் புலிகளை மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்த 'ஸீரோ' அமைப்பாக மாற்றி விடுவதாகும். இவ்வாறுதான் இந்திய விஸ்தரிப்புவாதம் செயற்படுகின்றதென்றே புலிகளும் கூட பூரணமாக நம்பினர்.

இதனை இன்னும் கூர்மையாகச் சொன்னால் என்றோ ஒருநாள் புலிகள் ஈழத்தை வென்றெடுப்பர் என்ற கற்பிதம் ஈழம் சார்ந்தவர்களிடம் மட்டுமன்றி, அதனை எதிர்த்தவர்கள் மத்தியிலும் அப்போது இருந்தது. இது காலம் தாழ்த்தித்தான் நிகழ்ந்துவிடக் கூடியது என்றாலும் கூட அதன் உடனடி விளைவாக முதலாவது வீழ்த்தப்படும் விக்கெட் இந்திய ஒன்றியத்தின் இருப்பு என்பதுதான்.

தமிழ் ஈழம் அதிகாரம் பெற்ற நாடாக மாறியவுடன், ஈழக் கோட்பாட்டு நெறியாளர்களின் அடுத்த கனவு தெற்காசிய வரலாற்றின் பொற்காலத்தில் நிகழ்ந்த அகன்ற தமிழ் ஈழம் அல்லது அகன்ற தமிழ்நாடு என்பதாகும். இதனை ஈழத்தைவிட தமிழகத்தின் முன்னோடிகளும் சர்வதேசம் தழுவிய அகன்ற தமிழ் ஈழ அமைப்புகளும் தங்களது இலக்காகக்கொண்டிருந்தன.

***அகன்ற தமிழ் ஈழம் என்பது தமிழ் இனத்தின் ஆத்மாவுடன் ஒன்றித்த சோழர் காலத்தின் வீரயுகக் கனவுகளுடன் (Heroic Dreams) சம்பந்தப்பட்டது. இன்னும் கூர்மையாகச் சொன்னால், ஆகக் குறைந்தது கேரளாவை உள்ளடக்கிய இந்தியாவின் தென் மாநிலங்கள் அத்தனையையும் உள்வாங்கிய திராவிட எண்ணக் கருவுடன் அது ஒன்றிக் கலந்ததாகும். ஈழக் கனவு சாத்தியமானால் பூகோள அரசியலில் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் மற்றும் விடுதலை இறையியல் கோட்பாட்டினர் உள்ளிட்ட இந்திய யூனியனின் எதிரிகள் சகலரும் தங்கள் கத்தியையும் புத்தியையும் இதில் கூர்மைப் படுத்துவர்.***

ஏற்கனவே காஷ்மீர், பஞ்சாப் முதலிய மாநிலங்கள் அரை நூற்றாண்டு வரலாற்றைக்கொண்ட தனிநாட்டுக் கருதுகோளை முன்னிறுத்திய போராட்டங்களைத் தொடங்கிவிட்டன. இவை எல்லாமே தமிழ் ஈழ எண்ணக்கருவினூடாக வளரக் காத்திருக்கும் கருத்து வளமுள்ள கோட்பாடுகளாகும்.

ஒட்டுமொத்தமாக இவை அனைத்துக்கும் சாவு மணி அடிக்கவும் தமிழ் ஈழ தனிநாட்டுக் கனவை புஸ்வாணமாக்கவும் இந்தியா வைத்திருந்த ஒற்றை ஏவுகணை தான் வடக்கு மாகாணத்துடன் கிழக்கையும் ஒன்றாக இணைக்கும் செயற்றிட்டமாகும். அது அப்போதைய நிலையில் முஸ்லிம்களுக்கான இறுதிச் சடங்கு என்பது இந்தியாவுக்குத் தெரியாததும் அல்ல.

***ஆக, தமிழ் ஈழம் என்ற கோட்பாடு இந்திய யூனியன் என்ற எண்ணக்கருவின் முதலாவது எறிகணை என்பதை இந்திய விஸ்தரிப்புவாதம் நன்கு தெரிந்து வைத்திருந்தது. எனவேதான் தமிழ் ஈழம் என்ற எண்ணக்கருவை எவ்வித சமரசங்களுக்கும் இடம் கொடாதவகையில் கடைப்பிடிக்கும் விடுதலைப் புலிகளை தலையைத் தடவித் தனிமைப்படுத்த இந்திய விஸ்தரிப்புவாதம் கங்கணங்கட்டியது.***

இதற்கு அடிப்படைக் காரணம், விடுதலைப் புலிகள் இடதுசாரி மார்க்ஸிச கோட்பாட்டாளர்களாக அல்லாது மேற்கத்தேய பூகோள அரசியல் மற்றும் விடுதலை இறையியல் என்பனவற்றின் ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ள இயக்கமாக இருந்தனர் என்பதுமாகும்.

புலிகளின் ஆத்மா மேற்கத்தேய விடுதலை இறையியல் கோட்பாடுகளை எவ்விதத்திலும் புறந்தள்ளக்கூடிய நிலைமையில் இருக்கவில்லை. அத்துடன், மார்க்ஸிய வரலாற்றுப் பொருண்மை முதல்வாதம் மற்றும் இந்திய விஸ்தரிப்புவாதம் என்பனவற்றுடன் சமரசம் செய்யவும் எவ்வகையிலும் அது அனுமதிக்க மாட்டாது. இதனால் இந்தியாவின் தமிழ்நாடு போன்ற அளவுக்காவது சுய ஆட்சிப்பாங்கான ஒரு கருத்தியல் சமரசத்துக்கு இடம்கொடுத்த EPRLF, TELO, PLOTE முதலிய இயக்கங்களைப் பலப்படுத்தி இந்தக் கருத்தியலை சாத்தியப்படுத்தும் எல்லா வழிகளையும் இந்தியா 'ஹலால்' ஆக்குவதில் ஆவல் கொண்டிருந்தது.

இதன் முதற்படியாகவே தங்களின் எல்லைகளையும் மீறி வளர்ந்துவிட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை வளைத்துப்போட்டு தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திட்டத்தை அமுலாக்கும் வழிவகைகள் பற்றி இந்திய விஸ்தரிப்புவாதம் சிந்தித்தது. அதற்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரிஷிமூலத்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர். உலோகாதாய அடிப்படையில் ஒரு தத்துவத்தின் ரிஷிமூலம் என்பதே நிதிமூலத்துடன் சம்பந்தப்பட்டதாகும் என அவர்கள் ஏற்கனவே கணித்து வைத்திருந்தனர். அப்படியாயின், அந்த நிதியீட்ட முகவர்கள் மூலம் அதை இலகுவாக சாதிக்கலாம் என்பது சராசரி அறிவுக்கும் புலப்படக்கூடியதே.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய அவர்கள் அனுமானம் அது வளைகுடா நாடுகளின் பருத்த நிதிமூலத்துடன் வஹாபிய மற்றும் தௌஹீதிய இலட்சியங்களின் கருத்தியல் வயல்வெளியாக இயங்குகின்றது என்பதே. அப்போது முஸ்லிம் காங்கிரஸுடன் ஒரு முகத்தாட்சினையான சமரசம் இருந்தாலும் ஷீஆ இஸம் கூட அதன் எதிர்முகாமில் வைத்தே முஸ்லிம் காங்கிரஸைக் கணித்திருந்தது.

ஆனால், இதுவரைக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வளைகுடா நாடுகளின் அமுதசுரபி மூலமான பாரிய நிதி ஈட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சர்வதேச உளவுத்தளங்களிலிருந்து எவ்வித ஆதாரமும் RAW வுக்குக் கிடைக்கவில்லை. தனது செயலகத்தை நிர்மாணிக்க கொழும்பில் ஒரு காணித்துண்டைப் பெற ஒரு வளைகுடா நாட்டின் தலைமை உதவி செய்ததான அரசல் புரசலான கதை மட்டுமே தவிர, வேறெந்த நிதியுதவியையும் வளைகுடாவில் இருந்தோ அல்லது மேற்கத்தேய நிதி ஆதாரங்களில் இருந்தோ முஸ்லிம் காங்கிரஸ் பெறவில்லை என்பதை தெட்டத் தெளிவாக இந்திய விஸ்தரிப்புவாதம் இறுதியில் கண்டுபிடித்தது. இதனால் வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற கருத்தியலுக்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறும் வழிவகைகள் பற்றி இந்திய விஸ்தரிப்புவாதம் கவனம் செலுத்தியது.





இந்தக் கட்டத்தில் எம்.ஐ.எம். முஹிடீனின் கருத்தியல் வரைபில் உருவான வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியலகு என்ற கோரிக்கை மக்கள் மயமாகிக்கொண்டு வந்தது. இதற்கான வெகுஜன பிரபல்யத்தை (popularity) 'முஸ்லிம் தேசம்' என்று கோட்பாட்டை மையப்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் காத்திரமாக ஏற்படுத்தி வந்தது. இதில் சேகு இஸ்ஸதீனின் பங்கு தத்துவார்த்த அடிப்படையிலும் வெகுஜன பிரபல்ய அடிப்படையிலும் மிக அளப்பரியது.

ஆக, இந்தக் கோட்பாட்டு இடைவெளிக்குள் புகுந்து முஸ்லிம் காங்கிரஸின் மூலம் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள இந்திய விஸ்தரிப்புவாதம் முயற்சித்தது. அதற்கு TELO, PLOTE முதலியன தங்களின் பாரிய எதிர்ப்பை வன்முறையாலும் மற்றும் உண்டான ஏனைய வழிமுறைகளாலும் வெளியிட்டன. இவர்களுள் சாணக்கிய ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் பலம்பெற்று இருந்தவர்களும் மாக்ஸிய அறிவியலின் இனத்துவ வகிபாகங்கள் பற்றிய ஓரளவு தெளிவுடனும் இருந்தவர்களான EPRLF இயக்கத்தினர் அடக்கி வாசித்தனர் .

EPRLFஇன் மௌன வாசிப்புக்கு அவர்களின் மாகாண ஆட்சியின் சர்வதேச அங்கீகாரத்துக்கும் பிரபல்யத்துக்கும் முஸ்லிம்களின் தயவு தாட்சண்யம் அவசியமென்பது ஓர் இரகசியமான காரணமாகவும் இருக்கலாம்.

***எனினும், பத்மநாபாவின் பரந்த அரசியல் பார்வையும் வரதராஜப்பெருமாளின் கூர்மையான மாக்ஸியம்சார் இனத்துவப் (Ethnic) பார்வையும் இந்த மெத்தனமான போக்குக்குக் காரணமாக அமைந்திருந்தன என்பது சிலருக்கு மாத்திரம் தெரியும். எது எப்படியிருந்தாலும் முஸ்லிம் காங்கிரஸின் 'தனியலகு' பற்றிய கருத்தியலின் தத்துவார்த்தப் பாரம் அரசியல் கோட்பாட்டாளர்களை மட்டுமன்றி ஏனைய ஈழ கருத்தியலாளர்கள் அனைவரையும் கண்களை மேலும் மேலும் விழித்துப் பார்க்கச் செய்தன. அதன் முக்கிய பங்காளி சேகு இஸ்ஸதீன் என்பவராவார்.***

அவர்களின் ஆய்வின்படி சேகு இஸ்ஸதீனின் கருத்தியல் மடைமாற்றமே இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கு அதிகம் தேவையாக இருந்தது. தலைவர் அஷ்ரப் கட்சியின் ஆரம்ப காலங்களில் வஹ்ஹாபிய்ய அல்லது தௌஹீதிய்ய சிந்தனை வயப்பட்டவர் என்ற கணிப்பு ஏற்கனவே RAW வுக்கு இருந்தது. ஏனெனில், இஸ்லாமியப் பயிற்சி மன்றம் அதனூடாக ஜமாஅத்தே இஸ்லாமி என்பவற்றின் கோட்பாடுகள் அஷ்ரப்பின் இளமைக்காலங்களில் செல்வாக்குச் செலுத்திற்று. குறித்த இயக்கங்கள் தம் அரசியல் குறித்த பார்வையில் மௌதூதியின் கோட்பாடுகளில் வாரப்பாடுள்ளவர்கள். மேலும், சூபிஸ மரபுகளில் கவர்ச்சி அறவே அற்றவர்கள். சூபிஸ அடிப்படைவாதம் என்பது பற்றிய அக்கறையை விட தௌஹீதிய்ய சிந்தனைப் பள்ளியின் தாக்கத்தில் அவை பரிச்சயமாக இருந்தவை என்பதே பொதுவான கணிப்பாகும்.

சேகு இஸ்ஸதீன் சூபிஸ அடிப்படையிலான தத்துவார்த்தத் தெளிவுள்ளவர். வெறும் 'கபுறு வணங்கி'யாகப் பார்க்கப்படாத 'வேதாந்தி' அவர். இதனால் முதலில் சூபிஸ சிந்தனைப் பெருவெளியூடாக சஞ்சரிக்கக்கூடிய கவர்ச்சியை இஸ்ஸதீனின் மூலமாக நகர்த்தலாம் என்று RAW நம்பியது. அதனால் அஷ்ரப்பை விடவும் இஸ்ஸதீனின் கருத்தியல் கவர்ச்சியிலேயே அவர்கள் ஆர்வப்பட்டனர். (பிற்காலங்களில் சுஜப் ஆலிம் போன்ற ஆங்கிலப் புலமை வாய்ந்த சூபித்துவ அறிஞர்களால் அஷ்ரப் வழிநடத்தப்பட இஸ்ஸதீன் விதைத்த விதைகளே காரணமாக அமைந்தன என்ற உண்மையை இந்தக் கட்டத்தில் போட்டு நாம் குழப்பிக்கொள்ளத் தேவையில்லை.)

இலங்கையின் இனப்பிரச்சினை தீயாகப் பரவ முன்னர் குறிப்பிடப்பட்ட இரண்டு கோட்பாடுகளும் தங்களுக்கிடையே தத்தம் மூளைகள் என்னும் கொலை வாள்களை சுழற்றியவண்ணமே இருந்தன. அதற்கு பின்வரும் சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்திய விஸ்தரிப்புவாதத்தால் ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாக ஆக்கப்பட்டதை மேற்கத்தேய வல்லரசுகள் அந்தக் கணத்தில் தலையீடு செய்யாவிட்டாலும் விடுதலை இறையியல் வீணே பார்த்துக் கொண்டு இருக்கவில்லை என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இந்திய விஸ்தரிப்புவாதம் இராஜதந்திர வரம்புகளையெல்லாம் மீறி களத்தில் இறங்கி ஒருவரை ஜனாதிபதி ஆசனத்தில் அமர்த்தும்போது வெறும் சாதாரண 'கொடுக்கல் வாங்கல்' விடயங்களா உடன்பாடு காணப்பட்டிருக்கும்? இந்தியா தனது அகன்ற இந்தியக்கனவின் அடித்தளம், தனது பூகோள அரசியல் முன்னெடுப்புகளுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பனவற்றை எதிர்கொள்ளும்போது ஏற்படக் கூடிய பிராந்திய அசௌகரியங்கள் முதலியன பற்றிய வாக்குறுதிகளை நிச்சயம் பெற்றிருக்கும்.

எனினும், பிரேமதாச உடனடியாக தனது ஆரம்ப நிலைப்பாட்டுக்கு முற்றும் எதிரானதொரு நிலைப்பாட்டையே பின்னர் எடுத்திருந்தார். அதாவது, இந்திய விஸ்தரிப்புவாதத்தை முற்றாகப் புறந்தள்ளி விடுதலை இறையியலாளர்களின் ஆலோசனைக்கமைவாக இயங்கும் மேற்கத்தேய இராஜதந்திரிகளின் முன்னிலையில் கால் மடித்து உட்கார்ந்து பாடம் கேட்கவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். அந்தக் கட்டத்தில் இந்திய விஸ்தரிப்புவாதம் வடக்கு, கிழக்கு மாகாண சபையில் காட்டிய கோமாளித்தனங்கள் சர்வதேச அரங்கில் நகைப்புக்கிடமான அம்சங்களாகவே தோற்றம் காட்டின.

17.05.1989இல் சம்மாந்துறை முழுவதும் தீக்கிரையாக்கப்பட்ட IPKFஇன் மிலேச்சத்தனம் ஒரு பிரதான காரணமாகக் காட்டப்பட்டு IPKF உடனடியாக வெளியேறிவிடல் வேண்டுமென பிரேமதாச உத்தரவிடவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்தது. IPKF செய்த கொடூரம் சர்வதேச அரங்கில் இந்திய விஸ்தரிப்புவாதத்தை கொடூரமான கோமாளிகளாக்கிற்று. அதனால் அந்தப் போக்கு அஷ்ரப்பையும் சேகு இஸ்ஸதீனையும் பாரிய சங்கடத்துக்கு உள்ளாக்கிற்று.

அதுமட்டுமன்றி, இந்திய சார்பு இயக்கங்களினதும் CVF என வரதராஜப் பெருமாளால் நிறுவப்பட்ட மாகாணப் பொலிஸ் படையினரினதும் அனுசரணையில் முஸ்லிம் பிரதேசங்களில் அவர்களுக்கு எதிராக நடைபெறும் உள்ளூர்க் கலவரங்களை அடக்க IPKF இனால் இலங்கைப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் காரைதீவு விவசாய உற்பத்தி நிலையத்தில் ஒரு பொலிஸ் பயிற்சி நிலையம் நடத்தப்பட்டது. அது பேயாப் பெருமழை பெய்த 17.11.1989 அன்று நள்ளிரவு சுற்றி வளைக்கப்பட்டது. அப்போது அங்கிருந்த முஸ்லிம் பொலிஸ் பயிற்சியாளர்களை வேறாக தனிமைப்படுத்தி அவர்களை நிராயுதபாணிகளாக்கிச் சுட்டுக்கொன்றனர் சில பயங்கரவாதிகள். இவை அனைத்தும் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் எதிரிகளால் IPKF வெளியேற்றப்படல் வேண்டுமென பிரேமதாசவுக்கு வற்புறுத்தலைக் கொடுத்தன.

அஷ்ரப்பும் இஸ்ஸதீனும் IPKF வெளியேறும்போது அந்தப் பாதுகாப்பு வெற்றிடத்தை (Security Vacuum)) நிரப்புவது யார் என்ற வினாக்களைத் தொடுத்தனர். அந்தக் கட்டத்தில் புலிகளுக்கும் பிரேமதாசவுக்கும் பல்வேறு விடயதானங்களில் உடன்பாடு காணப்பட்டு முடிந்துவிட்டது. புலிகளும் அரசும் சேர்ந்து 'தேனிலவு' கொண்டாடிக் கொண்டிருந்ததாக அஷ்ரப்பும் சேகு இஸ்ஸதீனும் குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்த காலத்திலேயே IPKF வெளியேறிவிட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் உயிர் வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கும் குற்றச் சாட்டை வைத்து அதன் உறுப்பினர்கள் ஒவ்வொன்றாகக் கருவறுக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அஷ்ரப், சேகு இஸ்ஸதீன், ஹசன் அலி ஆகியோரின் உயிர்கள் இலக்கு வைக்கப்பட்டிருந்தன.

அதேவேளை, வரதராஜப் பெருமாளால் 01.03.1990 இல் செய்யப்பட்ட Unilataral Declaration of Indipendant State of Tamil Eelam என்ற பிரகடனத்துக்கு ஆதரவு தராமைக்காக அவர்களின் பக்கத்திலிருந்தும் பாரிய அச்சுறுத்தல்கள் வெளிவந்தவண்ணம் இருந்தன. குறிப்பாக, சேகு இஸ்ஸதீன் மற்றும் ஹசன் அலி முதலியோரின் உயிர்களைக் காவுகொள்ள பல்வேறு சதித்திட்டங்களும் திருகோணமலையிலிருந்து வெளிப்படையாக உலாவின.

***இருந்தும் எந்தத் தயக்கமுமின்றி IPKF இன் வெளியேற்றத்தின் பின்னால் ஏற்படும் நாட்டினதும் முஸ்லிம்களினதும் security vecuum நிலைமைக்கு அரசு பொறுப்பேற்கும் வரை IPKF வெளியேறக் கூடாது என அஷ்ரப் பாராளுமன்றத்தில் முழங்கினார். அதாவது, இந்தப் பாதுகாப்பு இடைவெளியை புலிகள் நிரப்பிவிட அரசு அனுமதிக்கக் கூடாது என்பதே இதன் பின்னாலுள்ள தர்க்கமாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதனைப் புத்திக்கூர்மையுடன் புரிந்துகொள்ளும் நிதானம் முஸ்லிம் வெகுசனத்திடம் அன்று இருக்கவில்லை.***

இந்த நிலைப்பாடானது முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அதற்குப் பாரிய எதிர் விமர்சனங்களைத் தோற்றுவித்தது. அஷ்ரப்பை சேகு இஸ்ஸதீன் பிழையாக வழிநடத்துகின்றார்; முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு விடை காண்பதை விட IPKF இன் இருப்பே முக்கியமாக இருப்பதாக மக்கள் வெளிப்படையாகவே பேசத் தொடங்கினர். அதுமட்டுமன்றி, TELO, PLOTE, EPRLF ஆகியோர் உருவாக்கி வைத்திருக்கும் பாதுகாப்புப் பற்றிய அச்சத்தால் விடுதலைப் புலிகளே தங்களுக்கான பாதுகாப்புக் கேடயம் என்ற கருத்தை அரச சார்பு முஸ்லிம்கள் பேசத் தொடங்கினர். இது கிழக்கில் புலிகளுக்கு ஓர் ஆத்ம பலத்தை வழங்கிற்று.

இது இப்படியிருக்க, இலங்கையின் அரசியல் வானில் ஓர் அரசியலமைப்பு நெருக்கடிநிலை (Constitutional Crisis) உருவாகிக்கொண்டு வந்தது. பிரேமதாசவின் அதே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களான லலித் அத்துலத் முதலி மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோர் பிரேமதாசவுக்கு எதிராக ஒரு புத்தம் புதிய குற்றப்பத்திரத்தை (impeachment) 1991 செப்டெம்பரில் தயாரித்து பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பித்துவிட்டனர். இலங்கை எங்கணும் பிரேமதாச பற்றிய அதிருப்தி அலைகள் வேகமாக வீசின. இதனால் பிரேமதாசவுக்கு உதவ முடியாத நிலையில் அஷ்ரப்பும் இஸ்ஸதீனும் கைகளைப் பிசைந்துகொண்டனர்.

இந்தக் கட்டத்திலும் கூட இந்தியா பிரேமதாசவுக்கு உதவிசெய்து அவரை வளைத்துப் போட்டுக்கொள்ளவே விரும்பிற்று. அதனால் இது பற்றிய இரகசியங்களை ஆய்ந்து அறிக்கை செய்ய தலைமை ஊடகவியலாளர் ஒருவரை இலங்கைக்கு இந்தியா அனுப்பியிருந்தது. அந்த ஊடகவியலாளர் பின்னாட்களில் 'ஆகாஷவாணி'யின் தலைமைப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். அந்த அளவுக்கு இந்த விடயத்தை இந்தியா சீரியஸாக எடுத்துக்கொண்டது.

முதன் முதலில் அந்த ஊடகரின் கைக்கு இம்பீச்மென்ட் இன் மூலப்பிரதி (லலித் அத்துலத் முதலியின் கையால் திருத்தம் செய்யப்பட்ட பிரதி) கிடைத்தது. FAX பெரும்பாலும் இலங்கையில் புழக்கத்துக்கு வராத அந்தக் காலத்தில் இலங்கை ரெலிகொம்மின் 'டெலக்ஸ்' கருவி மூலம் இந்தியாவுக்கு அந்தப் பிரதி அனுப்பப்பட்டது. அது மறைமுகமாகப் போட்டோ பிரதி செய்யப்பட்டு நண்பர் ஒருவரால் அஷ்ரப்பின் கைக்குக் கிடைத்தது. அது வரைக்கும் 'இம்பீச்மென்ட்'இன் ஒரு பிரதி பிரேமதாசவுக்குக் கூட கிடைத்திருக்கவில்லை. அது அஷ்ரப்பின் கரம் கிட்டும்போது அருகிலிருந்த இஸ்ஸதீனுடன் விவாதித்து இருவரும் இந்த அரசியலமைப்பு நெருக்கடிக்கான மார்க்கத்தைக் கண்டுபிடித்தனர்.

***உடன் அஷ்ரப் தன்வசம் வைத்திருந்த பிரதியோடு அலரி மாளிகைக்கு விரைந்தார். அஷ்ரப்பின் ஆலோசனையைக் கேட்ட தன் பின்னர் பிரேமதாச இப்பிரச்சினையைத் தீர்க்கும் மார்க்கம் பிடிபடாதிருந்த சொக்ஸி முதலியோரை நள்ளிரவு நேரம் அழைத்து இதற்கான மார்க்கத்தை விபரித்தார். இது யாரின் ஆலோசனை என அவர்கள் வினாத் தொடுத்தனர். அஷ்ரப் என்றதும் அவர்கள் வியப்புடன் வாயில் விரலை வைத்து அப்படியே அதனை ஆமோதித்தனர்.***

உடன் பிரேமதாச கிடுகிடென்று நடவடிக்கை எடுத்து இந்த ஆபத்திலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொண்டார். இதன் முழுவதுமான credit லலித் அத்துலத் முதலியின் சட்டக்கல்லூரி மாணவனாகிய அஷ்ரப்புக்கே கிடைத்தது. அஷ்ரப்பின் கருத்துக்கு ஆதார சுருதியாக இயங்கியவர் சேகு இஸ்ஸதீனேயாவார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

# அரசாங்கத்தின் பாதீடு:

# பொருளாதார மீட்சிக்கான திருப்புமுனை



**இம்தியாஸ் ஹசன்**

இம் மாதம் 17ஆம் திகதி 2025ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் கன்னி வரவு-செலவுத் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு-செலவுத் திட்டம் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் சமூக மாற்றத்துக்கான ஒரு முக்கியமான பாதை வரைபடமாகக் கருதப்படுகிறது. பொருளாதார ஸ்திரமின்மை, அதிக வாழ்க்கைச் செலவு, உற்பத்தித்திறனையும் பொது நலனையும் அதிகரிக்க கொள்கைச் சீர்திருத்தங்களின் தீவிர தேவை ஆகியவற்றுடன் நாடு போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த வரவு-செலவுத் திட்டம் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வெளியாகியுள்ளது.

முன்மொழியப்பட்ட வரவு-செலவுத் திட்டம், உட்கட்டமைப்பு, டிஜிட்டல் மாற்றம், பொது-தனியார் கூட்டாண்மை, கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் சமூக நலன் உள்ளிட்ட வளர்ச்சியின் முக்கிய பகுதிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த வரவு-செலவுத் திட்டம் வெறும் எண்கள் மட்டுமல்ல; போராடும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவும் இது நன்கு கட்டமைக்கப்பட்ட முயற்சியாகும். முன்மொழியப்பட்ட முன்முயற்சிகள், திறம்பட செயற்படுத்தப்பட்டால், ஒரு புதிய பொருளாதார சகாப்தத்துக்கான திருப்புமுனையாக அமையலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் தாக்கம், நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் திறன் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளுடன் அது எவ்வாறு இணைந்துள்ளதென்பதை இந்தக் கட்டுரை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்கிறது.

### பொருளாதார மீட்புக்கும் வளர்ச்சிக்குமான பாதீடு

இந்த வரவு-செலவுத்திட்டத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று முதலீடு சார்ந்த பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்துவதாகும். வருவாய் ஈட்டும் முதலீடுகளுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடவும் முக்கிய தொழில்களில் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்கவும் பொது-தனியார் கூட்டு (PPP) சட்டத்தை அறிமுகப்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதிலும் உள்ளூர் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதிலும் முக்கியமானவை.

### தேசிய தர மேலாண்மை கட்டமைப்பு

இக்கட்டமைப்புக்காக ரூபா 750 மில்லியன் உற்பத்தித்திறன் மற்றும் தரப்படுத் தலை மேம்படுத்துவதற்கு ஒதுக்கப்பட் டுள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு அவசியமாகும். இதற்கிடையில், மின்னணு பொருளாதாரம் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெறுகிறது.

டிஜிட்டல் மாற்றத்துக்கு ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடானது

மின்-பொருளாதார ஆணையம் மற்றும் மின்னணு அடையாள அட்டைகளின் அறிமுகம் ஆகியவை நவீன, தொழில்நுட்பம் சார்ந்த நிதி அமைப்பின் பார்வையைப் பிரதிபலிக்கின்றன. படிப்படியாக பணமதிப்பிழப்புத் திட்டம், பணச் சார்புகளைக் குறைத்தல், சட்ட விரோதப் பரிவர்த்தனைகளைத் தடுப்பது மற்றும் நிதி வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கான நகர்வைக் குறிக்கிறது. இது ஊழலையும் கறுப்புச் சந்தை நடவடிக்கைகளையும் கணிசமாகப் பாதித்து, பொருளாதாரத்தை வலுப்படுத்தும்.

### உட்கட்டமைப்பு மற்றும் வர்த்தகத்தைப் புதுப்பித்தல்

பொருளாதார வளர்ச்சியில் உட்கட்டமைப்பு மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இந்த வரவு-செலவுத் திட்டம் துறைமுகங்கள், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறைக்கான மூலோபாய ஒதுக்கீடுகளைச் செய்கிறது. வெயாங்கொடையில் உள்நாட்டுக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன் துறைமுக அபிவிருத்திக்கு ரூபா 500 மில்லியன் நிதியையும் ஒதுக்கியுள்ளது. இது வர்த்தகத் திறனை மேம்படுத்தி, சர்வதேச வர்த்தகத்துக்கான வலுவான மையமாக இலங்கையை மாற்றும் செயற்பாடாகும். கொழும்புத் துறைமுகத்தின் வடக்கு மேற்கு முனைய அபிவிருத்திகள் மற்றொரு இலட்சிய முயற்சியாகும். அதை செயற்படுத்துவதற்கான யோசனைகளை சேகரிக்க ஒரு மாத கால அவகாசம் உள்ளது. இத்தகைய திட்டங்கள், கொழும்புத் துறைமுகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உயர்தர ஸ்கேனிங் உட்கட்டமைப்பில் ரூபா 1,000 மில்லியன் முதலீடானது, உலகளாவிய வர்த்தகத்தில் இலங்கையின் நிலையைப் பலப்படுத்தும்.

சுற்றுலாத் தலங்களுக்கு புதிய டிஜிட்டல் முறை அறிமுகப்படுத்தப்பட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கைகள் அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிப்பதற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். அதிகளவு ஜப்பானிய நிதியுதவியுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது முனையத்தை நிர்மாணிப்பது நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்தும். இது பிராந்திய ரீதியாக போட்டித்தன்மையை அதிகரிக்கும்.



### பொதுநலன்,சம்பள சீர்திருத்தங்கள்

அரசு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 15,750 ஆக உயர்த்தியிருப்பது பாதீட்டில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளில் ஒன்றாகும். அதிக பணவீக்கத்துடன் போராடும் அரசு ஊழியர்களுக்கு இச்சம்பள அதிகரிப்பு நிதி நிவாரணமளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த ஊதியமாக ரூபா 1,700 சம்பள அதிகரிப்பை வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. இது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கணிசமாக மேம்படுத்த ஏதுவாக அமையும். இந்தத் துறையில் நீண்டகால ஊதியப் பிரச்சினைகளை முன்வைத்துப் போராடும் இம்மக்களுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கும். அதேபோல் வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்ட மலையகச் சமூகங்களை மேம்படுத்துவதற்காக ரூபா 7,583 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரச அபிவிருத்தி வங்கியின் முன்மொழிவு உள்ளூர்த் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் தொடக்க நிறுவனங் களுக்கு ஆதரவளித்து, கடன் வசதிகளை எளிதாக அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கலைஞர்கள் மற்றும் ஊடக வல்லுநர்களுக்கும் படைப்புத் துறையில் உள்ளவர்களுக்கும் சிறந்த வாழ்க்கை நிலைமைகளை உறுதிசெய்யும் வகையில், வீட்டுவசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட வுள்ளது. இந்த நடவடிக்கையானது பொது உரையாடலை வடிவமைப்பதிலும் கலாசார அடையாளத்தைப் பாதுகாப்பதிலும் ஊடகங்கள் மற்றும் கலைகளின் பங்கையும் மேன்மையையும் ஒப்புக்கொள்கிறது.

ஓர் அரிதான - ஆனால், பாராட்டத்தக்க இவ் வரவு-செலவுத்திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியக் காப்பீட்டையும் ரூபா 2,50,000ஆல் குறைக்கப்பட்டுள்ளது. இது நிர்வாகத்தில் அதிகப்படியான சலுகைகளைக் குறைப்பதற்கு ஒரு முன்னுதாரணமாக அமைகிறது. கூடுதலாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் பற்றிய வலுவான செய்தியை அனுப்புகிறது.

### கல்வி மற்றும் சுகாதாரம், சமூக வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு

கல்விக்கான நிதி ஒதுக்கீடு கணிசமான நிதியைப் பெறுகிறது. பல்கலைக்கழக உட்கட்டமைப்புக்காக ரூபா 135 பில்லியனும் பாடசாலை மேம்பாட்டுக்கு ரூபா 1,000 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவு ரூபா 1,500ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உதவித் தொகையும் ரூபா 5,000இலிருந்து ரூபா 7,500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூபா 200 மில்லியன் நிதியானது உயர்தரப் பரீட்சைகளில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு வெளிநாட்டு பட்டப் படிப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர உதவும். இந்த நடவடிக்கையானது பொருளாதார முன்னேற்றத்துக்கு உந்துதலாக திறன்மிக்க மிகவும் திறமையான பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுகாதாரத் துறையில் தோட்ட வைத்தியசாலைகளுக்கான மனிதவளம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உட்பட மருத்துவ சேவைகளுக்கு ரூபா 604 பில்லியன் செலுத்தப்படுகிறது. ரூபா 200 மில்லியன் ஒதுக்கீட்டில் லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் குழந்தைகளுக்கான சர்வதேச தரத்திலான சிகிச்சை மையம் அமைக்கப்படவிருக்கிறது. மூத்த குடிமக்களுக்கான மாதாந்த உதவித்தொகை ரூபா 3,000 முதல் ரூபா 5,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு ரூபா 7,500 இலிருந்து ரூபா 10,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபா 1,000 மில்லியன் திட்டமானது ஆதரவற்ற குழந்தைகளுக்கான நிதியுதவி மட்டுமன்றி, திருமண வயதை அடையும் அநாதைக் குழந்தைகளுக்கு வீடமைக்க திருமண உதவியாக வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது.

### விவசாயம் மற்றும் உரமானியம் ஒரு நிலையான அணுகுமுறை

வரவு-செலவுத்திட்டத்தில் உர மானிய ஒதுக்கீட்டை ரூபா 35,000 மில்லியனாக உயர்த்தி விவசாய பின்னடைவுக்கு முன்னுரிமை அளிக்கிறது. 2024-2025ஆம் ஆண்டு பெரும்போக நெல்லை கொள்முதல் செய்ய 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும் அதேவேளை, ரூபா 500 மில்லியன் பயிர் பல்வகைப்படுத்தலுக்கு (சோயா,கௌபி மற்றும் உருளைக்கிழங்கு உட்பட) உணவு பாதுகாப்பை வலுப்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயனற்ற நிலங்களை மறுசீரமைப்பதில் அரசு முதலீடு செய்து, ஆரம்ப நடவடிக்கைகளுக்காக ரூபா 250 மில்லியன் பணம் தென்னைச் செய்கையை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதி பயிர்களுக்கான சந்தை விரிவாக்கத்துக்கும் தன்னிறைவுக்கான தேவையை வலுப்படுத்த வும் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் 66 எண்ணெய்க் குதங்களை சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து அபிவிருத்திசெய்யும் திட்டமானது ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். புத்திசாலித்தனமாக செயற்படுத்தப்பட்டால், இது இலங்கையை ஒரு பிராந்திய எரிசக்தி மையமாக மாற்றும், வருவாயை அதிகரிக்கும் மற்றும் விலையுயர்ந்த எரிபொருள் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் சிறந்த திட்டமாகும்.

### வரவு-செலவுத் திட்டம் நாட்டை எவ்வாறு மாற்றும்?

இந்த வரவு-செலவுத் திட்டம் இலங்கை யின் நிதி மற்றும் சமூக நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான யதார்த்தமான - ஆனால், இலட்சிய அணுகுமுறையை முன்வைக்கிறது. முன்மொழிவுகள், வேலை உருவாக்கம், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக நலன், நிதிப் பொறுப்புடன் வளர்ச்சியை சமநிலைப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. சுருங்கக்கூறின் - முதலீட்டு உந்துதல் அணுகுமுறையானது அரசாங்க நிலங்களை குத்தகைக்கு விடுவது மற்றும் PPPகளை உருவாக்குவது வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் செயற்பாடாகும். உட்கட்டமைப்பு ஊக்குவிப்பானது, துறைமுகம், விமான நிலையம் மற்றும் டிஜிட்டல் மேம்பாடுகள் ஆகியவை பொருளாதாரத் திறனை அதிகரிக்கும். சம்பளம் மற்றும் நலன்புரி உயர்வுகள், அதிக ஊதியம் மற்றும் சமூக உதவி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும். திறமையான மற்றும் ஆரோக்கியமான மக்களை உருவாக்க கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி பெரும் உதவியாக அமையும். விவசாய மற்றும் எரிசக்தி முதலீடுகளானது விவசாயிகளை ஆதரிப்பது மற்றும் திருகோணமலையின் எண்ணெய் வயல்களை ஆராய்வது நீண்டகால வளர்ச்சியை உறுதிசெய்யும்.

இவை இவ்வாறிருக்க, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் சமர்ப்பிக்கப் பட்ட 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4,990 பில்லியன் வருவாயாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, ரூ. 7,190 பில்லியன் செலவாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக வரவு-செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை ரூபா 2,200 பில்லியன் காணப்படுகின்றது. இந்த இடைவெளியை நிவர்த்திசெய்ய, அரசாங்கம் பல உத்திகளை நம்பியிருக்கலாம். அவற்றில் சில:

01. அரசாங்கம் IMF, உலக வங்கி அல்லது ADB வங்கி போன்றவற்றை நாடலாம். கருவூலப் பத்திரங்கள் மற்றும் பில்கள் மூலம் உள்நாட்டில் கடன் வாங்க முயற்சி செய்யலாம். சீனா, இந்தியா அல்லது பிற கடன் வழங்குநர்களுடன் சாத்தியமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம்.

02. கார்ப்பரேட் மற்றும் தனிநபர் வருமான வரி வீதங்களை உயர்த்தலாம். VAT அதிகரிப்பு அல்லது புதிய வரிகளை அறி முகப்படுத்தலாம். முன்னர் வரி விதிக்கப் படாத துறைகளை இலக்காகக்கொண்டு வரி தளத்தை விரிவுபடுத்துதலையும் எதிர்பார்க்கலாம்.

03. தேவையற்ற பொதுத்துறை செலவினங் களைக் குறைக்கவும் மானியங்கள் மற்றும் நலத்திட்டங்களை குறைக்கவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதனை அரச துறைகளில் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.

04. தனியார்மயமாக்கல் மற்றும் பொது-தனியார் கூட்டாண்மைகள் (PPPs) நஷ்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை (SOEs) விற்பனை செய்ய முன்வரலாம். உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கலாம்.

05. ஏற்றுமதி மற்றும் அந்நிய நேரடி முதலீடு தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உற்பத்தியில் ஏற்றுமதிக்கான ஊக்கத்தொகை, முக்கிய தொழில்களுக்கு அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

06. பணம் அச்சிடுதல் (அபாயகரமான): மத்திய வங்கி பணத்தை அச்சிடலாம், ஆனால், இது பணவீக்கம் மற்றும் நாணய தேய்மானத்தை ஏற்படுத்தலாம்.

இந்நடவடிக்கைகளின் செயற்றிறனானது அரசின் கொள்கை நிறைவேற்றம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பொறுத்தது. கடன் பெறுவதை அதிகப்படுத்தினால், இலங்கை மற்றொரு கடன் நெருக்கடியை சந்திக்க நேரிடும். இதை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ் வரவு-செலவுத்திட்டம் ஒரு வலுவான அடித்தளத்தை வழங்கும் அதேவேளை, அதன் வெற்றி திறம்பட செயற்படுத்துதல் மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தில் தங்கியுள்ளது. உண்மையான மாற்றம் நிகழ, கொள்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும், நிதி திறமையாக ஒதுக்கப்பட வேண்டும், ஊழல் ஒழிக்கப்பட வேண்டும்.

இலங்கை ஒரு இக்கட்டான காலகட்டத்தை எதிர்நோக்கியிருக்கும் நிலையில், இந்த வரவு-செலவுத் திட்டம் நம்பிக்கையையும் புதுத் திசையையும் முன்வைக்கிறது. திறம்பட நிர்வகிக்கப்பட்டால், அது நாட்டின் எதிர்காலத்தை மறுவடிவமைத்து, பொருளாதார மீட்சியை உறுதிசெய்து, மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்.

**சமரசத்தின் பாதீடு:**

இந்த வரவு-செலவுத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தால் உந்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்ற அதேவேளை, இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் யதார்த்தங்களை அவர்கள் புறக்கணிப்பதாகவே தெரிகிறது. ஆட்சியில் இருக்கும் எந்த அரசாங்கமும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் நிதி நம்பகத்தன்மையை மீட்டெடுக்கவும் இதே போன்ற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தவும் வேண்டியிருக்கும். இதை IMF கொள்கைகளுக்கு சமர்ப்பிப்பதாகக் கருதுவதற்குப் பதிலாக, இது ஒரு தேவையான சமரசமாகப் பார்க்கப்படவேண்டும். சில IMF நிபந்தனைகளுக்கு இணங்குவது பொது நலனைப் பாதுகாத்து நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். இந்த வரவு-செலவுத்திட்டம், உண்மையான சோதனை அதை செயற்படுத்துவதில் தங்கியுள்ளது. அரசாங்கம் கொள்கைகளை வினைத்திறனுடன் செயற்படுத்தி வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத் தினால் மட்டுமே, இலங்கை மேலும் பலமாக உருவாகலாம். இல்லையெனில், எதிர்க்கட்சிகளின் கூற்றுகள் நீண்டகாலத்துக்கு அதிக நம்பகத்தன்மையைப் பெறலாம்.

இறுதியாக, சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் முழுவதுமாக IMF இயக்கியதோ அல்லது முற்றிலும் சுதந்திரமானதோ அல்ல. இது பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுடன் பொருளாதார மீட்சியை சமநிலைப்படுத்து வதை நோக்கமாகக்கொண்ட ஒரு கலப்பு அணுகுமுறையாகும்.



# கிள்ளுக் கீரையானது முஸ்லிம்களின் நிலை!







**உமர் அலி உஸ்மான்**

ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்ததுபோல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம். (அல்குர்ஆன் 2:183) என்ற இறை வசனத்தின்படி முஸ்லிம்களின் மிகக் கூடிய மகிழ்ச்சியான மாதமான புனித ரமழான் இன்னும் சில நாட்களில் வந்தடையவுள்ளது.

முஸ்லிம்களின் நோன்பு மாதம் வந்தால் பேரீச்சம்பழத்தின் பாவனையும் தேவையும் கூடிவிடுகிறது. அப்படியாயின் அங்கும் அரசியல் நடக்குமென்பது நாமெல்லாம் அறிந்ததே. எதிர்பார்த்த மாதிரியே இந்த அரசாங்கமும் ரமழான் நோன்பு காலத்துக்காக சவூதி அரேபியாவிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்களுக்கும் இலங்கை சுங்கம் வரி விதித்துள்ளதாக அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்

சவூதி அரேபியா நன்கொடையாக வழங்கிய 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களுக்கு இலங்கை சுங்கம் 33 மில்லியன் ரூபாவை வரியாக விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இது முஸ்லிம்கள் மத்தியில் பேசுபொருளாகி ஆங்காங்கே விமர்சனங்கள் எழவும் இது நாட்டுக்கான ஒன்றாக இருந்தாலும் ரமழான் நோன்பு காலத்தில் பேரீச்சம்பழங்களுக்கான வரியை அரசாங்கம் தளர்த்துமென்று அரச ஆதரவாளர்கள் தெரிவித்து வந்தார்கள்.

அதுமட்டுமின்றி குறித்த தீர்மானங்கள் அறிவிக்கப்படுவதற்கு முன்பே இந்தப் பேரீச்சம்பழக் கையிருப்பு கிடைக்கப்பெற்றுள்ளதால் அதற்கு வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

ரமழான் மாதத்தின் நிமித்தம் இலங்கை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிக்கவென வழமைபோன்று இம்முறையும் 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழத்தை சவூதி அரேபியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்தப் பேரீச்சம்பழத் தொகுதியை புத்தசாசனம், சமய விவகார மற்றும் கலாசார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியிடம் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி கொழும்பில் வைத்து கையளித்தார்.

இலங்கை முஸ்லிம்களுக்கென சவூதி அரேபியா அன்பளிப்பாக வழங்கியுள்ள பேரீச்சம்பழத் தொகுதியை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் கொழும்பிலுள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் இடம்பெற்றது. இந்த 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழத் தொகுதியையும் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வகையில் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர், புத்தாசன அமைச்சர், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண நிலையத்தின் பிரதிநிதி ஆகியோர் உத்தியோகபூர்வ ஆவணத்தில் கைச்சாத்திட்டனர். இதன்போது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலி, பிரதியமைச்சர்களான முனீர் முளப்பர், அருண் ஹேமச்சந்திரா, பாராளுமன்ற உறுப்பினர்களான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், முன்னாள் அமைச்சர் இசட். ஹாபிஸ் நஸீர் அஹமட் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி, ''இலங்கை சவூதியின் நீண்டகால நட்பு நாடாகும். அந்த வகையில் இந்நாட்டின் சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பல்வேறு உதவி, ஒத்துழைப்புகளை சவூதி வழங்கி வருகின்றது. அதற்கேற்ப இம்முறையும் சவூதி மன்னர் சல்மான், மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண அமைப்பினூடாக 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களை வழங்கியுள்ளார்'' - எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சமய விவகார அமைச்சர், ''இந்த உதவியின் நிமித்தம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சவூதி அரேபியாவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாட்டில் 2,741 பள்ளிவாசல்கள் உள்ளன. அப்பள்ளிவாசல்கள் ஊடாக இவற்றைப் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்'' - எனக் கூறினார்.

ஆனாலும் அரசாங்கம் உறுதியளித்தபடி பேரீச்சம்பழத்தின் மீதான விசேட பண்ட வரியைக் குறைத்து நிதி அமைச்சு விசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, பேரீச்சம்பழத்தின் மீதான தற்போதைய விசேட பண்ட வரியான 200 ரூபாவை கிலோவுக்கு ஒரு ரூபாவாகக் குறைத்து குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. மேலும், குறித்த பண்ட வரிக் குறைப்பு 28.01.2025 முதல் 2025 மார்ச் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லெண்ணத்தின் அடையாளமாக ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் நுகர்வுக்காக சவூதி அரேபியா இலங்கைக்கு 50 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. நாடு முழுவதுமுள்ள இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களுக்கு பேரீச்சம்பழங்கள் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு இப்போது அந்தப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கு சவூதி அரசாங்கம் பேரீச்சம்பழங்களை நன்கொடையாக வழங்கியிருந்தால், அந்தப் பேரீச்சம்பழங்கள் கடந்த காலங்களில் நடைபெற்ற விளையாட்டுகள் போலல்லாது முஸ்லிம் சமூகத்தினரிடையே நியாயமான முறையில் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகுமென சமூக ஆர்வலர்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள கலாசாரத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களூடாக விநியோக நடவடிக்கைகள் இப்போது இடம்பெறுகின்றன. இருந்தாலும் விநியோக செயல்முறை வெளிப்படையாகவும் மற்றும் நன்கொடை அளிக்கப்பட்ட பேரீச்சம்பழங்களை தங்கள் பங்கைப் பெற அனைவருக்கும் சமமான வாய்ப்புள்ளது என்பதை உறுதிப்படுத்துவது முக்கியம்.

முஸ்லிம் சமூகத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்களை நியாயமான முறையில் விநியோகிப்பதற்கான பொறுப்பை இலங்கை அரசாங்கம் ஏற்கவேண்டும், செயல்முறை திறமையாகவும் வெளிப்படை தன்மையுடன் இருப்பதை உறுதிசெய்யவேண்டும் என்பதே சவூதி அரேபியாவின் எதிர்பார்ப்பாகவும் அமைந்துள்ளது. இதேபோன்று வரவிருக்கும் ரமழான் மாதத்தை முன்னிட்டு, சவூதி அரேபியா 102 நாடுகளில் 700 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்களை வழங்கவுள்ளது.

இது, இரண்டு புனித மசூதிகளின் காவலர் மன்னர் சல்மானின் பரிசாக வழங்கப்படும் பேரீச்சம்பழ வழங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இம்முறை 200 மெற்றிக் தொன் அதிகமாக வழங்கப்படவுள்ளது. மேலும், இந்த நன்கொடைத் திட்டமானது உலகளாவிய முஸ்லிம் சமுதாயத்துக்கான சவூதி அரேபியாவின் ஆதரவையும் உதவியையும் வலுப்படுத்துகிறது. இந்த விநியோகத்தை சவூதி தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து இஸ்லாமிய அலுவல்கள், பிரசாரம் மற்றும் வழிகாட்டல் அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு அமைச்சர் ஷேக் அப்துல் லதீப் பின் அப்துல் அஸீஸ் அஷ்-ஷேக், உலகம் முழுவதும் முஸ்லிம்களுக்கு உதவுவதில் சவூதி தலைமைகள் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததோடு, இத்திட்டம் சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விழுமியங்களைப் பரப்புவதை சமாதானத்தை ஊக்குவிப்பதை மற்றும் தீவிரவாதத்தையும் மதத் தீவிரவாதத்தையும் எதிர்க்க உதவுவதாகவும் குறிப்பிட்டார்.

பொருத்தமான நேரத்தில் மக்கள் மத்தியில் விநியோகிப்பதற்குப் பேரீச்சம்பழங்கள் அனுப்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. இது, ரமழான் காலத்தில் இலட்சக்கணக்கான முஸ்லிம்களுக்கு உதவுயாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கும் சமீபத்தில் 50 மெற்றிக் தொன் உயர் ரக சவூதி பேரீச்சம்பழங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது, இரு நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்துவதோடு, இலங்கையின் முஸ்லிம் சமுதாயத்துக்கு சவூதி அரேபியாவின் தொடர்ச்சியான ஆதரவுக்கும் சான்றாகவும் அமைகிறது.

ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும் தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை, தீமைகளை) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் அருளப்பெற்றது. (அல்குர்ஆன் 2 : 185). ஆகவே, எவர் அம் மாதத்தை அடைந்துகொள்கின்றாரோ அவர் அம் மாதம் (முழுவதும்) நோன்பு நோற்கட்டும். (அல்குர்ஆன் 2 : 185).

உலக மகா அற்புதமான திருக்குர்ஆன் ரமழான் மாதத்தில் இறக்கப்பட்ட காரணத்துக்காக அந்த ரமழான் மாதத்தில் நோன்பு வைக்கவேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளை. வான்மறை அருளப்பட்ட வளமான மாதம், நன்மைகள் நிறைந்த புனிதமான மாதம், அல்லாஹ்வின் அருளும் மன்னிப்பும் நிறைந்த மாதம், எந்த மாதத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹ்ரே அஜீம், ஷஹ்ரே முபாரக் என்று வர்ணித்துச் சொன்னார்களோ அந்த மாதம்தான் இது. இப்படியான மாதத்தில் முஸ்லிம் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்கிறார்கள். இது ஆத்மீக ரீதியாகவும் உள ரீதியாகவும் மிகவும் அசௌகரியமான ஒன்றாகும்.

அந்தக் காலமானது முஸ்லிம்களின் புனித நோன்பு காலமாக அமைந்துள்ளது. அதனால் இப்பரீட்சையை நோன்பு ஆரம்பிக்க முன்னர் அல்லது நோன்புப் பெருநாள் முடிந்த பின்னர் நடத்த அரசாங்கம் முன்வரவேண்டுமென அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா உட்பட பல சிவில் அமைப்புகள் ஜனாதிபதி, கல்வி அமைச்சராகவுள்ள பிரதமர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றுக்குப் பகிரங்க கோரிக்கையொன்றை முன்வைத்தது. அவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டு மார்ச் மாதம் நடுப்பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்து பரீட்சை நேரசூசியும் வெளிவந்திருக்கிறது.

உலகில் வாழும் இஸ்லாமியர்களின் புனிதமிகு மாதங்களில் ஒன்றான புனித ரமழான் என்பது அமல்கள் நிறைந்த மாதமாகும். இந்த மாதத்தில் 13 மணித்தியாலங்களுக்கு மேலாக பகல் நேரங்களில் முஸ்லிம்கள் நோன்பு நோற்றிருப்பதுடன், பகலிலும், இரவிலும் இறைவனை அதிகம் அதிகம் தொழும் மாதமாகும். அருட்கொடைகள் நிறைந்த இந்த மாதத்தில் முஸ்லிம்கள் நிறைய நன்மையான காரியங்களைச் செய்வதுடன், இரவு நேரத்திலும் நீண்டநேரம் நின்று தொழும் காலமாகும். இந்தக் காலத்தில் பள்ளிவாசல்கள் சகலதிலும் மார்க்கச் சொற்பொழிவுகளிலும் வணக்க வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபடுவார்கள். இப்படியான சங்கை மிகுந்த காலத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்த பரீட்சை திணைக்களம் தீர்மானித்திருப்பது பொருத்தமற்ற செயலாக அமைந்துள்ளது என்ற விடயம் ஆராயப்பட வேண்டியது.

பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவர்களும் பரீட்சை கடமைக்குச் செல்லும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் நோன்பு காலங்களில் பரீட்சையை எதிர்கொள்வதும் பரீட்சைக்குத் தயாராவதும் உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் மார்க்கக் கடமைகளிலும் தாக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.

இதனால் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம்களின் உணர்வுகளை மதித்து இலங்கை முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளையும் கல்வி நடவடிக்கைகளையும் திருப்திகரமாக முன்னெடுக்க இந்தப் பரீட்சை நேரசூசியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும் குறித்த துறைக்குப் பொறுப்பான திணைக்களங்களும் முன்வரவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்களான அஸ்ரப் தாஹீர், எம்.எஸ்.உதுமாலெப்பை போன்றோர்களும் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினர்.

முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வலியுறுத்தப்பட்டும் அவர்கள் இந்த அரசாங்கத்தின் போக்கிலுள்ள அதிருப்தி காரணமாக பேசாமலே இருந்து கொண்டார்கள். இப்போது தேர்தலையும் அந்தக் காலத்தில் அறிவிப்பது தொடர்பில் பேச்சுகள் நடந்துவருகின்றன.

ரமழான் மாதம் வருகிறது. வானத்துக் கதவுகள் திறக்கப்பட்டு விடுகின்றன. அருள் வளங்கள் மழையாய் பொழிகின்றன. சுவனத்தின் கதவுகள் திறக்கப்பட்டு விடுகின்றன. நற்செயல்கள், நன்மைகளுக்கான பாதைகள் எளிதாக்கப்பட்டு விடுகின்றன. எல்லோருக்குமே நன்மை செய்வதற்கான வாய்ப்பும் அருளும் கிட்டுகின்றன. நரகத்தின் கதவுகள் மூடப்பட்டு விடுகின்றன. தீமைகளின் பாதையில் முட்டுக்கட்டையாக நோன்பு வழிமறித்து நிற்கின்றது. ஷைத்தான்கள் விளங்குகளால் பூட்டப்பட்டு விடுகிறார்கள். தீமைகளைப் பரப்புவதற்கான வாய்ப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டு விடுகின்றன என்றும் அருள்செய்யப்பட்ட மாதம் உங்களிடம் வந்துவிட்டது என்றும் நபிகளார் (ஸல்) அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

மேலும் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் யார் ரமழானில் நோன்பு நோற்று வணங்குகிறாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (நபிமொழி) (அபூஹுரைரா (ரலி), திர்மிதி-619.

ரமழான் மாதம் வந்துவிட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்தப் பாக்கியங்கள் பெரும் வாய்ப்பைப் பெற இலங்கை முஸ்லிம்களுக்கு அரசாங்கம் வழிவகைகளை வழங்க முன்வரவேண்டும்.

# தமிழன் வணிக உலகம்
## Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com




**NDB வங்கியானது அதன் அங்கத்தவர்களுக்காக பிரத்தியேகமான கவர்ச்சிகர கடனட்டை [Affinity Credit Card] திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை வாகனச் சங்கத்துடன் (AAC) இணைந்துள்ளதாக பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்தப் பங்குடைமைக்காக உத்தியோகபூர்வமாகக் கையொப்பமிடும் நிகழ்வு நவம் மாவத்தையில் அமைந்துள்ள NDB வங்கியின் தலைமையக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் NDB வங்கி மற்றும் AAC யின் பிரதிநிதிகளாகிய டி ஹெட்டியாரச்சி, கலாநிதி விஜயகொரியா, தம்மிக்க ஆட்டிகல, அஷான் விக்ரமநாயக்க (NDB), ஆசிரி சரத்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.**

## நூடில்ஸ் தயாரிப்பு வரிசையில் மற்றுமொரு புதிய அறிமுகம்



நெஸ்லே நிறுவனத்தின் MAGGI Papare வர்த்தகநாமமானது தனது hot and spicy தயாரிப்பு வரிசையில் MAGGI Papare Blast என்ற புதிய தயாரிப்பொன்றை அறிமுகப்படுத்தி யுள்ளது. அதன் பெயருக்கேற்றவாறு இப்புதிய கிளர்ச்சியூட்டும் தயாரிப்பு வடிவமானது உங்கள் ஒவ்வொருவரது கவனத்துக்கும் மகத்தான சுவைக்கலவையின் வெளிப்பாட்டை வழங்குகின்றது.

'Rasa Pattu Wena MAGGI Papare Blast' என்ற வர்த்தகநாம முன்வைப்பை மெய்ப்பிக்கும் வகையில் சுவையரும்புகளை சுண்டி வேறு எதுவும் தராத உணர்வுபூர்வமான சுவை அனுபவத்தை வழங்குகிறது. வெங்காயப் பொடி, கறிவேப்பிலை, மிளகாய்ப் பொடி, வெள்ளைப்பூண்டு, மற்றும் மிளகு உள்ளடங்கிய இயற்கை சேர்க்கைப் பொருட்களின் சுவைமிக்க இணைப்பைக் கொண்டு இத்தயாரிப்பு வெளிவருவதுடன், எவ்விதமான செயற்கைச் சுவையூட்டிகள் மற்றும் பதப்படுத்தும் பொருட்கள் எவையுமில்லாமல் செழுமையான வாயூறச் செய்யும் சுவையை வழங்குகின்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பேர்ணி ஸ்டெஃபான் தனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்கையில், "இலங்கை மக்களின் சுவையரும்புகளுக்கு மிகவும் நேர்த்தியாக அமையும் தனித்துவமான சுவைக் கலவையை வெளிக்கொண்டு வருவதற்காக, சமையல் கலையில் நாம் கொண்டுள்ள நிபுணத்துவத்தின் அனுகூலத்துடன் நுகர்வோரின் சுவை விருப்புவெறுப்புகளை மிகவும் கவனமான ஆராய்ந்து, MAGGI Papare Blast தயாரிப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம்" - என்று குறிப்பிட்டார்.



**இலங்கையில் மிகப் பாரிய விரைவு சேவை உணவகச் சங்கிலியாகத் திகழ்ந்து வருகின்ற பெரேரா அன்ட் சன்ஸ் (Perera & Sons Bakers (Private) Limited - P&S), பொலனறுவை மாவட்டத்திலுள்ள கவுடுள்ள மகா வித்தியாலயத்தில் Reverse Osmosis (RO) நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியொன்றைப் பொருத்தி, சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதியை உறுதி செய்வதில் மற்றுமொரு உறுதியான படியை முன்னெடுத்து வைத்துள்ளது. இந்தக் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியை பாடசாலையிடம் அண்மையில் கையளித்தபோது......**

## இலங்கையில் முதல் தடவையாக 5G-Advanced பரீட்சார்த்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ள SLT-MOBITEL




மொபைல் தொழில்நுட்பத்தில் தலைமைத்துவத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, இலங்கையில் முதல் தடவையாக 5G-Advanced (5G-A) பரீட்சார்த்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்ததாக அறிவித்துள்ளது. இலங்கையில் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாக இது அமைந்திருந்தது.

2025 ஜனவரி மாதம் 12ஆம் திகதி இந்தப் பரீட்சார்த்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதுடன், தொலைத்தொடர்பாடல் புத்தாக்கத்தில் SLT-MOBITEL இன் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி, இலங்கையின் முதலாவது 5G-A பரீட்சார்த்தமாக அமைந்திருந்தது. இதன் போது 5 Gbpsக்கு அதிகமான வேகம் எய்தப்பட்டதாக அறிவித்துள்ளது.

கொழும்பு - 8 இல் அமைந்துள்ள SLT-MOBITEL இன் தலைமையகத்தில் இந்தப் பரீட்சார்த்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதுடன், தொழில்நுட்ப சிறப்பு மற்றும் தொழிற்றுறை தலைமைத்துவம் ஆகியவற்றுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது. இந்தப் பரீட்சார்த்த செயற்பாட்டின் போது ZTE விகித சாதனம் மற்றும் Xiaomi 14 Ultra கையடக்க சாதனம் போன்றன பயன்படுத்தப்பட்டதுடன், 3CC Carrier Aggregation, Massive MIMO மற்றும் 1024QAM modulation தொழில்நுட்பம் ஆகியன C-band அலைவரிசையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது.



**மக்கள் வங்கியின் தலைவர் பேராசிரியர் நாரத பெர்னாண்டோ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் அநுராதபுரத்தின் புனித ஜய ஸ்ரீ மஹா போதி மற்றும் ருவன்வெலி மகா சேயாவுக்கு மரியாதை செலுத்தினர். மேலும், அட்டமஸ்தானாதிபதி,நுவரக் கலாவியா பிரதம சங்கநாயக்க கலாநிதி பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர், ருவன்வெலி மஹா சேயா ஆலயத்தின் பிரதமகுரு ராஜ பண்டிதர் வண. எத்தலவத்துனவெவே ஞானதிலக நாயக்க தேரரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் சேனல் முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் நளீன் பத்திரனகே, அநுராதபுர பிராந்திய முகாமையாளர் திஸ்ஸ தென்னக்கோன், உதவிப் பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் ஏனைய வங்கி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.**

## TAGS விருதுகள் 2024 வழங்கும் நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குனரான யூனியன் அஷ்யூரன்ஸ், பெருமைக்குரிய TAGS விருதுகள் 2024 வழங்கும் நிகழ்வில் சிறந்த நிதிசார் அறிக்கையிடல் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு போன்றவற்றுக்காக கௌரவிப்பைப் பெற்றுள்ளது. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் (CA Sri Lanka) ஏற்பாடு செய்யப்பட்ட TAGS விருதுகள் வழங்கும் நிகழ்வில் பல்தேசிய நிறுவனங்கள், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பங்கேற்றிருந்தன. அனைத்தும் நிதியியல் மற்றும் நிதிசாரா அறிக்கையிடல் போன்றவற்றில் சிறப்புக்காக கௌரவிப்பைப் பெற்றிருந்தன.

'பாதுகாப்பின் சிற்பக்கலைஞர்கள்' ('Architects of Protection') எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட நிறுவனத்தின் ஒன்றிணைக்கப்பட்ட வருடாந்த நிதி அறிக்கைக்கு, கூட்டாண்மை அறிக்கையிடலுக்கான பிரதான கோட்பாடுகளைப் பின்பற்றியிருந்தமைக்காக பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தது. காப்புறுதித் துறை (ரூ. 10 பில்லியனுக்கு அதிகமான நிகர கட்டுப்பண செலுத்தல்கள்) பிரிவில் வெண்கல விருதை யூனியன் அஷ்யூரன்ஸ் பெற்றுக்கொண்டதுடன், துறையில் சிறப்புக்கான தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பை மீள உறுதி செய்திருந்தது.

## தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக்கு நிலையான வளர்ச்சியை மேம்படுத்தும் LOLC ஃபைனான்ஸ் MSME





LOLC ஃபைனான்ஸ் தனது MSME தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக் காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மாற்றியமைக்கும் பயிற்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கை சமூகங்களை வலுவூட்டு வதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் கூறுகிறது. 2009 இல் தனிநபர் நிதிக் கடன்கள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து பாரம்பரிய வங்கிச் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்ட குழுக்களுக்கான இடைவெளியைக் குறைப்பதில் LOLC ஃபினான்ஸ் கவனஞ்செலுத்துகிறது. விவசாயம், வர்த்தகம் மற்றும் சிறியளவிலான உற்பத்தி போன்ற வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட சிறிய கடன்களை வழங்குவதன் மூலம், LOLC ஃபைனான்ஸ் தன்னம்பிக்கை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது.

நீண்டகால வெற்றிக்கு நிதியுதவி மட்டும் போதுமானதாக இல்லையென்பதை உணர்ந்து LOLC ஃபைனான்ஸ் தனது சேவைகளில் திறன் மேம்பாடு மற்றும் வருமானத்தை உருவாக்கும் பயிற்சியை ஒருங்கிணைத்து ஒரு துணிச்சலான முன்னோக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டங்கள், MSME தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கடன்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தவும் நீண்ட கால நிதி நிலைத்தன்மையை அடையவும் தேவையான அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு அளிக்கும் வகையில் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

## ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைவ் ஸ்டார் விருதுகள் - 2024



ஆயுள் காப்புறுதித் துறையில் மிகப்பெரிய மற்றும் வலிமையான காப்புறுதி நிறுவனமான ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃவ் (SLIC Life) சமீபத்தில் கொழும்பிலுள்ள Shangri-La இல் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நட்சத்திர விருதுகள் - 2024 ஐ நடத்தியது. 2023 ஆம் ஆண்டு முழுவதும் சிறப்பான அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தொடர் வெற்றியென விளங்கும் சிறந்த விற்பனை சாதனையாளர்களை ஹீரோஸ் ஒவ் எக்ஸலன்ஸ் (Heroes of Excellence)




கௌரவிப்பதற்காக இந்த மாபெரும் கொண்டாட்டம் அர்ப்பணிக்கப்பட்டது. SLIC Life இன் வெற்றிக் கதையை வடிவமைப்பதில் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும் இந்த வெற்றியாளர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுக்கு இந்த விருது விழா ஒரு சான்றாக அமைந்தது.

## SLIM தேசிய விற்பனை விருதுகள் 2024 இல் வெற்றி சாதனைகளைப் பெற்ற AIA இன்ஷூரன்ஸ்





10 ஜனவரி 2024 – AIA இன்ஷூரன்ஸ், மதிப்புமிக்க SLIM தேசிய விற்பனை விருதுகள் 2024 இல் அதன் விதிவிலக்கான விற்பனை அணி பெற்றுக்கொண்ட குறிப்பிடத்தக்க சாதனைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. நிறுவனத்தின் சிறந்த விற்பனையாளர்கள் பல பாராட்டுகளைப் பெற்றுள்ளனர். இது காப்பீட்டுத் துறையில் AIA இன் தலைமைத்துவ நிலையை சிறந்த விற்பனை நிபுணர்களாக வலுப்படுத்துகிறது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், விற்பனை அணியிலுள்ள உயர் சாதனையாளர்கள் தேசிய அளவில் அவர்களது முயற்சிகள் மற்றும் சாதனைகளுக்காக அங்கீகரிக்கப்படுகின்றனர்.

AIA இன்ஷூரன்ஸ் குழு இரண்டு தங்க விருதுகள் மற்றும் இரண்டு வெள்ளி விருதுகளைப் பெற்று விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவையில் ஒப்பற்ற அர்ப்பணிப்பு, ஆர்வம் மற்றும் சிறந்து விளங்கிய மற்றொரு ஆண்டைக் குறிக்கிறது. பிராந்திய முகாமையாளர் பிரிவில் நிசான்சலா அத்துகோரல தங்க விருதையும் முன்னணி லைனர் பிரிவில் தினுகா நவமினா ரத்நாயக்க மற்றும் கே. காமினி முறையே தங்கம் மற்றும் வெள்ளி விருதுகளையும் வென்றனர். விற்பனை மேற்பார்வையாளர்கள் பிரிவில் கே.டபிள்யூ. தசநாயக்க மற்றும் எஸ்.எஸ்.பி. டயஸ் முறையே தங்கம் மற்றும் வெள்ளி விருதுகளைப் பெற்றனர்.

## 'சிறந்த ஏற்றுமதியாளர்' விருதைப் பெற்றுக்கொண்ட கோழி இறைச்சி உற்பத்தியாளரான New Anthoney's Group



இலங்கையின் முன்னணி கோழி இறைச்சி உற்பத்தியாள ரான New Anthoney's Group, அண்மையில் நடைபெற்ற 26ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் பதப்படுத்திய உணவுகள் பிரிவில் 'சிறந்த ஏற்றுமதியாளர்' விருதைப் பெற்றுக்கொண்டது. அதனூடாக, தேசத்தின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்குவதில் தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பு மற்றும் வளர்ந்து வரும் வலிமை ஆகியவற்றை மீள உறுதிசெய்திருந்தது.

இலங்கையின் சிறந்த ஏற்று மதியாளர்களுக்கான உயர்ந்த கௌரவிப்பு நிகழ்வாக வருடாந் தம் ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வினூடாக அதிசிறந்த வளர்ச்சி மற்றும் வினைத்திறன் ஆகியன கொண்டாடப்படுகின்றன. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் (EDB) ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வினூடாக ஏற்றுமதித் துறையின் சிறப்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

பதப்படுத்திய மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உணவுப்பொருட்க ளுக்கான சர்வதேச கேள்வி அதிகரித்த வண்ணமுள்ளது. நகர மயமாக்கல், மாறிவரும் நுகர்வோர் வாழ்க்கை முறைகள் மற்றும் சௌகரியத்தை நாடல் போன்றன இதில் தாக்கஞ்செலுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன. உணவுப் பாதுகாப்பு, நிலைபேறாண்மை மற்றும் உயர்தர புரத மூலங்கள் போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்தப்படும் நிலையில், கோழி இறைச்சித் துறையும் உலகளாவிய ரீதியில் அதிகளவு கேள்விக்கு முகங்கொடுத்தவண்ணமுள்ளது.

New Anthoney's Group தனது ஏற்றுமதிச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வதனூடாக பிரதான செயற்பாட்டாளராக நிலைநிறுத்தியுள்ளதுடன், உயர்தர, அன்ரிபயோடிக் இல்லாத மற்றும் நிலைபேறான முறையில் தயாரிக்கப்பட்ட கோழி இறைச்சியை சர்வதேச சந்தைகளுக்கு விநியோகிக்கின்றது.

## ஹட்ச் - TRAINOCATE ஒன்றிணைந்து இலங்கை மக்களின் டிஜிட்டல் மேம்பாட்டுக்காக SriLankanization முயற்சியை ஆரம்பித்துள்ளன



இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உட்கட்டமைப்புச் செய்வதற்கு பங்களிப்பதற்காக அத்தியாவசியமான டிஜிட்டல் அறிவு மற்றும் திறன்களை வழங்கி இலங்கை மக்களுக்கு வலுவூட்டும் முகமாக ஹட்ச் நிறுவனம் Trainocate நிறுவனத்துடன் இணைந்து, 'Srilankanization' என்ற பேராவல் மிக்க செயற்றிட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

மைக்ரோசொப்ட், AWS, Google Cloud, Cisco உள்ளிட்ட உச்ச தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக மாணவர்கள், தொழில்முயற்சியாளர்கள், தொழில் சார்ந்தவர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட நபர்களுக்கு டிஜிட்டல் பயன்பாடுகள் குறித்த உலகத்தரம் வாய்ந்த பயிற்சி கற்கைநெறிகளை Srilankanization முயற்சி வழங்குகின்றது. பிரஜைகளை முன்னேற்றி தெற்காசியாவில் டிஜிட்டல் துறையில் முன்னோடியாக இலங்கையை நிலைநிறுத்தும் நோக்கில் இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

Srilankanization முயற்சியினூடாக பல்வகைப்பட்ட கற்றல் மூலங்கள் வழங்கப்படுவதுடன் ஹட்ச் இணையதளத்தில் (www.hutch.lk/srilankanization) இடம்பெற்றுள்ள 'RESET' இலத்திரனியல் வழி கற்றல் (e-learning) தளத்தினூடாக இதனை அணுக முடியும். 5,000 க்கும் மேற்பட்ட பயிற்சி காணொளிகள் மற்றும் பல்வகைப்பட்ட டிஜிட்டல் துறைகளில் 130க்கும் மேற்பட்ட சான்றிதழ் அங்கீகாரங்களையும் வழங்கும் ஒரு புத்தாக்கமான தளமாக RESET காணப்படுகின்றது.

# மலையக மக்களின் வரலாறு கூறும் அருங்காட்சியகம்

**சந்தனம் சத்தியநாதன்**

பரிணாம வளர்ச்சி என்பது சார்ள்ஸ் டார்வின் கூற்றுப்படி விஞ்ஞானபூர்வமாக அது குரங்கிலிருந்து மனிதன் பரிணமித்தான் என்பதற்கு இதுவரை மாற்றுக்கருத்தில்லை. என்றாலும் ஒவ்வொரு மதங்களும் மனித இனம் தோன்றியதற்கான வியாக்கியானங்களைப் பல்வேறு விதமாக சித்திரிக்கின்றன. எது எப்படி இருந்தபோதும், உலகில் வாழ்கின்ற இந்த மனித இனம் பல்வேறு பிரிவுகளாக சிதைந்து கிடக்கின்றதை எம்மால் நன்கு உணர முடிகிறது.

இந்தப் பிரிவு இனத்தால், மொழியால், நிறத்தால், ஜாதியால், மதத்தால், பணத்தால் பிரதேசத்தால் அரசியலால்....

இப்படிச் சொல்லிக்கொண்டு போகுமளவுக்கு மனிதர்கள் பல்வேறு பிரிவுகளாக வாழுகின்றதொரு சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கான காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், ஒட்டுமொத்தத்தில் நாம் அனைவரும் மனிதர்கள் என்பது மட்டும் உண்மை. இந்த இயற்கை யாருக்கும் பேதமை காட்டுவதில்லை. காற்றை நாம் அனைவரும் சுவாசிக்கின்றோம்.



இதில் பேதமை இருக்கின்றதா? சூரியன் பேதமையுடன் பூமியைச் சுற்றுகின்றதா? இப்படி இயற்கை நம்மைப் பிரிக்கவில்லை. நம்மை நாமே பிரித்து வைத்துள்ளோம். அதை எப்போது மனிதன் உணரப்போகின்றான் என்பதற்கு காலம் பதில் சொல்லட்டும்.

இப்படியானதொரு விளக்கத்துடன் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் சார்ந்த தனது சமூகத்துக்கும் கலாசார, சமூக, பன்பாட்டு ரீதியான ஒரு தனித்தன்மை உண்டு. அதை பேணிப் பாதுகாக்க அந்த சமூகத்துக்கு ஒரு கடப்பாடுள்ளது.

அதனை அடுத்த தலைமுறையும் அறிந்துகொள்ளும் வகையில் பாதுகாப்பது



அவசியம் என்பதை நாம் புரிந்துகொள்வது மிக மிக அவசியம்.

எனவே, ஒவ்வொரு சமூகத்துக்கும் அதன் வரலாறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். வரலாறு என்றால் என்ன? என்ற இந்தக் கேள்விக்குப் பலரும் பல வரைவிலக்கணங்களைத் தந்துள்ளனர்.

இருப்பினும், ஆங்கிலேய வரலாற்றாளர் 'இ.எச்.கார்' என்பவர், "ஒரு தொடர்ச்சியான நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையான உரையாடல்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்துகொள்ள முடியும் "இன்றைய செயற்பாடு நாளைய வரலாறு" என்பதை நாம் அடுத்த தலைமுறைக்கு சிறந்த செயற்பாடுகளை விட்டுச்செல்ல வேண்டும். அந்தவகையில் நமது வரலாற்றைத் தேடி பதிவுசெய்து ஆவணப் படுத்துவது மிக முக்கியம். அதனையே அருங்காட்சியகங்கள் செய்து வருகின்றன.

வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்த - புகழ்பெற்ற பொருட்களைச் சேகரிக்கும் இடங்களை - அப்பொருட்களை காட்சிக்கு வைத்தல், மக்களை பார்வையிடச் செய்யும் கட்டிடங்களை அருங்காட்சியகங்கள் என்று அழைக்கின்றோம். அரிதாய் காணக் கிடைக்கும் பொருட்களை நாம் அங்கு பார்க்கலாம்.

இப்போது சர்வதேச அருங்காட்சியக நாள் என்ற தினத்தையும் ஏற்படுத்தியுள்ளார்கள் ( "18th May- International Museum day") ஒவ்வொரு வருடமும் மே 18ஐ சர்வதேச அருங்காட்சியகத் தினமாக உருவாக்கியுள்ளனர்.

1997ஆம் ஆண்டு அருங்காட்சியகங்களின் சர்வதேச பேரவை உலகெங்குமுள்ள அருங்காட்சியகங்கள் சமூகத்தில் தங்கள் பங்கை ஊக்குவிக்கும் ஒரு நாளை உருவாக்கத் தொடங்கின. அருங்காட்சியகங்கள் எவ்வளவு முக்கியம் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தின.

அதேபோன்று தொல்லியல் அருங்காட்சியகங்கள், தொல்லியல் ஆய்வுகள் வழியாகப் பெறப்படும் பழைமையாக கிடைக்கும் அரும்பொருட்களைக் காட்சிக்கு வைக்கின்றன. அவற்றை திறந்தவெளி அருங்காட்சியகங்கள் என்று மக்கள் விழிக்கின்றனர்.

சமூக, பொருளாதார வாழ்க்கை முறைகளைக் காட்டும் நாட்டுப்புற மக்களின் கலை வரலாறுகளை எடுத்துரைப்பனவாக இவ்வருங்காட்சியகங்கள் பிரதிபலிக்கின்றன. அத்தோடு வரலாற்று அருங்காட்சியகங்களின் மற்றுமொரு சிறப்பு என்னவெனில், அவை நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமுள்ள ஒற்றுமையை தொடர்புபடுத்தி விடயங்களைக் கையாளுகின்றன. ஒட்டுமொத்தத்தில் மக்கள் மற்றும் அவர்தம் சூழல் தொடர்பான சான்றுகளை மன மகிழ்ச்சி, கல்வி, ஆய்வு போன்ற நோக்கங்களுக்காகச் சேகரிப்பதுடன், அவற்றைப் பாதுகாத்தும் ஆய்வுகளை நடத்தியும் அதனை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவதோடு அவற்றை காட்சிப் படுத்தியும் உதவுகின்றன.

நாம் இதுவரை அருங்காட்சியகங்களின் நோக்கங்களையும் அவை அடுத்த தலைமுறைக்கு செய்யும் பணிகளையும் சர்வதேச ரீதியாகப் பார்த்தோம். இவற்றுக்கெல்லாம் ஒரு படி மேலே நின்று நம் நாட்டில் மலையக மக்களின் வரலாற்றை அப்படியே சித்திரிக்கும் ஓர் அருங்காட்சியகம் பற்றித்தான் இப்போது பார்க்கப் போகின்றோம்.

இலங்கை தேசிய வருமானத்தின் பெரும்பங்கை ஈட்டித்தரும் நூற்றாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க சமூக, பொருளாதார, கலை, கலாசார அரசியல் முக்கியத்துவத்தை - சிறப்பம்சத்தை தேயிலை தன்னகத்தே கொண்டுள்ளது. பிரித்தானிய காலனித்துவவாதிகளால் 1867களில் அறிமுகம் செய்யப்பட்ட காலந்தொட்டு 200 ஆண்டுகளாக இலங்கை உலகச் சந்தைக்கு தேயிலையை ஏற்றுமதி செய்கிறது. இலங்கையர், முக்கியமாக சிங்களவர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்ய மறுத்தமையின் விளைவாக 1824களில் தென்னிந்தியத் தமிழ் மக்கள் குறைந்த வேதனத் தொழிலாளர்களாக இறக்குமதி செய்யப்பட்டனர். இந்த குடிவரவு ஏறத்தாழ 1941ஆம் ஆண்டுகள் வரை நீடித்தது.

இவர்கள் கடந்து வந்த பாதை கற்களும் முட்களும் அடர்ந்த காடுகளுமாகவே இருந்தது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நடையாகவே வந்த மக்களுள் எண்ணிலடங்காத பலர் பயணக் களைப்பாலும் பல்வேறு பயணத்தொடர்புள்ள காரணிகளாலும் வழியில் இறந்துவிட்டனர். அனைத்துக்கும் மேலாக அவர்கள் மீது திணிக்கப்பட்ட தோட்ட வாழ்க்கை முறை




சுரண்டலும் பிரச்சினைகளும் நிறைந்தே காணப்பட்டது.

இலங்கைப் பொருளாதாரம் பெரிதும் இம்மக்களிடையே தங்கியிருந்தாலும், அபிவிருத்தி நீரோட்டத்தைப் பொறுத்தவரை இவர்கள் அந்நியர்களாகவே கருதப்பட்டனர். நாட்டின் தனித்துவமான சமூக, பொருளாதார, கலாசார, சமய, அரசியல் அடையாளங்களைக்கொண்ட பெருந்தோட்டச் சமூகம் தொடர்பான முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வரும்போது அவர்களின் கலாசார விழுமியங்களையும் கொண்டுவந்தனர்.

அவர்களின் வரலாற்றுப் பயணத்தை முழுமையாகப் புரிந்துணர்வதன் மூலமாகவே அவர்களின் பங்களிப்பை இனங் காண, மதிப்பீடு செய்ய, அதேவேளை, இலங்கை அன்னையின்



நாடித்துடிப்பை நீடிக்கச் செய்யும் இவர்களின் முன்னேற்றத்துக்கு உதவ முடியும். இப்பணியை நிறைவுசெய்யும் நோக்கில் - இவர்களின் வாழ்வியல் தொடர்பான பரந்த சமுதாய உணர்வூட்டும் நோக்கில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் (I S D) தேயிலை தோட்டத் தொழிலாளர் அருங்காட்சியகத்தையும் ஆவணக்காப்பகத்தையும் நிறுவியுள்ளது.இந்த அருங்காட்சியகத்தின் பிரதான நோக்கம் யாதெனில், இந்திய வம்சாவளி பெருந்தோட்டச் சமூகத்தின் வரலாறு, கலாசாரம், பண்பியல்களை பேணிப் பாதுகாத்தல் நாட்டின் பொருளாதாரத்துக்கு இச்சமூகம் அளித்துள்ள பங்கு தொடர்பாகவும் எடுத்தியம்புதல் மூலம் பல்லின கலாசாரத்தை - உறவுகளை வளர்த்தல் போன்றனவாகும்.

இவ்வருங்காட்சியகம் முன்னோடி கோப்பித் தோட்டங்களில் ஒன்றானா நியூ பீக்கொக் தோட்டத்தில் பிரித்தானிய தோட்ட உரிமையாளர்களால் அமைக்கப்பட்ட ஒரு லயத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகம் கண்டி - நுவரெலிய பிரதான வழியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக மக்கள் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களும் ஆய்வாளர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் தமது பணியை மேற்கொள்வதற்கு சிறந்த கண்கவர் சூழலை இவ் ஆவணக்காப்பகம் கொண்டுள்ளதால் பல இளந்தலைமுறை ஆய்வாளர்கள் நித்தம் அங்கு செல்வதை அவதானிக்க முடிகிறது.

---

## IMF ஐ... (09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழல் மலிந்து காணப்பட்டதென்ற விடயத்தில் ஓரளவுக்கு யதார்த்தம் இருக்கலாம். அதன் பின்னர் 2019ஆம் ஆண்டின் பின்னர் அதன் பிரதிபலனாக நாடு பொருளாதாரச் சரிவைச் சந்தித்தது. ஆனாலும் ஏற்கனவே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சரிசெய்யும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முழுமையாக எதையும் செய்ய முடியவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. அதேநேரம் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்துள்ள பிரதான குற்றச்சாட்டு ஏற்கனவே கடன்சுமையில் இருக்கின்ற நாட்டை கடன் வாங்காமல் மீட்டெடுப்பதாகக் கூறிய வாக்குறுதிக்கு மாற்றமான முறையில் இந்த அரசாங்கமும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், இந்தியா, சீனா போன்றவற்றின் காலில் மண்டியிடாமல் நாட்டை முன்னே கொண்டுபோக முடியாதென்பதை சரியாகப் புரிந்து கொள்வதற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் வழிவகுத்திருக்கின்றது என்பதாகும். அத்துடன், முன்னைய ஜனாதிபதி ரணிலின் வழியில்தான் செல்கின்றார்கள். மாற்றீடாக எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சி என்ன சொன்னாலும் இந்த ஆட்சி மலர்ந்து வெறும் மூன்றே மாதங்கள்தான் ஆகின்ற நிலையில், ஏற்கனவே ஒரு சமூக உடமைவாத சோஷலிச சிந்தனையில் கட்டுண்டிருந்த அரசியல் கட்சியான ஜே.வி.பி. கட்சி எந்தவிதமான ஆட்சி பற்றிய முன்னனுபவமும் இல்லாத நிலையில் இந்தளவுக்காவது நாட்டின் பொருளாதாரச் சரிவை சமநிலைப்படுத்தி பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வகையில் பாரியளவில் மாற்றம் எதுவும் இல்லாமல் ஒரு வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்தமை ஒரு சாதனை என்றே கூற வேண்டும். அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்தி வறிய மக்களுக்கு சலுகை வழங்க நடவடிக்கைகள் இல்லை என்பது உண்மையானாலும் பொருளாதார ரீதியாக விழுந்திருந்த நாட்டையே அநுரகுமார திசாநாயக்க பொறுப்பேற்றுள்ளார். ஏனெனில், புதிதாக ஆட்சியைப் பொறுப்பேற்கும் அரசாங்கம் திட்டமிடப்பட்ட 05 அல்லது 06 வீத பொருளாதார அபிவிருத்தி இலக்கை நோக்கி நாட்டை கொண்டுசெல்வதற்குப் போதுமான வளங்கள் இல்லாமல் இருந்த ஒரு நாடாகும்.

அப்படிப்பட்ட நிலையில் அனைத்தையும் சமநிலைப்படுத்துவதென்பது இயலுமான காரியமல்ல. அதனால் இனி என்ன நடக்கும் என்பதை சற்றுப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியிருக்கின்றது.

---



## அருப்பையா கங்காணி

**த.யுவராஜ்**

**கங்காணி:** *பெரிய காணப்புள்ள வாராரு. எல்லாரும் நெரைக்கு வாங்க.*

*(கங்காணியின் குரல் கேட்டும் தமது நிறைகளுக்கு வந்த பெண்கள் கொழுந்து பறிக்கத் தொடங்கினர்.)*

**கங்காணி:** *என்னங்கடி நாங்க சொன்னா கேக்க மாட்டிங்க. பெரியயையா வாராருனு சொன்னதும் பம்மிக்கிட்டு வந்து நெரையில நிக்கிறீங்க.*

**லெச்சுமி:** *ஆமா இவரு பெரிய தொர. இவரு சொன்னா நாங்க கேக்கனுமா சும்மா போங்கண்ணே.*

**கங்காணி:** *என்னடி லெச்சுமி வாய் நீலுது. என்ன கத. ராத்தல கொரைக்கனுமா?*

**லெச்சுமி:** *ஆமா நாங்க வாய் பேசுனா ராத்தல்ல தானே கை வைப்பீங்க. வேற என்ன முடியும் உங்களால.*

**கங்காணி:** *அது சரி ரமணி கத என்னச்சி. ஆளயே காணொம்.*

**லெச்சுமி:** *அந்த அக்கா இன்னக்கி எம்இஓ. எச் ஒப்பீஸ்க்கு போயிருக்கு.*

**கங்காணி:** *ஏ அங்க வேலைக்கு சேந்துருச்சோ?*

**லெச்சுமி:** *அட நீங்க வேறண்ணே. அந்த அக்காவுட்டு பெரிய மகனோட சம்சாரத்துக்கு பபா இல்ல தனே அதா செக் பண்ண போயிருக்கு.*

**கங்காணி:** *ஏ அங்க போயிருக்கா?*

**லெச்சுமி:** *அங்க தானே செக் பண்ணி பாப்பாங்க*

**கங்காணி:** *நா அன்னக்கி ஒரு செய்தி கேட்டே லெச்சுமி.*

**லெச்சுமி:** *என்ன செய்தி அண்ணே?*

**கங்காணி:** *நம்ம மலையகத்த பொறுத்தவரைக்கும் புள்ளைங்க பொறக்குற அளவு கொரஞ்சி போயிடுச்சாம். அத திட்டம் போட்டு கொறைக்குறாங்களாம்.*

**லெச்சுமி:** *அது எப்படிண்ணே முடியும்?*

**கங்காணி:** *மலையகத்துல மத்த எடங்கள விட வறும கூட. அதுநால புள்ளைங்கள வளக்க முடியாது ரொம்ப செலவாகும். அது இதுனு சொல்லி நம்ம மக்கள் மனச மாத்துவாங்க.*

*உண்மதா நம்ம ஆளுங்க கஸ்ட்டதுல தா இருக்காங்க. ஆனா பெத்த புள்ளைங்கள கஸ்ட்டதுல விட மாட்டாங்க.*

**லெச்சுமி:** *அதுனா உண்ம தாண்ணே. ஆனா இந்த விசியத்த தெளிவா சொல்லுங்கண்ணே. சரியா புரியல.*

**கங்காணி:** *அது என்னன்னா நம்ம புள்ளைங்க கல்யாணம் கட்டின உடன எம்.ஓ.எச்க்கு வர சொல்லுவாங்க. அங்க அவங்களுக்கு கிளாஸ் எடுப்பாங்க.*

*அதுல மொத அவங்க வயச கேப்பாங்க. பெறகு அவங்க வயசுக்கு ஏத்த மாறி உங்களுக்கு ஒரு கொழந்த போதும் இல்லனா ரெண்டு கொழந்த பெத்துக்களாம்னு சொல்லுவாங்க.*

*அது நல்ல விசியம் தா. ஆனா ஒரு கொழந்த பொறந்த பெறகு வீடு வீட்டுக்கு மீட்டைப் வருவாங்க. வந்து குடும்ப நெலமைய சொல்லி சொல்லி நீங்க கஸ்ட்டத்துல இருக்கீங்க. ஒங்களுக்கு ஒரு கொழந்த போதும். ரெண்டு மூனு போனுச்சினா ரொம்ப கஸ்டப்படுவீங்க.*

*இதெல்லா கேட்ட நம்ம ஆளுங்க நீங்க சொல்றது சரிதானு அவங்க சொன்னதுக்கு தலைய ஆட்டிக்கிட்டு ஒத்துக்குவாங்க.*

*நம்ப ஆளுங்கள மூள சலவ செய்றதுக்கு இந்த ஆளுங்க கைல எடுக்குற கடைசி ஆயுதம் நம்ம வறுமை. அத சொல்லி சொல்லியே நம்ம மண்டைய கழுவிருவாங்க .*

*இதெல்ல உண்மனு நம்பி நம்பியே நம்ம ஆளுங்க முட்டாளா வாழ்ந்துட்டு போயிடுவோம்.*

**லெச்சுமி:** *ஆனா அவங்க சொல்றதும் சரிதானே அண்ணே. இதுல என்ன தப்பு இருக்கு.*

*எனக்கும் மொத மகன் கெடச்சதும் இப்படி தா மீட்டைப் சொன்னிச்சு. நானும் எங்க வீட்டுக்காறரும் ஒத்துக்கிட்டோம்.*

**கங்காணி:** *அதா நா சொன்னனே. நம்ம ஆளுங்கவுட்டு வறுமைய சொல்லி சொல்லியே நம்ம மண்டைய கழுவுவாங்கனு இப்போ வெளங்குதா*

**லெச்சுமி:** *அவங்க சொல்றது சரி தானே அண்ணே.*

**கங்காணி:** *அவங்க சொல்ற நெலம சரியா தா இருக்கும். இது அரசியல் ரீதியா ரொம்ப மோசமான விசியம்.*

**லெச்சுமி:** *– அது என்னாண்ணே அரசியல் கத.*

**கங்காணி:** *– இப்போ பாரு நம்ம நாட்டுல 1990கள்ள சிங்கள மக்கள் அதிகமா அதாவது, மொத்த சனத்தொகையில 66 சதவீதம் பேரா இருந்தவங்க. இப்போ 74 சதவீதம் பேர் இருக்காங்க. ஆனா அதே 90கள்ள 12 சதவீதமாக இருந்த நம்ம மலையக தமிழ் அக்கள் இப்ப வெறும் 4 சதவீதம் பேர் தா இருக்காங்க. கிட்டத்தட்ட 8 சதவீதம் பேர். கிட்டதட்ட ஏழு லச்சம் பேர் இல்லாம போயிட்டாங்க. இது தா அரசியல்.*

**லெச்சுமி** *என்னண்ணே சொல்றீங்க. 7 லச்சம் பேர்ன லேசுபட்ட கதையா இது.*

**கங்காணி** *– அதுநால லெச்சுமி இந்த அரசியல் சங்கதிங்கள்ளா தெரிஞ்சிக்காம பத்தோட பதினொன்னா இருந்துட்டு போறது நல்லது லெச்சுமி.*

*(எல்லாரும் நெறுவைக்கு வாங்க – கங்காணியின் குரல் கர்ஜித்தது.)*

# பிழையற்ற தமிழ் அறிவோம்

### பதட்டமா - பதற்றமா?

நம் மக்களின் பேச்சு வழக்கிலும் எழுத்திலும் 'பதட்டம்' எனும் சொல் நிரம்பப் பயன்பாட்டில் உள்ளது. இச்சொல்லுக்குப் பொருள் இல்லை. இது 'பதற்றம்' என்று இருத்தல் வேண்டும். 'பதறு', 'பதற்றம்' எனும் சொற்கள் சரியானவை; பொருளுடையவை. இனி 'பதட்டம்' விட்டு 'பதற்றம்' கொள்ளுவோம்.

### கண்றாவி / கண்ணராவி

இப்படி ஒரு சொல் எந்த அகர முதலியிலாவது (அகராதி) பார்த்ததுண்டா? இப்படி ஒரு சொல் இல்லவே இல்லை. ஆனால், பத்திரிகை, தொலைக்காட்சிச் செய்திகளில் பார்க்கிறோம். கேட்கிறோம். மிகக் கொடிய - காண்பதற்குக் கூடாத காட்சியை இப்படிச் சொல்லி வருகிறோம். இது கண் அராவும் காட்சி. ஆதலின் இச்சொல் 'கண்ணராவி' என்றிருத்தல் வேண்டும். (அராவுதல் - இரும்பால் தேய்த்தல், அறுத்தல்)

### ஊர்ப் பெயர்த் திரிபுகள்

பயன்பாட்டிலுள்ள பல சொற்கள் எப்படிப் பிழையானவை என்பது பற்றி எடுத்துக்காட்டுகள் வழியாகப் படித்தீர்கள். இவ்வாறே பல ஊர்களின் பெயர்கள் சிதைந்து, பொருள் திரிந்து வழங்கப்பட்டு வருகின்றன. ஆறுகளால் பெயரமைந்த ஊர்கள் உண்டு. எடுத்துக்காட்டாக 'அடையாறு', 'செய்யாறு', 'திருவையாறு' எனும் பெயர்களைக் காண்க.

'அடையாறு' என்பதை 'அடையார்' என்று எழுதுகிறார்கள். பேருந்துகளிலும் பெயர்ப்பலகைகளிலும் காண்கிறோம். 'அடையார்' என்றால் அடையமாட்டார் என்று பொருள். இனிப்பகம் ஒன்று 'அடையார்' எனும் சொல்லோடு பயன்பாட்டில் உள்ளது. அந்த இனிப்பகத்தை யாரும் சென்றடையமாட்டார்களா? எவ்வளவு பெரிய தவறு இது?

செய்ய நீர் (சிவந்த நீர் - புதுவெள்ளம்) ஓடிய ஆறு 'செய்யாறு'. அந்த ஆற்றின் பெயரமைந்த ஊரைச் 'செய்யார்' என்று எழுதியுள்ளார்கள். செய்யமாட்டார் என்ற பொருள் இதற்குண்டு. என்ன செய்யமாட்டார்? ஏன் செய்யமாட்டார்? இப்படிச் சிதைக்கலாமா?

தஞ்சை அருகே 'திருவையாறு' எனும் திருத்தலம் ஒன்றுள்ளது. ஐந்து ஆறுகள் அருகருகே ஓடிச் செழித்த மண் இது. இந்தத் திருவையாற்றைத் 'திருவையார்' என்றெழுதுகிறார்கள். திருவையுடையவர் இவர் என்று பொருள் சொல்லலாமா? அல்லது திரிகை (மாவு அரைக்கும் சிறு கருவி) எனும் சொல்லை 'திருவை' என்று பாமரர் சொல்லுவர். இவர் 'திருவையார்' என்பதா? என்ன கொடுமை இது?

ஆறுகளின் பெயர்களும் இப்படி ஆர் விகுதியோடு வழங்கப்பட்டு வருகின்றன. 'காட்டாறு' என்பதைக் 'காட்டார்' (காட்டமாட்டார்) என்றும் புது ஆறு - 'புத்தாறு' என்பதைப் 'புதார்' என்றும் 'குடமுருட்டியாறு' என்பதைக் 'குடமுருட்டியார்' (குடத்தை உருட்டியவர்) என்றும் 'ஓடம்போக்கியாறு' என்பதை 'ஓடம் போக்கியார்' (ஓடத்தைப் போக்கியவர்) என்றும் வழங்குதல் பிழையன்றோ?

வேறு சில ஊர்ப்பெயர்கள் வெவ்வேறு வகையில் சிதைந்து பிழையுறப் பயன்பாட்டில் உள்ளன. (பழைய) சோழநாட்டின் கோடியில் (கடைசியில்) இருந்த கடற்கரை ஊரைக் 'கோடிக் கரை' என்றனர். இப்போதும் தமிழ்நாட்டின் வரைபடத்தைப் பார்த்தால் கிழக்குக் கோடியில் ஒரு புள்ளியாக அவ்வூர் அமைந்துள்ள இடத்தைக் காணலாம். அதனை இன்று 'கோடியக்கரை' என்று எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். ஒருகால் வளைந்த கரை என்னும் பொருளுடையது என்றால் 'கோடிய கரை' என்று 'க்' போடாமல் எழுத வேண்டும். (கோடுதல்-வளைதல்; கோட்டம்-வளைவு)

ஆனால், இந்த ஊர்க் கடற்கரையில் கோட்டம் (வளைவு) எதுவும் இல்லை. 'ட்' எனும் எழுத்தை இடம் வலமாக மாற்றிப் போட்டதுபோல் இரண்டு நேர்க்கோடுகளின் சந்திப்பாக அவ்விடம் இருப்பதைப் படத்தில் காணலாம். ஆதலின் 'கோடிக்கரை' என்றே குறித்தல் பிழையற்றது.

**(தமிழ் வளரும்)**
**( நன்றி தினமணி)**

## குறுக்கெழுத்துப் போட்டி - 56

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | | 2 | 3 | | | |
| | ■ | 4 | | 5 | ■ | | ■ | | ■ |
| 6 | | ■ | ■ | 7 | | ■ | 8 | | |
| | ■ | | | 9 | ■ | 10 | ■ | 11 | ■ |
| ■ | | 12 | ■ | | | 13 | | ■ | 14 |
| | 15 | ■ | 16 | ■ | 17 | ■ | | ■ | |
| ■ | | ■ | | | 18 | ■ | | 19 | ■ |
| 20 | | ■ | | ■ | ■ | ■ | | ■ | 21 |
| ■ | | 22 | ■ | | 23 | | 24 | ■ | |
| ■ | ■ | | ■ | ■ | | ■ | ■ | | 25 |

**இடமிருந்து வலம்**
01. வீண் செலவுக்காரன்.
04. ஓர் எண்.
06. வஞ்சனை.
07. முளையினின்றும் வெளிப்படும் இளஞ்செடி.
08. புருவங்களுக்கு மேலுள்ள முகப்பகுதி.
20. தொண்டு.

**மேலிருந்து கீழ்**
01. சிறுவர்களுக்கான ஆடும் பலகை.
03. ஒருவகைப் பாண்டம்.
10. துன்புறுத்தல்.
14. சொல்.
16. துன்பம் (குழம்பியுள்ளது).
21. மரியாதையாக நடத்தல்.
22. விறகை எரித்தால் வருவது.
23. பழுப்பு நிற உடை.

**கீழிருந்து மேல்**
04. குதிரையை இப்படி அழைப்பர்.
05. கப்பல் தங்கும் கடற்கரைப் பட்டினம் (குழம்பியுள்ளது).
11. முண்டுகொடுத்தல் எனலாம் (குழம்பியுள்ளது).
12. இழை.
15. எங்கும் கொண்டுசெல்லக் கூடிய தொழில்நுட்பக் கருவி. (குழம்பியுள்ளது).
17. ஓவியனின் எழுதுகோல் (குழம்பியுள்ளது).
24. திரைகடல் ஓடியும் இதனைத் தேடு என்பர் (குழம்பியுள்ளது).

**வலமிருந்து இடம்**
02. இரகசியத்தை வெளிப் படுத்தல் (குழம்பியுள்ளது)
09. தானியக் கொத்து.
12. இரத்தக்குழாய்.
13. துணிவு (குழம்பியுள்ளது).
15. சமையல் வேலை.
18. கைத்தொழில்.
19. பூமி.
22. பழம்.
24. திருகுள்ள ஆணி.
25. ஒன்றை எரிக்கும்போது வெளிப்படும் படலம்.


**மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 55 க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 நே | ர | ம் | ■ | 2 மா | ■ | ■ | டு | ட் | 3 ப |
| ர் | ■ | பு | ■ | 4 வி | யா | தி | ■ | ■ | க் |
| த் | 5 ப | 6 து | ■ | லை | ■ | ■ | 7 ம | ந் | தி |
| தி | ■ | ■ | ■ | ■ | 8 வா | ழை | ■ | ■ | ■ |
| ■ | 9 பு | த | ல் | 10 வ | ன் | ■ | தி | ந் | 11 ச |
| 12 த | த் | ■ | ■ | ற | ■ | ■ | ■ | ■ | ந் |
| ■ | தி | ■ | 13 அ | ற் | று | ■ | ■ | ■ | த |
| 14 து | 15 சா | ந் | ■ | ல் | ■ | ■ | ■ | ■ | ன |
| ணி | லி | ■ | 16 ப | ■ | ■ | 17 ம | க | ர | ம் |
| வு | ■ | 18 உ | டை | ■ | ■ | ல் | ■ | ■ | ■ |

**சரியான விடைகளை அனுப்பியவர்**
**திருமதி. ஸ்ரீஜீவரஞ்சனி - சுண்டுக்குழி**

# மோடியின் அமெரிக்க பயணம் - ஒரு பார்வை!



பிரதமர் நரேந்திர மோடி - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இடையே அண்மையில் நடைபெற்ற வொஷிங்டன் சந்திப்பு இரு தரப்புகளாலும் திருப்திகரமானதென சொல்லிக்கொள்ளப்பட்டாலும் அதில் இரு தரப்புகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல அம்சங்களை அவர்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்கிற எதிர்பார்ப்பை எழுப்புகிறது.

இந்தியாவில் தயாரிப்போம், இந்தியாவே முதலில் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கருத்தாக்கத்தைப்போலவே அமெரிக்காவே பெரியது, அமெரிக்காவே முதலில் போன்ற கருத்தாக்கத்தை ஜனாதிபதி ட்ரம்ப் பிரதிபலிக்கிறார். தேசியவாத சிந்தனைமிக்க இந்தத் தலைவர்களின் கைகோர்ப்பு, எதிர்கால புவிசார் அரசியலை வடிவமைப்பதில் இந்தியாவின் முக்கியத்துவத்தை எளிதில் புறந்தள்ளிவிட முடியாதென்பதை உணர்த்துகிறது.

ஜனாதிபதி ட்ரம்ப்பைப் பொறுத்தவரை மெக்சிகோ, கனடா மற்றும் சீனாவை இலக்கு வைக்க அவர் பயன்படுத்தும் புதிய ஆயுதங்கள், வணிகம் மற்றும் வரி விதிப்பு நடவடிக்கைகள். ஒருவேளை அமெரிக்க டொலரைக் குறைத்து மதிப்பிடும் வகையில் தனி நாணயம் போன்ற நடவடிக்கையை இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகள் முன்னெடுத்தால் பிறகு 100 சதவீத வரிகள் விதிக்கப்படுமென ட்ரம்ப் விடுத்த அச்சுறுத்தல், இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் உறுப்புநாடுகளைக் கலக்கமடையச் செய்துள்ளது.

140 இந்தியர்கள், 23 நாடுகளைச் சேர்ந்த 28 வெளிநாட்டினர் கொல்லப்பட்ட 2008 மும்பைத் தாக்குதல் சதித் திட்டத்தைத் தீட்டிய டேவிட் ஹெட்லியுடன் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்த கனடா குடியுரிமை பெற்ற பாகிஸ்தானிய வம்சாவளி தஹாவூர் ஹுசைன் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த ட்ரம்ப் ஆதரவளித்திருப்பது பிரதமர் மோடியின் ராஜீய உத்தியின் வெற்றியாகப் பார்க் கப்படுகிறது. தற்போது ராணா லொஸ் ஏஞ்சல்ஸ் பெருநகர தடுப்புக் காவல் நிலையத்தில் அடைக்கப் பட்டுள்ளார்.

கைவிலங்கு பூட்டப்பட்ட நிலையில், அண்மையில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் விவகாரத்தில் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்தவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு அந்த இந்தியர்களைத் திருப்பியனுப்பினால் ஏற்றுக் கொள்வதாக பிரதமர் மோடி அமெரிக்காவில் அறிவித் துள்ளார். இது ஜனாதிபதி ட்ரம்ப்பின் ராஜீய உத்திக் குக் கிடைத்த வெற்றியாக அமெரிக்காவில் பார்க்கப் படுகிறது.

திறமையான இந்திய நிபுணர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஹெச்-1பி விசா திட்டத்தின் மூலம் திறந்த வாய்ப்புகளை வழங்க அமெரிக்காவை இந்தியா வற்புறுத்தியுள்ளமை இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுவோருக்கு சாதகமான விஷயம்.

ஏற்கனவே முந்தைய ஜோ பைடன் ஆட்சியின் போது நீடித்த ரஷ்யா மீதான அமெரிக்கத் தடை அச்சுறுத்தலுக்கு மத்தியில் ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 ஏவுகணை அமைப்புகளை வாங்கியமை மற்றும் சலுகை விலையில் ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ததன் மூலம் அந்நாட்டுடனான தனது பாதுகாப்பு மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பை இந்தியா தக்க வைத்தமை உள்ளிட்டவை அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டின.

இதேபோல, ஈரானுடனான இந்தியாவின் வர்த்தக உறவுகள் மீதும் அமெரிக்கா அதிருப்தி கொண்டிருந்தது. இருப்பினும், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுடனான தனது உறவுகளை மேம்படுத்த ஈரானை முக்கிய எரிசக்தி ஆதாரமாகவும் ஒரு முக்கிய கூட்டாளியாகவும் இந்தியா காண்கிறது. ஆனால், அந்நாடு மீதான அமெரிக்கத் தடைகள் ஈரானுடனான இந்தியாவின் உறவுகளைச் சிக்கலாக்கியுள்ளது. இதன் விளைவாக ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதியை இந்தியா குறைத்துக்கொண்டது.

இந்தியாவில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள க்வாட் நாடுகளின் உச்சிமாநாட் டில் கலந்துகொள்ள ஜனாதிபதி ட்ரம்ப் பிரதமர் மோடியிடம் இசைவு தெரிவித்துள்ளார். இந்த வருகை மூலம் இரு நாடுகளின் நல்லுறவுகள் மேலும் வலுப்பட வாய்ப்புள்ளது. வர்த்தகம் மற்றும் வரிகள் விவகாரத்தில் மோடியும் ட்ரம்ப்பும் நேர்மறையான அணுகுமுறையைக் கையாள்வதன் பிரதிபலிப்பாக 50,000 கோடி டொலர் வருடாந்த பரஸ்பர வர்த்தக இலக்கை நிர்ணயித்துக்கொள்ள இரு நாடுகளும் முடிவுசெய்துள்ளன. அநேகமாக இதற்கான ஒப்பந்தம் ட்ரம்ப்பின் இந்திய வருகையின்போது சாத்தியமாகலாம்.

ரஷ்யாவுடனான இந்திய உறவு அமெரிக்காவின் மற்றொரு கவலையாகும். குறிப்பாக, உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு படையெடுப்புக்குப் பிறகும் ரஷ்யாவுடன் தொடரும் இந்திய உறவு குறித்து சில மேற்கு நாடுகளும் அதிருப்தி கொண்டுள்ளன. புதிய ஜனாதிபதி ட்ரம்ப் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகிறாரென மேற்கு நாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியுள்ளன. ட்ரம்ப்பிடம் நேரடியாக உரையாடி சாத்தியமிக்க அமைதியை பிரதமர் மோடி பெற்றுத்தரக்கூடுமென உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி நம்புகிறார்.

ஒரேநேரத்தில் அமெரிக்கா, ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் நேசக்கரம் நீட்டும் இயல்பை பிரதமர் மோடி பெற்றுள்ளதால் அவரது பேச்சை இந்த மூன்று நாடுகளின் தலைமைகளும் கேட்கக்கூடும். ஒருவேளை இந்தத் தந்திரத்தில் மோடி வெற்றிபெற்றால் அது ரஷ்யா - உக்ரைன் பதற்றத்தைத் தணிப்பது மட்டுமன்றி, மோடியை சர்வதேச தலைவராக உலக நாடுகள் அங்கீகரிக்கும் சூழலை எளிதாக்குமென்பது சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் பார்வை.

முந்தைய ஆட்சியாளரைப் போலல்லாமல் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் உறவைப் புதுப்பிக்க பிரதமர் மோடியின் துணை உதவக்கூடுமென்பது ட்ரம்ப்பின் கணக்கு. ஆனால், ஆசியா நோக்கி விரிவடைந்துவரும் அமெரிக்காவின் செல்வாக்கை சீனா விரும்பவில்லை. ஏற்கனவே தென்சீனக் கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராக அமெரிக்கா குரல் கொடுத்து வருகிறது. இப்போது இந்தியாவுடனான நெருக்கம் மூலம் அமெரிக்கா மேலும் அருகே வருவதை தனது பிராந்தியத்துக்கான அச்சுறுத்தலாக சீனா காண்கிறது.

ட்ரம்ப் - மோடியின் சந்திப்பு குறித்து அண்மையில் செய்தியாளர்களை பீஜிங்கில் சந்தித்த சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் ஆசிய - பசிபிக் முகமை என்பது அமைதி மேம்படுவதற்கான இடமாக நீடிக்கவேண்டுமே தவிர, புவி-அரசியல் மோதலை தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பாக இருக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். இந்த எதிர்வினை உலக வல்லரசுகளுக்கு மத்தியில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகிவரும் இந்தியாவின் வளர்ச்சி குறித்த புரிதலை உணர்த்துகிறது.

அடுத்து என்ன செய்வார், எப்படிச் செய்வார் என்பதைக் கணிக்க முடியாத தலைவரான டொனால்ட் ட்ரம்ப்பை மிகவும் கவனத்துடன் பிரதமர் நரேந்திர மோடி கையாள வேண்டுமென சர்வதேச வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். தனது தேச நலன்களுக்காக இந்தியாவுடனான உறவை ட்ரம்ப் சமரசம் செய்து கொள்ள மாட்டார் என்பதற்கு அவரது கடந்த கால வரலாறு சாட்சி.

எனவே, பரஸ்பர நம்பிக்கையுடனும் நாணயத் துடனும் செயற்பட்டால் அது இரு தரப்புக்கும் நல்லது.

**நன்றி - தினமணி**




# இயக்குநராக ஹாட்ரிக் வெற்றிபெறுவாரா தனுஷ்?

தமிழ்ச் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவரான தனுஷ், இயக்குநராகவும் இருக்கிறார். அவரது இயக்கத்தில் பவர் பாண்டி, ராயன் ஆகிய படங்கள் இதற்கு முன்பு வெளிவந்தன. பவர் பாண்டி படம் சுமாரான வெற்றியாகவும், ராயன் படம் 100 கோடி வெற்றியாகவும் அமைந்தன.

அவரது இயக்கத்தில் மூன்றாவது படமாக உருவாகியுள்ள 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' படம் கடந்த வெள்ளிக்கிழமை (21ஆம் திகதி) வெளியாகியது. பவர் பாண்டி படத்தில் பிளாஷ்பேக்கிலும் ராயன் படத்தில் முழுமையாகவும் நடித்த தனுஷ் இந்தப் படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளார். முதலிரண்டு படங்களும் முக்கிய நடிகர்கள், நடிகைகள் நடித்த படம்.

ஆனால், 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' படம் அறிமுக மற்றும் வளரும் நட்சத்திரங்கள் நடித்துள்ள படம். அதனால், இந்தப் படம் வெற்றிபெறும் பட்சத்தில் இயக்குநராக தனுஷின் இமேஜ் இன்னும் உயரும். இப்படத்தின் பாடல்களுக்கும் டிரைலருக்கும் ஏற்கனவே இளைஞர்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ளதால் படமும் வரவேற்புப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனுஷின் இயக்கத்தில் நான்காவது படமாக 'இட்லி கடை' உருவாகி வருகிறது. அப்படம் ஏப்ரல் 10ஆம் திகதி வெளியாகிறது. இந்த வருடம் தனுஷ் இயக்கத்தில் இரண்டு படங்கள் வெளியாகின்றமை ஆச்சரியம்தான்.

# திவ்யபாரதி குறித்து சில குறிப்புகள்



நடிகை திவ்யபாரதி பகிர்ந்த சமீபத்திய புகைப்படங்கள் ரசிகர்களிடையே கவனம் பெற்றுள்ளன.

கோவையைச் சேர்ந்த திவ்யபாரதி மொடலிங்கில் கவனம் செலுத்தி வந்த பின்னர் 2021இல் சினிமா வாய்ப்புக் கிடைத்தது. ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் வெளியான 'பேச்சுலர்' படத்தின் மூலம் தமிழ்ச் சினிமாவில் அறிமுகமானார்.

கடந்த ஆண்டு வெளியாகி ரசிகர்களின் வரவேற்பைப் பெற்ற 'மகாராஜா' படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

'மதில் மேல் காதல்' என்ற படத்தில் நடித்து வருகிறார் திவ்யபாராதி.

இதனிடையே, மீண்டும் ஜி.வி.பிரகாஷுடன் இவர் இணைந்து நடித்துள்ள 'கிங்ஸ்டன்' படம் மார்ச் 7இல் ரிலீஸாகிறது.

தொடர்ச்சியாக இணைந்து நடித்ததால் இருவரும் டேட்டிங் செய்வதாக தகவல் வெளியான நிலையில், அதை ஜி.வி.பிரகாஷ் - திவய்பாரதி இருவருமே திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

இந்த வதந்தி குறித்து கூறும்போது, "எனக்கும் பலர் மெசேஜ் அனுப்புவார்கள். சில சமயங்களில் கஷ்டமாக இருக்கும்" என்றார்.

வதந்திகளை எல்லாம் கடந்து, கெரியரில் கவனம் செலுத்தும் திவ்யபாரதி தனது சமூக வலைத்தளப் பக்கங்களிலும் ரசிகர்களை எங்ஜேகிங்காக வைத்துக் கொள்கிறார்.




# தனிமை பயங்கரமானது -சமந்தா



தனியாக இருப்பது பயங்கரமானது என்று நடிகை சமந்தா கூறியுள்ளார்.

தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் சமந்தா, தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவை காதலித்து மணந்து பின்னர் விவாகரத்து செய்து பிரிந்தார். தசை அழற்சி நோயில் சிக்கி சிகிச்சை பெற்று குணமடைந்து, தற்போது மீண்டும் படங்களில் பிஸியாக நடித்து வருகிறார். வருண் தவானுடன், சமந்தா நடித்த ஹனி பன்னி வெப் தொடருக்கு விருது கிடைத்துள்ளது.

சமூக வலைத்தளத்தில் பிசியாக இயங்கிவரும் சமந்தா இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் வெளியிட்டுள்ள பதிவில், ''நான் மூன்று நாட்கள் தொலைபேசியை பயன்படுத்தாமல் அதை விட்டு விலகி இருந்தேன். மூன்று நாட்களும் மௌனமாக இருந்தேன். தொலைபேசியை தொடவே இல்லை. யாருடனும் தொடர்பு கொள்ளவில்லை. என்னோடு நான் மட்டுமே இருந்தேன். நம்மோடு நாம் தனியாக இருப்பது கஷ்டமானது. பயங்கரமானது. ஆனால், இப்படி மௌனமாக இருப்பதை நான் விரும்புகிறேன். பல மில்லியன் தடவைகள் இப்படி தனியாக இருக்கும்படி சொன்னாலும் இருப்பேன். நீங்களும் இப்படி இருக்க முயற்சி செய்யுங்கள்" என்று கூறியுள்ளார். சமந்தாவின் இந்தப் பதிவு வைரலாகிறது.

# கலைவாணரின் கலையுலக வாரிசுகள்!







1957ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஜி.ஆருடன் 'சக்கர வர்த்தித் திருமகள்', சிவாஜி கணேசனுடன் 'அம்பிகாபதி' ஆகிய படங்களில் நடித்துக்கொண்டிருக்கும்போது அதே ஆண்டில் காலமானார். 1957க்கு முன்பு திரையுலக மூவேந்தர்களுடன் ஒருசில படங்களில் நடித்துள்ளார். ஜெமினி கணேசனுடன் 'யார் பையன்' படத்திலும் நடித்துள்ளார்.

இவரும் மதுரமும் 'மதுரை வீரன்' (1956) படத்தில் ''ராஜகுமாரி ராஜகுமாரி....'' எனப் பாடும் பாடல் காட்சியை மறக்கத்தான் முடியுமா?

அற்புதமான இக்கலைவாணரின் முக்கிய சீடர்களில் காக்கா ராதாகிருஷ்ணன் மிக நெருக்கமானவர். மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.



'மனோகரா' (1954) படத்தில் இவர் ஏற்று நடித்த வசந்தன் கதாபாத்திரம் மறக்க முடியாதது. 'மங்கையற்கரசி' படத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் இவரிடம், ''பெரியவர்களிடம் பழகனுமுனா காக்கா புடிக்கத் தெரியணும்'' என்று சொல்ல, இவர் உண்மையான காக்கையை பிடித்துக்கொண்டு வந்து நிற்பார். இதிலிருந்து இவர் காக்கா ராதாகிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டார்.



இவர் சொந்த வாழ்க்கையில் யாரையும் காக்கா பிடிக்கத் தெரியாதவர். தான் கொண்ட கொள்கைக்காக எதையும் எதிர்க்கவும் எதிர்ப்புகளைச் சந்திக்கவும் துணிவுடையவர். இதனாலேயே இவருக்குப் படச் சான்ஸ்கள் குறைந்து போயிருக்கலாமே தவிர, திறமை குறைவானவர் என்பதால் இருக்க முடியாது. நகைச்சுவையில் 'டைமிங்' மிக முக்கியம். அதை மற்றவர்கள் – அதாவது இன்றைய நகைச்சுவை நடிகர்கள் இவரது நடிப்பைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். மனோரமாவின் முதற் படமான 'மாலையிட்ட மங்கை' படத்தில் இவர் மனோரமாவுக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

அடுத்து நாம் சி.என்.பாண்டியனைப் பார்ப்போம். இவர் என்.எஸ்.கிருஷ்ணனின் சீடராகத் திகழ்ந்தவர். கலைவாணரின் சீடராக இருந்ததால் நடிப்பில் அவரின் அறுசுவையை சி.என்.பாண்டியன் நடிப்பில் பார்க்கலாம். நிறைய நாடக அனுபவமுள்ள இவர் தன்னுடன் நடிப்பவர்களிடம் நல்ல திறமை இருந்தால் அவர்களது நடிப்பை உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பார். இதனால் தன்னைவிட அவர்கள் கை ஓங்கிவிடுமே என்றெல்லாம் யோசித்துப் பார்த்து அமுக்கிவிட மாட்டார்.

கலைவாணரின் கலையுலக வாரிசுகளில் குலதெய்வம் ராஜகோபாலும் ஒருவர். 'குலதெய்வம்' படத்தில் நடித்ததன் மூலம் குலதெய்வம் ராஜகோபால் ஆனார். சின்னக் கலைவாணர் என்று அனைவராலும் செல்லமாக அழைக்கப்பட்ட இவர், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி பக்திநெறியைப் பரப்பியவர்.

1960ஆம் ஆண்டு வெளிவந்த 'மன்னாதி மன்னன்' படத்தில் டைட்டிலில் எழுத்துடன் குதிரை வண்டியில் எம்.ஜி.ஆரின் வாயசைவில் பாடப்படும் ''அச்சம் என்பது மடமையடா....'' பாடல் காட்சியில் இவரும் தோன்றியிருந்தார். இவர் எம்.ஜி.ஆரின் 'மாடப்புறா' (1962), 'சந்ரோதயம்' (1966) போன்ற படங்களிலும் நகைச்சுவை நடிகராக வலம் வந்தார்.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**

# ஆசைமுகம்

# ஸ்வீட் சிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்



எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்து ஏராளமான படங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் அவர் மூன்று வேடங்களில் நடித்த படமொன்றும் இருக்கிறது. அதுதான் ஆசைமுகம். எம்.ஜி.ஆரின் ஆசைமுகம் என்று சொல்லும் வர்ணப் படத்துக்கு இந்தப் பெயரை வைத்தவர் வசனகர்த்தா ஆரூர்தாஸ். இந்த ஆசைமுகத்தில் எம்.ஜி.ஆர். மூன்று முகங்களைக் காட்டி நடித்திருந்தார்.

பெரிய நிறுவனங்களான தேவர் பிலிம்ஸ், விஜயா கம்பைன்ஸ், ஏவிஎம் போன்றவர்களின் படங்களில் நடிக்கும் சமயம் அவ்வப்போது சிறிய, புதிய தயாரிப்பாளர்களின் படங்களிலும் நடித்துக் கொடுப்பது எம்.ஜி.ஆருக்கு வாடிக்கை. அந்த விதத்தில் புதிய தயாரிப்பாளரான பி.எல்.மோகன்ராம் தயாரித்த இந்தப் படத்திலும் நடிக்க எம்.ஜி.ஆர். ஒப்புக்கொண்டார்.

தமிழ்ச் சினிமாவில் பிரபல ஹீரோயினாக ஒரு காலத்தில் திகழ்ந்தவர் எம்.ஆர்.சந்தானலக்ஷ்மி. எம்.கே.தியாகராஜ பாகவதருடன் இவர் அமராவதியாக நடித்த 'அம்பிகாபதி' படம் பெரும் வெற்றி கண்டது. இவரின் மகளை திருமணம் செய்திருந்த மோகன்ராம், இயக்குநர் பி.புல்லையா, ஏ.காசிலிங்கம் இருவரிடமும் உதவி டைரக்டராக பணிபுரிந்து விட்டு சொந்தப் படம் எடுக்கும் ஆசையில் எம்.ஜி.ஆரை அணுகினார். ஏற்கனவே எம்.ஜி.ஆருக்குப் பரிச்சயமானவர் என்பதால் எம்.ஜி.ஆரும் இசைந்தார்.

தன் கைக்கு அடக்கமான தயாரிப்பாளர் என்றவுடன் எம்.ஜி.ஆர். தனக்கு வேண்டிய விதத்தில் சில ஆலோசனைகளை முன்வைத்தார். படத்தை ப.நீலகண்டன் இயக்கவேண்டும், ஆரூர்தாஸ் வசனம் எழுதவேண்டும், தனக்கு வேண்டிய எஸ்.எம்.சுப்பையா நாயுடு இசையமைக்க வேண்டும், கதாநாயகி சரோஜாதேவி என்று எம்.ஜி.ஆர். சொன்னதில் எஸ்.எம்.எஸ். இசையமைப்பதையும், சரோஜாதேவி ஹீரோயினாக நடிப்பதையும் மோகன்ராம் ஏற்றுக்கொண்டார்.

ஆனால், தன் குரு புல்லையாவை டைரக்ட் பண்ணவும் வசனங்களை துறையூர்மூர்த்தி எழுதவும் ஏற்கனவே பேசிவிட்டேன் என்று அவர் சொல்லவும் எம்.ஜி.ஆர். அரை மனதோடு அதற்கு உடன்பட்டார். படப்பிடிப்பு தொடங்கி சில தினங்களில் வசனகர்த்தா துறையூர் மூர்த்திக்கும் எம்.ஜி.ஆருக்குமிடையில் தகராறு ஏற்பட, படத்திலிருந்து மூர்த்தி ஒதுங்கிக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஆரூர்தாஸ் வசனகர்த்தாவாக அமர்த்தப்பட்டார்.



செல்வந்தர் சிவசங்கரனின் மகன் மனோகர் பூந்தோட்டத்தில் செல்வியைச் சந்திக்கிறான். கண்டதும் காதல் மலர்கிறது. திருமணத்துக்கு நாளும் குறிக்கப்படுகிறது. ஆனால், கல்யாணத் தரகரொருவரின் சதியால் திருமணம் தடைப்படுகிறது.

இதற்கிடையில் மனோகரும் செல்வியும் இரகசியமாகப் பதிவுத் திருமணம் செய்ய திட்டமிடுகிறார்கள். இதே காலகட்டத்தில் வரதன் என்ற நயவஞ்சகன் தன்னுடைய நண்பன் வஜ்ரவேல்



என்பவனுக்கு பிளாஸ்ரிக் சர்ஜரி என்ற முகத்துக்கான அறுவை சிகிச்சையொன்றை செய்து மனோகரின் முகத்துக்கு அவனை மாற்றுகிறான். அவனும் சிவசங்கரனின் வீட்டில் மனோகர் மாதிரி குடியேறுகிறான். இந்த ஆள் மாறாட்டம் தெரியாது செல்வியும் அவனை மனோகர் என்று நம்பிப் பழகுகிறாள். உண்மையான மனோகர் தன்னுடைய பர்மா தாத்தாவின் வேடத்தில் தன் வீட்டுக்கே வந்து போலி மனோகர் செல்வியை நெருங்காவண்ணம் பாதுகாப்பு கொடுக்கிறான். மனோகர் எவ்வாறு தன்னை நிரூபித்துப் போலியை அடையாளப்படுத்தினான் என்பதே மீதிக் கதை.

தமிழுக்குப் புதிதான பிளாஸ்ரிக் சர்ஜரி என்ற கருவைக்கொண்டு படத்தின் கதையை டி.என்.பாலு எழுதியிருந்தார். கதை கோர்வையாக அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு ஆரூர்தாஸ், மூர்த்தி எழுதிய வசனங்களும் துணை நின்றன. யார் எழுதிய வசனம் எது என்று தெரியாவிட்டாலும் இருவரையும் பாராட்டலாம்.

மூன்று வேடங்களில் வரும் எம்.ஜி.ஆரின் பர்மா தாத்தா வேடம் நன்றாக இருந்தது. வளைந்து வளைந்து நடப்பதும், வக்கணையாகப் பேசுவதிலும் கவருகிறார் அவர். வில்லன் வேடத்தை அவர் முழுமனதோடு செய்ததாகத் தெரியவில்லை. சரோஜாதேவி மூன்று எம்.ஜி.ஆருக்கும் ஈடு கொடுக்கிறார். நடிப்பிலும் திறமையைக் காட்டுகிறார்.

இரண்டாவது ஹீரோயினாக வரும் கீதாஞ்சலிக்குக் கிடைத்த வாய்ப்பை அவர் வீணாக்கவில்லை. நம்பியார், ராமதாஸ் என்று இரண்டு வில்லன்கள். இவர்களுடன் கே.டி.சந்தானம், லஷ்மிப்ரபா, கே.ஆர்.ராம்சிங், சி.கே.சரஸ்வதி, கொட்டப்புளி ஜெயராமன், கரிக்கோல் ராஜு, கே.கே.சௌந்தர் ஆகியோரும் நடித்திருந்தனர்.

இவர்கள் எல்லோரும் இருந்தாலும் இன்னும் ஒருவர் படம் முழுவதும் வந்து கலகலப்பைத் தருகிறார். நாகேஷ்தான் அவர். மூன்று எம்.ஜி.ஆர். என்றால் நான்காவது பாத்திரம் நாகேஷ்தான். முழுப் படமும் வந்து ஜமாய்க்கிறார்.



படத்துக்கு இரண்டு வசனகர்த்தாக்கள் என்றால், ஒளிப்பதிவாளர்கள் மூன்று பேர். பி.எல்.ராய். சுப்பராவ், சுந்தரபாபு என்று மூன்று கெமராமேன்கள். ஆளுக்கு ஒரு எம்.ஜி.ஆரை படமாக்கினார்களோ என்னவோ. அதேபோல் ஜம்புலிங்கம், கிருஷ்ணன், தாஸ் என்று மூன்று படத்தொகுப்பாளர்கள். ஸ்டண்ட் மாஸ்டர் ஆர்.என்.நம்பியார் அமைத்த இரண்டு எம்.ஜி.ஆரும் போடும் சண்டைக் காட்சி நன்றாக இருந்தது.

பாடல்களை வாலி எழுத எஸ்.எம். சுப்பையா நாயுடு இசையமைத்தார். ''எத்தனை பெரிய மனிதருக்கு இத்தனை சிறிய மனம் இருக்கு'', ''நாளொரு மேடை பொழுதொரு நடிப்பு அவன் பேர் மனிதனல்ல'', 'உன்னை காதலித்தால் மட்டும் போதுமா'' பாடல்கள் எடுபட்டன.

படத்தின் கதை சற்று புதுமை என்ற போதும் எம்.ஜி.ஆருக்கு எம்.ஜி.ஆர். வில்லன் என்பதை ரசிகர்கள் ரசிக்கவில்லை. அது மட்டுமன்றி, சரோஜாதேவியை எம்.ஜி.ஆர். பலாத்காரம் செய்ய முயலும் காட்சியும் ரசிகர்களுக்கு அலர்ஜியாக இருந்தது.

பி.புல்லையாவின் இயக்கம் ஓகே என்ற போதும் வேறு எம்.ஜி.ஆர். படங்களை அவர் பிறகு இயக்கவில்லை. அதேபோல் இப்படத்துக்குப் பிறகு மோகன்ராமும் எம்.ஜி.ஆர். நடிப்பில் படம் எதுவும் தயாரிக்கவில்லை. ஜெய்சங்கரின் நிரந்தர தயாரிப்பாளராகி விட்டார் அவர். ஆனாலும் மோகன்ராமுக்கு இலாபம் தந்த படமாகவே எம்.ஜி.ஆரின் ஆசைமுகம் திகழ்ந்தது!

s.suntheradas@hotmail.com

# அடுக்களைப் புலம்பல்......

தேங்காய் ஒன்று விலை
இருநூற்றைம்பது
தேங்காய் எண்ணெய் விலை
நூறு ரூபாவாய் அதிகரிப்பு
அரிசி நாளுக்கொரு விலை
உப்புக்கும் வந்ததே ஆப்பு

காலை எழுந்தவுடன்
கணக்குப் பார்க்க
மாலை அது வேறொன்றாகுதே
போர்க்காலப் பஞ்சமல்ல

பதுக்கும் பாவிகளின்
போக்கிரித்தனம்
மக்கள் சுமக்கும் சுமை
என்று தணியுமோ?
அடுப்பெரியுமோ?
பூனைத்துஞ்சுமோ
போற போக்கு
யாரைச் சுடுமோ?

**சரணா கையூம்,**
**பதுளை.**

# மாறவில்லை

காலத்தின் பிடியது அவளை
சிலுவையில் அறைந்ததும்
கட்டியிருந்த தாலியும்
கட்டகன்று போனதும்
வாசமிழந்த வெள்ளாடையே
வாழ்வென்றானது!

அஞ்ஞானவாசம் அமைத்த
அன்றாட வாழ்க்கையில்
பிள்ளைக்காய் மட்டும்
பிரபஞ்ச சுவாசம் கொண்டு
விரல்களால் விலங்கிட்டு
தன்பிள்ளையை கரம்பற்றி
நெடுந்தூரப் பயணத்திற்காய்

நெடுஞ்சாலையோரம் காத்திருக்கவே
சுற்றியிருந்து வரும் விழிப்பார்வை
அவள்மீது ஒட்டிக்கொள்கிறது
ஒவ்வொரு கோணத்திலும்
துகிலுரிய எண்ணிடும்
துச்சாதனப் பார்வைகளும்

வேசமிட்டு நாசம்செய்துடும்
ராவணப் பார்வைகளும்
மறுமணம் கொடுத்திட மனமில்லாது
மாதவிபோல் வைத்திட
விரும்பிடும் கோவலன்களும்
அற்றை நாள் தொட்டு
இற்றை வரை

பட்டங்களும் பதவிகளும்
பண்டிதர்களும் குறைவற்று
பாரினை ஆண்டபோதும்
பார்வைகளும்
பாவையின் நிலையும்
மாறவில்லை

மதுரை எரித்த கண்ணகி போல்
மங்கையவள் மாறிட வேண்டும்
காமவிழிகள் கொண்ட
ஆடவர்களுக்கு எதிராக...

**ஏரூர் றமீஸ்,**
**ஏறாவூர்.**

# மரணம்...

வாழ்க்கை என்ற போக்கு வரத்தில்
சடுதியாய் பிடிக்கும்
தடுப்பானாய் மரணம்...

பழுத்து மஞ்சளித்து விழும் சிலசமயம்
அறுந்து தெறிக்கும்
ஓர் ஆரத்தின் மணியைப் போல
சிதறும் உயிர் இந்த உறவுகள் வைத்தியம்
எல்லாம் கைவிடும்...

ஒரு காக்கையின் கூட்டை
கொழுக்கையால் குத்தி விட்டதுபோல சுத்தி
சுத்தி அழும் சொந்தங்கள் ப்ரேதத்தை சுற்றி
முகம் மட்டும் தெரிய
ஒரு வெள்ளைப் புடவை...

அரண் சீமெந்தில் மின்விசிறியின்றி
நுளம்புக் கடியில் படுக்க கத்தியவன்
ஆறடிக் குழியின் புழுப் பூச்சியில்
சுற்றி சுகம்கொடுத்த மனிதர்களின்
ஞாபகங்களில் விலகி
எப்படி உறங்க போகிறான்...

பாவத்தின் எதிரொலிப்பில் தொழ
நின்றாலும் பொய் வாழ்வின் மாயை
ஒரு தேய்பிறையாகவெனினும்
நலிந்ததில்லை...

"அடுத்தவர் குறையில் பசியாறும் வரட்டு
இதயம் செல்வத்தில்

எல்லாம் நிரந்தரம் என நினைத்து
இலவு காத்த கிளியாக
மரணத்தின் போது மட்டும்....

தர்மம் புண்ணியம்
பற்றி வாய் புலம்புவது
இந்த உலகின் பல்லவியாக
மாறிவிட்டது....

**- ஏ.எச்.எம்.ஜிஹார் -**



# மோகம்

மோகத்தின் முழு நிலவே காமத்தின்
பார்வையிலே காலம் மறந்து நின்றேன்
நேற்று வரை நிம்மதியாய்
உறங்கி இருந்தேன்

பார்வையிலே சுட்டெரிக்கும் பாடம்
இங்கு கற்றினையோ
கிழப்பருவமதை கிளர்ந்தெழவைத்தே
வீட்டு மனை ஆளிடம் வேதனையை
கூட்டிச் சென்றாய்

தேகத்தின் மகிமையெல்லாம்
திகட்டிருந்த வேளையிலே போதை
மயக்கத்தினை
புன்னகையால் ஏற்றி விட்டாய்
இளசுகளின் எண்ணம் எல்லாம்
ஏங்கி தவிக்க வைத்தாய்

எப்பவுமே வேண்டாம் என்ற
எண்ணமெல்லாம் சிதறடித்தாய்
வீட்டுக்கழத்தி மகள்
சிண்டை பிடித்து இழுத்து
சிறுக்கி மகள் யார் என்றால்

கண்ணனம் சிவக்க மட்டும்
கை பிடித்து முத்தமிட்டேன்
கன்னிதனை பார்த்த முதல்
கண்ணு உறக்கம் இல்லை என்பேன்
பேசும் பொருளாகி பேதையள்
நின்றனையே

வாசம் தரும் பொருள் எல்லாம்
மேனியெங்கும் யார் படைத்தார்
ஜோதி மிகுந்த சுடர் மயமாய் தோன்றி
காதலர் உள்ளம் எல்லாம் கலங்காமல்
இருப்பதற்கு மாயப்பொருளை
மறந்து விடு என்றோதி நின்றேன்.

**-கலைச்சுடர்.வே.இராமர்-**

## தூறல்கள்



# அண்ணா மீதான காமராஜரின் அன்பு

உடல்நலம் குன்றியிருந்த முதல்வர் அண்ணாவைப் பார்க்க, பெருந்தலைவர் காமராஜர் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். உடல் மெலிந்து, கண்கள் ஒளி இழந்து, உணவை விழுங்கக்கூட முடியாமல் கிள்ளிக்கிள்ளி எடுத்து வாயில் போட்டு மிகுந்த சிரமத்துடன் விழுங்க முடியாமல் திணறினார் அண்ணா. இதைப் பார்த்த காமராஜருக்கு மனம் பொறுக்கவில்லை.

"அவரு உடம்புக்கு என்னென்னே இன்னமும் கண்டுபிடிக்கலியா? ரொம்ப லட்சணமாயிருக்கு. நீங்கள்ளாம் நெறைய படிச்சது எதுக்கய்யா? உங்கள்ளே யாரு முக்கியம்கிறது பெரிசில்லை. இவரு யாரு தெரியுமில்லே. முதல்-அமைச்சர். இவருதான் இப்ப முக்கியம். டாக்டர்கள் அவங்க அவங்களுக்குண்டான பொறுப்பை எடுத்துகிட்டு டீம் ஒர்க் பண்ணுங்க. கவனமாய் பாருங்கண்ணுதானே சொல்றேன்.

கவர்மென்ட் பண்ற மாதிரி பேப்பர்ங்களே மேலேயும் கீழேயும் அனுப்பிகிட்டு இருக்காதீங்க. எதை செய்தா இவருக்கு நல்லதோ அதை உடனே செய்யுங்க. எது வேணுமோ அதைக் கேட்டு வாங்குங்க. தயங்காதீங்க... பயப்படாதீங்க.. என்று உரக்கக் கட்டடமே அதிர தன் கோபத்தையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தினார்.

இதன் பின்னரே அண்ணா அடையாறு புற்று நோய் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அதற்கென உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. அமெரிக்க நிபுணர்களின் சிகிச்சையும் பெறப்பட்டது.

# தமிழன் தர்பார்



இது எங்க ஏரியா

# நம்பிக்கை



மாவீரன் அலெக்ஸாண்டர் உலகத்தை வென்று வரப் புறப்பட்டபோது தம் சொத்துகளை எல்லாம் நண்பர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். அப்போது ஒருவர், "எல்லாவற்றையும் இப்படிக் கொடுத்துவிட்டீர்களே! உங்களுக்கு என்னதான் மிஞ்சப் போகிறது?" என்று கேட்டார். "நம்பிக்கை" என்றார் அலெக்ஸாண்டர்.

# டிரைவருக்கு விழா எடுத்த கலைவாணர்



கலைவாணர் ஏழை, பணக்காரன், ஜாதின்னு எந்த வேறுபாடும் பாராத மனிதநேய மாண்பாளராக விளங்கினார்.

சென்னை பாண்டி பஜாரில் பெரிய ஹோட்டலொன்று இருந்தது. அதில் சாப்பிடுவதற்கு கலைவாணர் சீட்டு வாங்கி வைத்துக்கொண்டு தனது வீட்டுக்கு வருகின்ற பிச்சைக்காரர்கள், குறவர்கள் என்று எல்லோருக்கும் கொடுத்து அந்த ஹோட்டலுக்கு அவர்களைச் சாப்பிட அனுப்புவார்.

அந்த ஹோட்டல் முதலாளி, "என்னங்க! இப்படி எல்லோரையும் அனுப்பறீங்க"ன்னு கேட்டு முகம் சுளிப்பார். அதற்குக் கலைவாணர், "ஆமாம், அதுக்குத்தானே நீ ஹோட்டல் வச்சுருக்கே" என்று பட்டென்று பதிலளித்தாராம்.

கலைவாணரது டிரைவர் 25 வருஷம் தொடர்ந்து விபத்தில்லாமல் கார் ஓட்டியதற்காக சென்னை வாணி மஹாலில் ஒரு விழா எடுத்தார். அப்போது டிரைவருக்கு 25 பவுனும் பண முடிப்பும் கொடுத்தார் கலைவாணர். தன்னிடம் கைகட்டி வேலைபார்க்கும் டிரைவருக்குப் பாராட்டு விழா நடத்தியது கலைவாணர் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது .

# தோழர் லெபா ராடிக்



இரண்டாம் உலகப் போரின்போது நாஜிகளுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்ற வீரம் நிறைந்த இளம் பெண் தோழர் லெபா ராடிக்.

17 வயதே நிறைந்த இளம் பெண்ணான அவரை 1943ஆம் ஆண்டு பெப். 8ஆம் திகதி நாஜிப் படையினர் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

தூக்கிலிடுவதற்கு முன்பாக நாஜிப்படை அதிகாரி ஒருவர், தோழர் லெபா ராடிக்-க்கு ஒரு சலுகையை அறிவித்தார். அவரது சக போராளிகளைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தால், அவருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை தவிர்ப்பதாக உயிர் ஆசையைக் கூறி பேரம் பேசினார்.

உலகெங்குமுள்ள அனைத்து கம்யூனிஸ்ட்களையும் போலவே வீரத்துடன் அந்த உயிர்ச்சலுகையை மறுத்தார் தோழர் லெபா ராடிக். எக்காரணம் கொண்டும் தன் சக தோழர்களை காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று உறுதியுடன் மறுத்ததோடு, அவர் கூறிய வாசகம் உலகக் கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தும் ஒன்றாகும்.

"எனது மரணத்துக்கு நீதி கேட்டு எங்கள் தோழர்கள் வருவார்கள். அப்போது அவர்களே தங்கள் பெயர்களை உங்களுக்குத் தெரிவிப்பார்கள்."

மரணத்தைக் கண்டு அச்சம் கொள்ளாமல், பதறாமல் வீரத்துடன் அதை எதிர் கொண்ட தோழர் லெபாவின் வீரம், கம்யூனிஸ்ட்களின் பொதுவான குணாம்சம்.

அத்தகைய வீரத்தை வெளிப்படுத்தி அவர் வீர மரணம் எய்தினார்.

# கட்டணத் தள்ளுபடி



நரேந்திரர், கல்லூரியில் படித்த காலம். ஜெனரல் மிஷனரி கல்லூரி ஏழை மாணவர்களுக்குத் பரீட்சைக் கட்டணத்தையும் கல்விக் கட்டணத்தையும் தள்ளுபடி செய்வது வழக்கம். அதற்கு, மாணவனின் ஏழ்மை நிலை நிரூபிக்கப்பட வேண்டும். நரேந்திரரின் நண்பன் ஹரிதாஸ் சட்டோபாத்தியாயர் ஏழை. அவனால் கல்விக் கட்டணத்தைச் செலுத்த இயலவில்லை. கல்லூரி தலைமை எழுத்தரிடம் பேசி ஹரிதாஸின் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்வதாகக் கூறினார் நரேந்திரர். அப்போது ராஜ்குமார் என்பவர் தலைமை எழுத்தராகப் பணியாற்றினார். ஒருநாள் அவரது அலுவலகத்துக்கு நரேந்திரர் சென்று, ஹரிதாஸுக்காகப் பரிந்து பேசினார். ஆனால், ராஜ்குமார் அதனை ஏற்றுக்கொள்ளாமல் "இந்த அதிகப் பிரசங்கத்தனமான உனது பரிந்துரை தேவையற்றது. நீ உன் வேலையை மட்டும் பார்த்துக்கொள். அவன் கல்லூரி கட்டணப் பாக்கியை செலுத்தினால் மட்டுமே பரீட்சைக்கு அனுமதிப்பேன்" என்று நரேந்திரர் மீது சீறினார்.

ஹரிதாஸ் மிகவும் வருத்தமடைந்தார். நரேந்திரர் அவரைத் தேற்றி "மனச்சோர்வுக்கு இடம் அளிக்காதே, எப்படியாவது நான் இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கிறேன். தைரியமாக இரு" என்று கூறினார்.

அன்று கல்லூரி முடிந்ததும் நரேந்திரர் வீட்டுக்குச் செல்லாமல் ஊரின் ஒதுக்குப் புறத்திலிருந்த ஓர் இடத்துக்குச் சென்றார். அபின் முதலிய போதைப்பொருட்கள் புழங்கும் இடம் அது. வழக்கமாக ராஜ்குமார் அந்த இடத்துக்குச் செல்வார். அன்று நன்றாக இருட்டிய பிறகு யாரும் அறியாமல் அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தார் ராஜ்குமார்.

திடீரென்று ராஜ்குமாரின் முன்னால் நரேந்திரர் சென்று நின்றார். அந்த நேரத்தில் அந்த இடத்தில் அவரைப் பார்த்த ராஜ்குமாருக்குத் திகைப்பு "நரேந்திரா, என்ன விஷயம்?" என்று கேட்டார்.

நரேந்திரர் ஹரிதாஸின் விஷயத்தைக் கூறினார். கட்டணத்தைத் தள்ளுபடி செய்யாவிட்டால், அவர் பழக்கத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்தி விடுவதாகப் பயமுறுத்தினார்.

பயந்து போன ராஜ்குமார், ''என்னப்பா நரேந்திரா, நீ சொல்லி நான் கேட்காமல் இருப்பேனா?" என்று கேட்டு, கட்டணத்தைத் தள்ளுபடி செய்வதற்கு ஒப்புக்கொண்டார். வெற்றியுடன் திரும்பிய நரேந்திரர் நண்பர்களிடம் நடந்ததைக் கூறினார், அனைவரும் களித்து மகிழ்ந்தனர்.



# நம்ம தோட்டம் 03

## “சோடிக்கிறதுல நம்ம ஆளுக வேடிக்கை காட்டுவாங்க”

அருணா

பொங்கலோட சேர்த்தே எத்தனை விசேஷம்?

மார்கழி மாசம் பூராவும் காலையில வெள்ளனாவே எந்திரிச்சி பஜனை ஊர்வலந்தான். பஜனை ஊர்வலத்தை நிறைவு செய்ற நாளாவும் பொங்கல் நாள் அமைஞ்சிருது,

வழமைபோலவே கோயில்ல இருந்து வெள்ளனாவே பஜனை புறப்பட்டுரும். ஊர் தொங்கல்ல இருந்து ஊர்வலம் தொடங்கிச்சினா, சுத்தி வர்ரதுக்கு பகல் பன்னண்டு மணி சரி ஆகிடும்.

சில லயங்கள்ல பொங்க பூசை நடக்கிறப்பவே பஜனையும் வந்திரும்.

மஞ்சள் தூரு, பொல்பொலா, மாவிலை கட்டியிருந்த பானையில, பானையும் சேர்த்து கருகியிருக்கும். அந்த பானையிலுள்ள பொங்கல பஜனை பொடியங்களுக்கும் கொடுப்பாங்க.

பொங்கல் பானைக்கு கட்டுற மஞ்சள், பொல்பொலா, மாவிலை எல்லாமே நம்ம வீட்டுத் தோட்டங்கள்ளேயே இருக்கும்.

பொதுவா கடைகள்ல மரக்கறி வாங்கிறதே இல்லையே! எல்லாம் வீட்டுத் தோட்டத்திலதானே. அட நம்ம என்னைக்காவது வாழைப்பழத்த கடையில் வாங்கி இருக்கோமா?

இப்பையெல்லாம் என்னமா வெலை சொல்றானுங்க. நம்ம பெருநாளு விசேஷம் வந்திட்டா வாழைப்பழத்துக்கு ஒரு வெலைதான் ஏறுது.

தமிழங்க திருவெம்பாவை வழிப்பாட்லதான் ஈடுபாடுவாங்க. அந்த காலத்திலயே தமிழர்களை சிதைக்கிற உத்தியோட ராமர் வழிபாடு நம்ம மக்களோட கலந்திருச்சி.

நம்ம தனித்துவத்தை செதைக்கிற உத்திதான், இருந்தாலும் நம்மாளுகள ஒன்னு திரட்ற வழியா இந்த வழிபாட்டு முறை நம்மல்ல சேந்திருச்சி.

இந்த வழிபாட்டு முறை ஊடா பாட்டு பாடுற திறமை, பாட்டு எழுதிற திறமை, மெட்டமைக்கிற திறமை, இசைக் கருவிகளை இயக்கிற திறமை எல்லாம் வளந்திச்சி.

பஜனை குழுன்றது கம்பத்தை பிரதானமா சுமந்திக்கிட்டு பஜனை மாஸ்ட்டரோட தலைமையில ஊர்வலம் போற விசயம்.

பொங்கல் அன்னைக்கு சப்பாரத்தில் இராமர் சிலைக்கு பதிலா கிருஸ்ணர் சிலைய வச்சி தூக்கிட்டு வருவாங்க. சிலைக்கும் பூசை நடக்கும்.

பொதுவா தோட்டங்கள்ள ராமர் பஜனை இருந்தாலும் கிருஸ்ணர் செலைதான் இருக்கும். அம்மன் கேயில்கள்ள இராமர கும்பிடுறதுக்கு ஒரு பகுதி இருக்கும்.

நம்ம ஆளுகளுக்கு இராமாயணத்தை கதையா சொல்லி அந்த இராமாயணத்தோடயே இரண்டற கலக்க வைச்சிட்டாங்க.

சில தோட்டங்கள்ள இராமருக்குனு அம்மன் கோயில் பக்கத்திலயே கோயில் கட்டியிருப்பாங்க. இந்த வழிபாட்ட ஒரு குடும்பம் சார்ந்தவங்க தொடர்ச்சியா செய்வாங்க.

ஒரு சில இடங்கள்ள சப்பாரம் கட்டி இராமர், சீதை, லெட்சுமணன், அனுமன் எல்லாம் சேர்ந்திருக்கிற படத்தை வைச்சி தூக்கிட்டு வருவாங்க.

இப்புடி தூக்கிட்டு வர்ர சப்பாரம் இருக்கு இல்லையா. எப்புடி அழகா சோடிச்சிருப்பாங்க தெரியுமா?

அதை சோடிக்கிறதுக்கினே நம்ம தோட்டங்கள்ள ஆளுக இருப்பாங்க.

டிசு, வார்னீஸ் தாள், பொம்மை, ஈக்கில், பலூன், சீலை இதுகள வைச்சே சப்பாரத்தை சோடிப்பாங்க.

டிசுப் பேப்பரெல்லாம் எப்புடி உறுதியா இருக்கும் தெரியுமா? வெசாக்கூடு கட்டுனா அடுத்த வெசாக் வரையிலும் ஒட்டுற டிசு பேப்பரெல்லாம் கலர் மாறாம அப்பிடியே இருக்கும்.

இப்ப என்னடானா அந்த கூடுகள பொசனுக்கு போடுறதுனா புதுசா டிசு தாள் ஒட்டணும். அவ்வளவு தரம் கொறைஞ்சி போச்சி.

டிசு பேப்பர் மட்டுமா? எல்லாமே தரங் கெட்டுத்தானே போச்சி.

நம்ம ஆளுக டிசுவ வைச்சே என்னா வேலமானம் போடுவாங்க. அவங்க டெகரேசன் தெரமையே அப்ப்பா சொல்ல முடியாது.

நம்ம காடுகள்ல உள்ள இயற்கை பொருட்கள வைச்சே சிறப்பா அலங்காரம் செய்வாங்க.

இதை பத்தி யோசிச்சாலே நம்மாலுகவுட்டு திறமை வெளிப்படும். என்னாவொரு அழகியல் உணர்வோட ஈடுபடுவாங்க

இன்னைக்கு டெகரேசன் அப்புடினாலே சிறப்பான தொழில் முயற்சியா வளர்ந்துக்கிட்டு வருது. இப்படித்தான் மேடை அமைக்கிறது பந்தல் போடுறது எல்லாத்திலயும் நம்ம ஆளுக எவ்வளவு கெட்டிக்காரவுங்க.

அட பஜன கோஸ்டி கோயிலுக்கிட்ட வந்திரிச்சா?

இப்ப பொம்பலப்புள்ளைங்க எல்லா சேர்ந்து குடத்தில தண்ணி எடுத்திட்டு வந்து சுத்தி, சுத்தி ஊத்துவாங்க.

அப்பறம் கோயிலுக்குள்ள சிலைய எடுத்து வைச்சிட்டு கம்பத்தையும் வைச்சிருவாங்க. ரொம்ப பயபக்தியா இருக்கும்.

இந்த நேரத்தில் சிலருக்கு அம்மன் சாமி வந்திரும். ஏன்னா மாரியம்மனுக்கு அண்ணன் மொறதான இராமர், அப்புடினு ஒரு வர மொர நம்மாலுககிட்ட நம்பிக்கையா இருக்கு.

இராமர் ஊர்வலம் போயிட்டு வந்த ரெண்டொரு மாசத்திலயே அம்மன் வெளிவீதி வர்ற திருவிழாவுக்கும் தயார் பண்ணுவாங்க.

சில தோட்டங்கள்ள இராமருக்கும் அம்மனுக்கு ஒன்னாவே திருவிழா நடந்த வழக்கமும் இருந்திச்சி.

இதுல அனுமன் வேஷம் போடுறவங்களும் இருப்பாங்க. இது ஊர்வலத்தை மகிழ்விக்க போடுற வழக்கமா இருந்திச்சி.

இப்பையெல்லாம் அனுமன் வேஷம் போட்டுட்டா என்னமா அருள் வருது.

கிட்டத்தில் ஒரு தோட்டத்தில் பாத்தோம் அனுமன் வேஷம் போட்டவரு கூரையில ஏறி வந்து ஒருத்தர அடிக்கிறாரு. விசாரிச்சா அவருட்டு சொந்த பகையினு விளங்கிச்சி. இப்பிடியும் இருக்கு.

இப்டிதான் நாவலப்பிட்டி பக்கம் யூரியா பேக்க வைச்சி குரங்கு வேஷம் போட்டவரு நெருப்பு புடிச்சி செத்தே போயிட்டாரு.

ரொம்ப தோட்டங்கள்ள இராமர், சீதை, லெட்சுமணன் வேஷங்களும் சேர்த்தே போடுறாங்க. இது நம்மாளுககிட்ட இருந்த ஒப்பனை தெரமைக்கு எடுத்துக்காட்டா இருக்கும்.

கோயிலுக்கு வந்தவுடன் டம்ளர்ல கஞ்சி கொடுப்பாங்க, ரொம்ப நல்லா இருக்கும்.

நம்ம தோட்டங்கள்ல படி அரிசின்னு சேக்கிறது வழம. பஜனை குழுவுல கட்டாயம் சேர்ப்பாங்க.

அதுமட்டுமல்ல இராமருக்கு பட்டாபிஷேக பூசை நடந்ததுகப்புறம் ஆக்கின அன்னதானத்தை படைச்சிட்டு விரதம் இருந்தவங்க விரதத்த விட்டுதுக்கப்புறம் அன்னதானம் போடுவாங்க.

சேத்த படி அரிசிலதான் இது ரெண்டும் நடக்கும்.

படி அரிசி சேக்கிறதுக்கு ஓர் அர்த்தம் இருக்கும். ஊருள்ள எல்லா ஆளுகளும் இருப்பாங்க. எல்லா வீட்டு அரிசியையும் போட்டு ஒன்னா சேந்து ஆக்கி சாப்பிடுறது நம்மக்கிட்ட வேறுபாடு இல்லன்னு காட்றதா இருக்கும்.

இப்படி வேறுபாடு இருந்தாலும் பொது விசயத்தில நம்மாளுக ரொம்ப ஒத்துமையா இருப்பாங்க. சாதிய தூக்கி புடிக்கிற பழக்கங்களும் இருந்திச்சிதான்.


நம்ம ஆளுகளும் இந்த விசயத்தில் லேசுபட்டவங்க இல்ல. வேற வேறயா கோயில் வைச்சிருந்தாங்னாலே பாத்துக்குங்களே!

இப்பயெல்லாம் டவுனு பக்க உள்ள சாதி சங்க பெனரெல்லாம் தோட்டங்களுக்கு வர ஆரம்பிச்சிரிச்சி.

அப்புடி இப்புடின்னு ஒன்னு ரெண்டு இருந்தாலும், நம்மாளுக ஒத்துமையாதான் இருந்தாங்க.

**தோட்டத்தில் வலம் வருவோம்**

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 32

கண்ணுக்கு எதிரே தவறு நடக்கும். சிலர் தட்டிக் கேட்பார்கள், சிலர் நமக்கேன் தேவையில்லாத பிரச்சினை என அமைதியாக இருப்பர். இன்னும் சிலர் தவறு எனத் தெரிந்தும் தட்டிக் கேட்டால் நமக்கு ஏதும் பிரச்சினை வந்துவிடுமோ என்ற பயத்திலும் சம்பந்தமில்லாமல் நம்மை மாட்டிவிட்டால் நாம் நீதிமன்றம் செல்ல வேண்டி வந்து விடுமே என்றும் அமைதியாக இருந்து விடுகின்றனர். ஆனால், என்னைப் பொறுத்தவரை தவறு எனக் கண்டால் எதிர்த்திருக்கிறேன், என்னுடைய நிலைப்பாட்டை தெரிவித்தே வந்துள்ளேன். சில இடங்களில் அமைதியாக மனதால் வெறுத்து ஒதுங்கியும் உள்ளேன்.

முகநூலில் நீதி தொடர்பான விழிப்புணர்வு வீடியோ பார்க்கக் கிடைத்தது. அந்தக் காட்சியில் பல்கலைக்கழக மாணவர் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. விரிவுரையாளர் அவரை வெளியே போகச்சொன்னதும் அவர் வெளியேறிவிடுவார். இங்கு முதலில் எதிர்த்திருக்க வேண்டியது அந்நபரே. ஆனால், மரியாதை நிமித்தம் அவரே அமைதியாக வெளியேறிவிட்டார். அதனால் அங்கிருப்பவர்களும் அமைதியாக இருந்துவிட்டனர். விரிவுரையாளர் ஜஸ்டிஸ் என்றால் என்ன என்று வினவி பின் ஏன் நீங்கள் யாரும் இங்கு பேசவில்லை என்று கலந்துரையாடுவதாக அந்தக் காணொளி அமைந்திருக்கும். மடியில் கணமில்லையென்றால் எதிர்த்து நிற்கலாம். எங்கள் கடமையை சரியாகச் செய்தால், நாங்கள் நேர்மையானவர்கள் என்றால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. சிலவேளை மற்றவர்கள் நமக்காக பேச வாய்ப்பிருக்கும். ஆனால், நம்முடைய நடத்தைகள் நமக்காக பேசாமல் தடுத்துவிடும். நம்மை நாம் சுய மதிப்பீடு செய்யவேண்டியது கட்டாயமாகும்.

அண்மையில் ஒருவர் செய்யாத குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டிருந்தார். எனக்கு புதிய சூழல் என்பதாலும் குறித்த நபரை நன்கறியாததாலும் சம்பவம் தொடர்பில் அங்கிருந்தோருடன் கேள்வி எழுப்பியபோது அவர்கள் தெரிவித்த கருத்தானது குறித்த நபர் இதற்கு முன்பு பலரையும் முகநூலில் திட்டி எழுதியுள்ளார். தான் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியை மற்றவர்கள் விமர்சித்தால் உண்டு இல்லை எனச் செய்திடுவார் தன்னுடைய பணியை ஒழுங்காக முன்னெடுக்காதவர். எனவே, இப்படியான தண்டனை கிடைக்கத்தானே வேண்டும் என்பதாகவும் கடவுளின் நாட்டமாக இருக்கக்கூடும் என்றும் சொல்லப்பட்டது. ஆம் கடவுளின் நாட்டம் தடுப்புக்காவலிலிருந்து தன்னை சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பேற்படுத்திக் கொடுத்திருக்கின்றார் என வைத்துக்கொள்ளலாம்.

ஆசிரியர் மாணவியைப் பார்த்து ‘‘குண்டம்மா’’ என்றிருக்கிறார். மாணவி பதிலுக்கு ‘‘ஓமக்குச்சி’’ என்று சொல்லியுள்ளார். எப்பொழுதும் சமூகத்தில் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்று கதைக்கப்படுகின்றார்களே தவிர, ஆண்களுக்கு அதே வன்முறை வருகின்றபோது அது பெரிதாக அலட்டிக்கொள்ளப்படுவதில்லை.

இங்கு மாணவியை ஆசிரியர் குண்டம்மா என்று சொன்னது பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் சீண்டல் போன்ற சொற்களால் அலங்கரிக்கப்பட்டு அரசியல் வாகனமேற்றி திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட படுகுழியில் வீழ்த்தினார்கள்.

முன்பெல்லாம் பெண்பிள்ளையை வன்புணர்வு செய்துவிட்டார்கள் என்று வெளியே தெரிந்துவிட்டால் மானம் போய்விடும் எனப் பயந்து போர்த்தி மூடிய காலம் போய் அரசியல் காரணங்களால் தனக்கு தானே மண்ணை வாரிப்போடும் காலமாயிற்று.

என்னைப் பொறுத்தவரை குறித்த சம்பவம் தொடர்பில் ஆய்வு செய்கின்றபோது தற்பொழுது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கு சிறிதும் தொடர்பற்றவர் ஆசிரியர். ஆனால் ஏற்கனவே அரசியல் எதிர்ப்பிருந்ததனால் மிக இலகுவாக முடிச்சுப்போட்டனர். அவன் யாராக வேண்டுமென்றாலும் இருந்திட்டு போகட்டும். ஒருவரின் துன்பத்தில் வினை விதைத்தவன் வினையறுப்பான் என்று சொல்லப்படும் பழமொழியை விட

‘‘ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி’’ என்ற குறளே மிகப்பொருத்தமாகும்.

**தொடர்வாள்...**

# தமிழக கல்வியை முடக்க மத்திய அரசு திட்டம்





ரமணி

தமிழக மாணவர்களின் கல்வி சார்ந்த பணிகளுக்காக ஒருங்கிணைந்த பாடசாலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட, 2,401 கோடி ரூபாவை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதாக அமைச்சர் மகேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தமிழகத்தின் பேசுபொருளாக மாறியுள்ளது. கட்சி சார்பற்று அனைத்து அரசியல் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஒருங்கிணைந்த பாடசாலைக் கல்வித் திட்டம், 2018இலிருந்து செயற்படுகிறது. இதற்காக மத்திய அரசு 60, மாநில அரசு 40 சதவீத நிதியைப் பகிர்வு முறைமையில் விடுவிக்கின்றன. கடந்த 2023 - 2024ஆம் ஆண்டுக்கு தமிழகத்துக்கு 3,533 கோடி ரூபாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில், இரண்டு தவணைகளை மட்டுமே மத்திய அரசு விடுவித்தது. மூன்றாம் தவணையை, பி.எம்.ஸ்ரீ திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால்தான் ஒதுக்க முடியும் என்று மிரட்டுகிறது.

அத்திட்டத்தில், மும்மொழிக் கொள்கை உள்ளது. அதை ஏற்றால், தமிழகத்தின் இருமொழிக் கொள்கைக்கு எதிராகுமென பாடசாலைக் கல்வித்துறைச் செயலர் தலைமையிலான குழு அறிக்கை அளித்துள்ளது. இதுகுறித்து, மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டபோது, பி.எம்.ஸ்ரீ திட்டம் இல்லாத நிலையில், நிதியை நிறுத்தக் கூடாதென கடிதம் எழுதிய நிலையில், கடந்தாண்டுக்கான நிதியையும் இந்தாண்டுக்கான 2,152 கோடி ரூபா நிதியையும் மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

மத்திய அரசின் புள்ளிவிபரப்படி, தமிழகம், கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் 17,632.41 கோடி ரூபாவை மத்திய அரசு விடுவித்துள்ளது.

அதனால், தமிழக மாணவர்களின் கல்வி சார்ந்த திட்டங்களை நிறைவேற்ற கடந்தாண்டுக்கு ஒதுக்கப்பட்ட 249 கோடி ரூபா மற்றும் இந்தாண்டுக்கான 2,152 கோடி ரூபா என மொத்தம் 2,401 கோடி ரூபாவை மத்திய அரசு நிலுவையாக வைத்துள்ளது.

தமிழ்நாட்டில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி சமக்ரசிக்ஷா என்ற திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இந்தியாவில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி மத்திய பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்திருந்தார். அதில் தமிழகத்துக்கான எந்தவொரு திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. இது தமிழக மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழகத்துக்கு நிதி கிடையாதென மிரட்டும் விதமாக பேசினால் தமிழர்களின் தனிக்குணத்தை டெல்லி பார்க்கவேண்டி இருக்குமென மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலினும் ஏனைய அரசியல் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் தமிழகத்துக்கு நிதி ஒதுக்க முடியும். இல்லையென்றால் தமிழகத்துக்கு நிதி கிடையாதென மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியிருந்தார். இதனால் பலரும் தர்மேந்திர பிரதானின் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து வந்தனர். அதேவேளை, மும்மொழிக் கொள்கையை ஏற்க முடியாது. தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை மட்டுமே பின்பற்றப்படும் எனவும் திட்டவட்டமாக தமிழ்நாடு அரசு கூறி வருகிறது.

நவோதயா வித்யாலயா போன்ற மத்திய அரசு பாடசாலைகள் மும்மொழிக் கொள்கையைப் பின்பற்றுவதால்தான் தமிழ்நாட்டில் அவை நிறுவப்படவில்லை. இரு மொழிக் கொள்கை மற்றும் சமூக நீதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட முற்போக்குக் கொள்கைகளின் காரணமாக கடந்த அரை நூற்றாண்டில் தமிழ்நாடு மகத்தான முன்னேற்றமடைந்துள்ளதாக கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய அரசு நிதி தரவில்லையென்றாலும் தமிழக அரசு எந்தத் திட்டத்தையும் நிறுத்தாது. தமிழக அரசின் நிதியைப் பயன்படுத்தி தொடர்ந்து திட்டங்கள் செயற்படுத்தப்படுமென அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அடுத்த கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறும். பொது பரீட்சையைக் கண்டு மாணவர்கள் அஞ்சக் கூடாது. தைரியமாக பரீட்சையை அணுக வேண்டும். பொதுப் பரீட்சை நெருங்கும் நிலையில் மாணவர்களின் பதற்றத்தைக் குறைக்க ஆலோசனை வழங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினோம்.

கடந்த ஓராண்டில் பாடசாலை மாணவிகளுக்குப் பாலியல் தொந்தரவு சம்பந்தமாக 84 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. 90 நாட்கள் கையெழுத்து இயக்கம் நடத்தும் பா.ஜ.கவினர் உறுதியாக வருத்தப்படுவார்கள். தமிழக மக்கள் இருமொழிக் கொள்கையையே விரும்புவார்கள் என்றும் அமைச்சர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் நிதி வழங்கப்படுமென மத்திய அமைச்சர் கூறியதைக் கண்டித்து தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, சி.பி.ஐ. முத்தரசன், சி.பி.எம். பெ.சண்முகம், விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், காதர் மொய்தீன், ஜவாஹிருல்லா, வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, வி.சி.க. தலைவர் திருமாவளவன், பா.ம.க. தலைவர் அன்புமணி, தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா, த.வெ.க. தலைவர் விஜய், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் கடுமையான தொனியில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, முன்னாள் ஆளுநர் தமிழிசை ஆகிய இருவரும் கட்சிக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஹிந்தித் திணிப்பை எதிர்க்கும் தமிழக மக்கள், மத்திய அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.

தமிழன் சிறுகதை

# வாழ நினைத்தால்



க. இந்திரதேவி

“பால் இருக்குதா தம்பி?”

“இல்லக்கா, ‘ரீ’, ‘நெஸ்கெபே’தான் இருக்கு” என்றான் ‘கென்ரீன்’ பையன்.

காலையிலிருந்து வெறும் வயிற்றோடு இருந்ததில் அதிகமாகப் பசிக்கத் தொடங்கியது. ‘‘வெறும் வயிற்றோடு ‘ரீ’ குடித்தால் ‘கேஸ்ரிக்’ அதிகரிக்கும். சூடாகக் கொஞ்சம் பால் குடித்தால் நன்றாக இருக்கும்’’ எனத் தோன்றியது.

“கொஞ்சம் தள்ளிப் போனால் ஆயுர்வேத ஹொஸ்பிட்டல் இருக்கு. அதுக்குள்ள மில்க் பார் இருக்கு. அங்க பாருங்க” என்றான் அவன்.

ஆயுர்வேத பல்கலைக்கழகத்திலிருந்து வெளியே வந்து பிரதான பாதையைக் கடந்து ‘மெக்டொனால்ட்’சுக்குப் பக்கத்திலிருந்த சிறிய பாதையில் மெதுவாக நடக்கத் தொடங்கினேன். வாகனப் போக்குவரத்துகளற்ற பாதை. களைத்துப்போன உடம்புக்கு மெதுவாக நடக்க வாய்ப்பாக இருந்தது.

சமீப காலமாக இந்தப் பல்லைக்கழகத்தில் யோகா பயிற்சிகளை ஆரம்பித்திருந்தேன். கொரோனா நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, விலையுயர்வுகள், எரிபொருள் நெருக்கடி என எல்லாமே மனிதனை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றன. எப்படி இந்தச் சிக்கலிலிருந்து மீள்வது? யாரைப் பார்த்தாலும் எப்போதும் எதையோ இழந்தவர்களைப் போலத்தான் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.

- - - -

“இந்த அரசாங்க சம்பளத்தில வாழ முடியாது மிஸ்” என்றார் எங்கள் தலைமை கிளார்க்.

“அப்ப என்னதான் செய்யிறது?”

“நாங்க முழுநேரமும் இஞ்ச ஒபிசுக்குள்ள சிக்கிப் போயிருக்கிறம். வேற எந்த வேலையும் செய்ய நேரமில்லை.”

“வேற என்ன வேலை செய்யப்போறீங்க?”

“அரசாங்க ஊழியர்கள் வேற எந்த வேலையும் செய்யக் கூடாது என்டல்லோ சேர்கியுலர் சொல்லுது.”

“அந்த சேர்கியுலராலதானே எல்லா வினையும். இந்த நாடு இப்ப குட்டிச்சுவரா போயிட்டுது. அரசாங்கச் சம்பளம் இப்ப எங்களுக்கே காணாமப் போயிட்டுது.”

“இப்பதான் அரசாங்கம் முழிச்சிருக்கு. டொலர் இல்லாமப் போகேக்கத்தான் இவையளுக்கு கொஞ்சம் அறிவு தெளிஞ்சிருக்கு. இப்ப ஆரும் என்னவுஞ் செய்யலாம். வேணுமென்டா லீவப் போட்டுட்டு என்டாலும் வேலை செய்யுங்கோ, தொழில் முயற்சியில ஈடுபடுங்கோ, விவசாயம் செய்யுங்கோ, வெளிநாடு போங்கோ என்டு கால்ல விழாத குறையா கவர்மெண்டு சொல்லுது.”

“அப்பிடியென்டா ஏதாவது ‘பார்ட் டைம்’ செய்ய வேண்டியதுதானே” என்றேன்.

“’திடீரென்டு ‘பார்ட் டைம்’ என்டா என்ன செய்யுறது? எல்லா வேலையும் தெரிஞ்ச மாதிரித்தான் இருக்கு. கோழி வளர்க்க இடமில்லை இந்தக் கொழும்பில. தோட்டம்? ம்ஹூம். தையல்? பின்னல்? ரியுஷன்? பூக்கன்று வளக்கிறது? சாப்பாட்டு பிசினஸ்? எங்க தொடங்கிறது. எங்க முடிக்கிறது. எல்லாத் திட்டங்களும் சுவரில மோதின பந்து மாதிரி மனசில தோன்றுன வேகத்தில மறஞ்சு போய்டுது” அலுத்துக்கொண்டார் அவர்.

‘‘எல்லாரும் சொல்ற ஐடியா நமக்கு சரிப்பட்டு வராது. நமக்கு எது முடியும் என்று யோசிக்க வேண்டும். முதலாவது மனக்குழப்பத்திலிருந்து மீள வேண்டும்’’ மனதுக்குள் நினைத்துக் கொண்டேன் நான். ‘‘எந்த பிஸினசையும் தொடங்க முதலில் இந்த அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும்’’ என்ற முயற்சியின் விளைவே இந்த யோகா வகுப்பு.

விடுமுறை தினங்கள் என்பதால் வாகன நெரிசல் அதிகம் இல்லை. உச்சி வெயில் மண்டையைப் பிளந்துகொண்டிருந்தது. ஆயுர்வேத வைத்தியசாலைக்குள் மெதுவாக நுழைந்தேன். பெரிதாக ஆட்கள் யாருமில்லை. காவலாளி உடனே பாய்ந்து வந்து ‘‘எங்கே போகிறாய்?’’ எனக் கேட்பான் என்று நினைத்தேன். அவன் ஒன்றும் கேட்கவில்லை. அவனவனுக்கு அவனவன் பிரச்சினை பெரிது போலும். ஏதோ யோசனையில் அவன் ஆழ்ந்திருந்தான்.

காவலாளியின் அறையை ஒட்டியதாக இருந்த ‘மில்க் பார்’ கண்ணில்பட்டது. அருகில் சென்று பார்த்தேன். மூடிக் கிடந்தது. ‘மூடியுள்ளது’ என்று எந்த அறிவித்தலையும் காணவில்லை. ‘இனியென்ன செய்வது, வீட்டிற்கே போய்விடுவோம்’ என்று வெளியே வந்தேன். இருபது, முப்பது அடிகள் நடந்தால் பஸ் தரிப்பிடம். பத்தரமுல்லை போகின்ற நூற்றிஎழுபத்திநாலு பஸ் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அருகில் ஓர் இளநீர் விற்கிற தட்டு. குலை குலையாக இளநீர். பார்க்க புதிதாக இருந்தது. வயதான ஒரு மனிதன் விற்றுக்கொண்டிருந்தான். முதலாளியும் அவன்தான். தொழிலாளியும் அவன்தான். ‘ஓர் இளநீரையாவது வாங்கிக் குடிப்போம்’ எண்ணியவாறு அருகில் சென்றேன்.

கொங்கிறீட் பாதையில் பட்டுத் தெறிக்கும் வெயில் எப்படியிருக்கும் என்று அவனைப் பார்த்தாலே புரியும். கறுத்த உருவம். வைரம் பாய்ந்த உடம்பு. முறுக்கி விடப்பட்ட மீசை. புருவங்களிலும் காதுகளிலும் வளர்ந்து கிடந்தன நரைத்த முடிகள். அவன் கண்களை உயர்த்திப் பார்க்கும்போது அச்சொட்டான வளைவுகள் நெற்றியில். வயதின் முதுமை முகத்தில் தெரிந்தது.

“இளநீ எவ்வளவு ஐயா?”

“நூத்திமுப்பது ரூபா அம்மா” உடனே பதில் வந்தது.

‘நூத்திமுப்பது ரூபாவா?’ இந்தக் காலத்துல இருபது ரூபா நோட்டுகள்தான் அதிகமாக இருக்கிறது. பத்து ரூபா குற்றிகளெல்லாம் உண்டியல்களுக்குள் தஞ்சம் புகுந்துவிட்டதால் அவற்றைக் காண்பதும் அரிது. நூற்றுநாற்பது ரூபாயைக் கொடுத்தால் பத்து ரூபா மீதம் தருவானா? பத்து ரூபா இல்லையென்று மீதிப் பணத்தையும் வைத்துக்கொள்ளும் ‘டெக்னிக்’தான் இந்த நூத்திமுப்பது ரூபாவா?’ மனதில் எண்ணியவாறு “ஓர் இளநீ தாங்க ஐயா” என்று நூற்றுநாற்பது ரூபாவுக்கு நோட்டுகளை நீட்டினேன்.

பணத்தை வாங்கிக் கல்லாவில் போட்டவன் பக்கத்திலிருந்த கவ்வாத்து கத்தியை எடுத்து வெகு இலாவகமாக இளநீரை வெட்டத் தொடங்கினான். ‘இப்போ எப்படி எனக்குக் குடிக்கத் தருவான்? ‘ஸ்ட்ரோ’ போட்டு குடுப்பானோ? இந்த பிளாஸ்ரிக் பாவனையைக் குறைக்கவே முடியாதுபோல.’ மனதுக்குள் குமைந்து கொண்டேன்.

“இந்தாங்க அம்மா” என்று வெட்டிய இளநீரை அப்படியே தந்தான். ‘ஸ்ரோவுமில்லை. ஒன்றுமில்லை. யார் பார்த்தால் என்ன. இப்படியே குடிப்போம்.’

அண்ணாந்து இளநீரில் வாய் வைத்து மெதுமெதுவாகக் குடிக்க ஆரம்பித்தேன். அமிர்தமாகத் தொண்டைக்குள் இறங்கிய இளநீர் மெதுமெதுவாக உடலைக் குளிர்வித்துக் கொண்டு சென்றது. என்ன ஒரு சுவை! இயல்பிலேயே அமைந்த இனிப்பு! எந்தக் கலப்படமுமில்லை! இதனால்தான் இலங்கை உற்பத்திகளுக்கு வெளிநாடுகளில் இவ்வளவு கிராக்கியா.

பசியும் தாகமும் அடங்கும்போதுதான் மனிதன் மற்றைய சுவாரஸ்யங்களைத் தேடத் தொடங்குவான். மெதுவாக அவனிடம் பேச்சைத் தொடங்கினேன்.

“எங்க ஐயா இருக்கிறீங்க?”

“இங்கதாம்மா. ராஜகிரியவில. மகனோட இருக்கேன்”

‘அப்ப மனைவி? இல்லை போலும். ஐயோ பாவம்!’ மனதிற்குள் நினைத்துக்கொண்டேன். மனிதர்களை எடைபோடுவதில் இந்த மனதை வெல்ல யாரால் முடியும்.

“நம்ம வூட்டுக்காரம்மா எறந்து போய் பத்து வருசமாயிருச்சி.” கேட்காமலேயே கூறினான் அவன்.

“அப்ப ஒங்க மகன் ஒங்கள நல்லா பாத்துக்கிறாரா?” சட்டென்று துளிர்த்த சந்தேகம் கேள்வியாக வந்துவிட்டது.

“ஆமாம்மா,அருமையான புள்ள. நாலு பேரப்புள்ளைங்க இருக்காங்க. அவங்களும் என்ன நல்லா பாத்துக்குறாங்க.”

ஆச்சரியமாக இருந்தது. பெற்றோரை தனிமையில் வாடவைக்கின்ற இந்தக் காலத்தில் இப்படி ஒரு கதையைக் கேட்டால் ஆச்சரியப்படாமல் என்ன செய்ய முடியும்.

“உங்க சொந்த ஊரு?’’

பொதுவாக கொழும்பில் வசிப்போர் யாரைக் கண்டாலும் முதலில் கேட்கும் கேள்வி இதுதான். ஊரை வைத்துத்தான் அடுத்தடுத்த கேள்விகள் வரும். ஊர்க்காரர்கள் என்றால் இயல்பாகவே ஓர் அந்நியோன்யம் வந்துவிடும்.

“நான் நுவரேலியாவுல ஐபொரஸ்ட். கொழும்புக்கு வந்து நாப்பது வருசமாச்சு. ஸ்டார்ட்ல பிட்டகொட்டுவையிலதான் இளநீ யாவாரம் ஆரம்பிச்சேன். அப்பிடியே டெவலப் ஆகினிச்சி. ஒரு நாளைக்கு ஆயிரம் இளநீ விக்கிறளவுக்கு வளந்தேன். கொஞ்ச கொஞ்சமா காச சேத்து இங்க ராஜகிரியவுல ஒரு பலகை வீட்ட வாங்கினேனுங்க. இப்ப மகேன் அத பெரிசா கட்டியிருக்காரு.”

கிராமத்தின் வெள்ளையும் உண்மையும் நேர்மையும் அவன் வார்த்தைகளில் எதிரொலித்தன. மற்றவர்கள் என்ன சொல்வார்கள், என்ன நினைப்பார்கள், நமது சொந்தக் கதையைக் கூறலாமா, எந்தத் தயக்கமும் அவனிடம் காணப்படவில்லை. விடாமல் தொடர்ந்துகொண்டிருந்தான்.

“வேல செஞ்சது போதும் வீட்டோட இருன்னுன்னுதான் புள்ளைங்க சொல்றாங்க. நல்லா வேலை செஞ்சு பழகின ஒடம்பு. சும்மா இருந்தா சோம்பலாகிராது?” யாருக்கோ செய்தி சொல்வதுபோல் இருந்தது அந்தக் கேள்வி.

“கொரோனாவுல கொஞ்ச நாள் வீட்டில இருந்தேன். ஆனா முடியல. அதான் இந்த தட்டுல சின்னதா ஒரு யாவாரம் ஸ்டார்ட் பண்ணிட்டேன். நமக்கு தெரிஞ்ச தொழில். நல்லா போய்க்கிட்டிருக்கு” அவனது பேச்சில் நான் குறுக்கிடவில்லை.

“இங்க பாரு தாயி. இந்த ஒடம்பு வண்டி மாதிரி. ஓடுற வரைக்கும் நல்லா வேல செய்யும். சும்மா போட்டுட்டோம்னா கறல் புடிச்சிரும்.”

ஒரு மிகச் சிறந்த புத்தகத்தை வாசித்து முடித்ததைப்போல் இருந்தது அந்த சில நிமிடங்கள். ‘இவனுக்கு இருக்கிற அறிவு எப்படி நமக்கு இல்லாமல் போய்விட்டது. இதுதான் அவர்களுக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசமா? நாம் எல்லாவற்றையும் அசை போட்டு, ஆராய்ந்து, வாய்ப்புப் பார்த்து, கௌரவம் பார்த்து, காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோமா?’

‘அந்த அனுமதி கிடைக்குமா? வியாபாரம் பதிவு பண்ணனுமா? பிரதேச செயலாளர் ஒத்துக்கொள்வாரா? நகர சபை இடம் தருமா? பற்பல கேள்விகளை நமக்குள்ளே கேட்டு கேட்ட அதே கணத்தில் அப்படியே நமக்குள் எல்லாவற்றையும் புதைத்து விடுகின்றோமா?’ என் சிந்தனைகளைக் கலைத்தான் அவன்.

“அம்மா பஸ் வருது”

நான் போகவேண்டிய பஸ் வந்து நின்றது. அவசர அவசரமாக இளநீரைக் குடித்துவிட்டு பஸ்ஸில் ஏறப் போனேன்.

யாரோ பின்னாலிருந்து என் தோளில் தட்டுவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தேன்.

“இந்தாங்கம்மா மிச்ச காசு பத்து ரூவா” நீட்டியவாறு நின்றிருந்தார் அந்த மனிதர் தனராஜ்.

..... யாவும் கற்பனையல்ல...

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

### பிரிவுகள்

இந்த மலையக தேசத்திலே
நூறாண்டு காலமாக
நொந்து நூலாகி
வெந்து போனவங்க...
இன்னமும் வேகுறாங்க.......

சேட்டும் கட்டிக்கிட்டு
பாப்பாத்தி மூச்சியிப்ப
இறுதி பயணத்துக்கு..
இழுத்துக்கிட்டு நிக்கிறது......

பொறந்த மணணவிட்டு
பொழப்பு தேடி வந்த இடம்
வாய்கரிசி போடுமின்னு
அவ கனவிலயும்
கடுகளவும் நினைச்சிருக்க
வாய்ப்பு இல்ல...

இந்த சிலோனு மண்ணக்கூட
மவராசி தாய்மண்ணா
கருதினாலே
அதுக்காக தானே இங்கு
ரத்த துளியை எல்லாம்
வேர்வையாய் மாத்திவிட்டு
மண்ணுக்கு உரம்போட்டா...

அவ நம்பிய மண்ணுகூட
அவளுக்கு துரோகம்
ஒன்னும் செய்யவில்ல
பல நேரம் அட்டை
கடிகளுக்கும்
குச்சி கீறலுக்கும் மருந்தாகி
போனதெல்லாம் இந்த
மண்ணோடு மகிமை
தானே...

இருந்தாலும் என்ன செய்ய
இந்த பாழாப்போன
தேசத்திலே
மனுச பய என்று சொல்லி
வந்து சேர்ந்த அரக்கர்
எல்லாம்
இங்க வந்து சேர்ந்த
மனிதர்களை உசுராவே
மதிக்கவில்லை

பஞ்சம் பிழைக்கலாம்னு
தாய் மண்ணை விட்டு வர
வந்து சேர்ந்து மண்ணு கூட
இப்போ மயானம் ஆயிடுச்சு
தோல் சுருங்கி பார்வ மங்கி
மல்லாக்க பாயினிலே
படுத்திருக்கா பாப்பாத்தி.....

ஒட்டுப்போட்ட கதவினிலே
ஓட்டையிலே தெரிகிறான்
ஒளி கொடுக்கும் சூரியன்
வீட்டு முன்னே வளர்ந்து
நிற்கும் கருப்பன் தேலை
மரம் ஒன்னில்
அமர்ந்திருக்கும்

கருங்காக்கை கூட்டம்
ஒன்று சூரியனை
பார்த்து பார்த்து துக்கமாக
கத்தி விட கோட்டானும்
குருவிகளும் சேர்ந்தே தான்
கூவின...

உலகத்துக்கே ஒளி
கொடுக்கும் ஆண்டவனே

ஆதவனே இந்த அப்பாவி
மக்களது வாழ்க்கை
பயணமத பார்க்காமல்
போனதென்ன...

எத்தனை துயரம் அப்போ
உச்சாணிக்கொம்பில் நீங்க
ஏரி அமர்ந்துக்கிட்டு
கீழ நடப்பதெல்லாம்
கண்ணார பார்ப்பவர் தான்
எல்லாத்தையும்
பார்த்துக்கிட்டு
குருடாக கிடப்பதேனோ...

மண்ண நம்பி வாழுறாங்க
மழையை நம்பி நடக்கிறாங்க
ஒளி கொடுக்கும் சூரியனாம்
உங்கள நம்பி தானே
இத்தனை காலம் இங்கே
சீவனும் செஞ்சாங்க...

நீங்க கூட மறந்ததென்ன
ஒலி கொடுக்கும் சூரியனே
என்று சொல்லுகிற
சாயலிலே கோட்டான்
குருவி எல்லாம் ஒருமிக்க
கத்தியது

இந்த அப்பாவி மக்களது
துயர பயணங்களை
தொலைதூரம் நின்று சரி
இந்த பறவை கூட்டம்
எல்லாம்
பல நேரம் கண்டிருக்கும்
துக்கம் மாட்டாமல்
அது கூட சூரியனைப்
பார்த்து பார்த்து
நிந்தனை செய்கிறது

பாப்பாத்தி உசுரு அது
மெல்ல மெல்ல போக போக
பறவைகளின் கூச்சல் சத்தம்
காதுகளை கிழிக்கிறது

பறவைகளின் பேச்சதிலே
துக்கம் கொண்ட சூரியனோ
தன்னோட துக்கத்தினை
யாருக்கும் காட்டாமல்
தன்னோட மறைச்சிக்கிற

மேகங்கள் பின்னாடி
ஓடிப்போய் ஒழிஞ்சிக்கிறான்
கலங்கும் ஆதவனின்
கண்ணீர் தண்ணியது
மூடிய மேகங்களின்

உடம்பையும் தாண்டி விட்டு
பூமியை சேர்கிறது
சேரும் அந்த கண்ணீரோ
இந்த குளிரும் தேசத்திலே
அத்தனை சூடாக
அன்னைக்கி
இருக்கிறது...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

தமிழன் தொடர்கதை

# புலரும் பொழுது



கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

அத்தியாயம் 11

“இப்பத்தான் நித்திரை கொள்றார்”

“குழப்பாதீங்க”

அவர் நல்லாயிருக்கார்”

“வாங்க நம்ம இஞ்சையிருந்து கதைப்பம்” என்று சமாளித்துத் திசை திருப்பி அனுப்பிவிடுவார்!

கள்ளமில்லா உள்ளம் கொண்ட நாதனை மென்மையான வார்த்தைகளால் ஒத்தனம் போடுவார் மாலா.

“எனக்கு ஒரு வருத்தமும் இல்ல மாலா”

நான் நல்லாத்தான் இருக்கிறன் “

“நீங்க என் பக்கத்துல இருந்தாலே நோயெல்லாம் பறந்துடும்!”

“நீங்க பென்ஷனுக்குப் போன பொறவு வீட்டில எவ்வளவு சந்தோசம் தெரியுமா மாலா”

“என்னங்க அப்புடிச் சொல்றீங்க “

“ஸ்கூல்ல எவ்வளவு புள்ளையள் அழுதாங்க தெரியுமா”

“எனக்கென்றா சரியான கவலையாப் போச்சு”

“நானுந்தான் அழுதிட்டேனுங்க”

என்று சொல்லிச் சிரித்தாள் மாலா.

இருவரும் சிரித்து மகிழ்ந்தனர். அந்த நேரத்தில்,

“ஐயா நாதன் ஐயா”

என்ற குரல் கேட்டது.

“ஓமோம் வாறேன் “

என்றவாறு வெளியே எட்டிப் பார்த்தார் மாலா.

வாசலிலே சுந்தரம் நின்றார்.

“வாங்க ஐயா வாங்க” என்று அழைத்தார். நாதனின் வயலில் வேலை செய்யும் சுந்தரத்தார் உரப்பை ஒன்றிலே,மரக்கறிகள் கொண்டு வந்திருந்தார்.

“அம்மா இதிலே முடக்கொத்தான் கீரையும் இருக்கு!”

“ஐயாவுக்கு இதச் சேர்த்து மிளகுரசம் வெச்சிக் குடுங்கம்மா”

“இது ஐயாவுக்கு ரொம்ப நல்லதும்மா”

என்றார் சுந்தரம்.

“ஐயா சோத்துக்கு அரிசி தரட்டுமா”

என்றார் மாலா.

“சரிம்மா தாங்களேன் “

என்றார்

மாலா அவருக்கு அரிசியும் செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்பினார்.

நாதனின் வயல் வேலைகளைச் செய்யவும் மாடு கன்றுகளைப் பராமரித்துப் பார்த்துக் கொள்ளவும் ஞாயமான வேலைக்காரன் சுந்தரம் கிடைத்திருந்தார். அவருக்கு மாலா பார்த்தும் பாராமலும் கூலி கொடுத்தனுப்புவார்.

சுந்தரத்தார் கடைகளுக்குப் போய் மாலாவின் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பார். அந்தக் குடும்பத்தில் அவரின் உதவி நல்ல ஆறுதலைக் கொடுத்தது.

சுந்தரத்தின் இரு பெண் மக்களும் கல்வியில் ஆர்வம் காட்டினர்.

அவர்களுக்கு மாலாவும் இயன்ற உதவிகளைச் செய்வார்.

நாட்கள் நகர்ந்தன. நாதன் சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரின் பிள்ளைகள் மூவரும் அங்கு வந்திருந்தனர். மாலா கணவரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். நாதன் சிரித்துவிட்டு

“என்ன மாலா அப்புடிப் பாக்கிறீங்க”

“எனக்கு ஒன்டும் ஆகாது”

“எல்லாம் நல்லபடியா நடக்கும் “

“நீங்க கவலைப் படாதீங்க மாலா”

என்றார்.

கணவனின் இந்த வார்த்தைகள் அவளுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. இந்த வார்த்தைகளை கேட்டதும் மூன்று பிள்ளைகளின் முகங்களிலும் மலர்ச்சி தோன்றியது.

“ஒப்பரேஷனை நெனச்சிப் பயந்து அப்பா மனம் ஓடைஞ்சிடுவாரோ”

என எண்ணிக் கொண்டு மௌனமாக இருந்து கலங்கிய பிள்ளைகளுக்கு அந்த வார்த்தைகள் ஆறுதலளித்தன.

“உண்மைதானப்பா” “ஆண்டவன்ட ஒதவியால எல்லாம் நல்லபடியாக நடக்கும்”

“நம்ம கவலப்படத் தேவல்ல”

“ தைரியமா இருப்போம்”

“இப்ப தான் இந்த மாதிரியான ஒப்ரேஷன் எல்லாம் மிச்சம் சிம்பிளாச் செய்து முடிக்கிறாங்கப்பா”

“நம்ம பயப்படத் தேவையில்ல” என்றாள் மலர்!

அந்த வேளையில் அங்கு வந்த தாதியொருவர் உடற் பரிசோதனைகளுக்கு அப்பாவை அழைத்துச் சென்றார்.

அங்கு மயான அமைதி நிலவியது. அப்பாவுடன் கூடவே மலரும் சென்றாள்.

“குடும்பத்துக்காகப் பல தியாகங்கள் செய்து வாழ்ந்தவர் என் கணவர்”

, “ கடுஞ்சினம் கொண்டு,ஒரு போதும் என்னைக் காயப் படுத்தவில்லையே!” “அவர் என்மீது வெச்ச பாசத்துக்கும் அளவில்லையே!”

என்று நெஞ்சுருகினார்! கண்ணீர் மழை பொழிந்தாள்!.

“இவர் இன்னும் நீண்ட காலம் சுகமாக வாழ வேண்டும்” என்று இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டாள்.

அமுதன் அம்மாவின் கையைப் பிடித்து,

“அழாதீங்கமா “

“எல்லாம் நல்லபடியா நடக்குமம்மா” என்றான்.

ஆனந்தனின் முகத்திலே கவலை படர்ந்திருந்தது.

“ எனக்கு ரம்யாவைக் கலியாணம் செஞ்சி வெச்சிப் பாக்க, அப்பா ஆசைப்பட்டாரு”

“ அது நடக்கலயே!” என்மேலே அப்பா “வருத்தப்பட்டிருப்பாரோ” என்று கலங்கினான்.

சில மணிநேரம் கடந்தது. அப்பாவின் உடற்பரிசோதனைகள் முடிந்து, அப்பா ஒப்பரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டார்.

(தொடரும்)

# உலக குத்துச்சண்டை அமைப்பில் ஆறு நாடுகள் இணைவு

கொசோவோ, சிரியா, ஹங்கேரி, மலாவி, எஸ்டோனியா, சுவிட்ஸர்லாந்து ஆகிய ஆறு நாடுகள் தேர்வு செயல்முறையை வெற்றிகரமாக முடித்து உலக குத்துச்சண்டை அமைப்பில் இணைந்துள்ளன. இந்த அமைப்பில் மொத்த எண்ணிக்கை 78 ஆக உயர்ந்துள்ளது.

ஒலிம்பிக் அங்கீகாரத்துக்காக உலக குத்துச்சண்டை அமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. புதிய நாடுகள் இணைந்தமையும் 75 உறுப்பினர்களைக் கடந்ததும் சர்வதேச ஒலிம்பிக் குழுவால் சாத்தியமான அங்கீகாரத்துக்கான அடிப்படை நிபந்தனையாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு முக்கிய தேவையாகும். ஒலிம்பிக் சேர்க்கை விதிமுறைகள் நான்கு கண்டங்களில் குறைந்தது 75 நாடுகளில் ஒரு விளையாட்டு அதிகாரபூர்வமாகப் பயிற்சி செய்யப்பட வேண்டுமென்று கூறுகின்றன.




உலக குத்துச்சண்டை அதன் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிப் பாதையில் தொடர்கிறது. இது ஏப்ரல் 2023இல் உருவாக்கப்பட்டதிலிருந்து அதன் நோக்கமாக இருந்துவருகிறது. அதன் இலட்சியம் எப்போதும் தன்னை வலுப்படுத்திக்கொள்வதாகவே இருந்து வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் அது ஆழமாக வேரூன்றிய குத்துச்சண்டை மரபுகளைக்கொண்ட பகுதிகளை விளையாட்டு ஒரு புதிய மற்றும் நம்பிக்கைக்குரிய துறையாக ஒருங்கிணைக்கிறது.

ஒலிம்பிக் திட்டத்தில் குத்துச்சண்டை இடம் குறித்த இறுதி முடிவு வருவதற்கு ஒரு மாதமே உள்ள நிலையில், போட்டிகள் அதிகமாக உள்ளன. வரவிருக்கும் ஒலிம்பிக் தலைவர் தேர்தல் விளையாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒரு தீர்க்கமான காரணியாக இருக்கும். இது ஒலிம்பிக் அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் உலக குத்துச்சண்டை, சர்வதேச குத்துச்சண்டை சங்கம் ஆகியவற்றுக்கு மிகவும் சவாலானதாகும்.

# சீனாவில் ஆண்கள் கைப்பந்து இறுதிப் போட்டி




2025ஆம் ஆண்டுக்கான கைப்பந்து நாடுகள் லீக் (VNL) ஆண்கள் இறுதிப் போட்டியை கிழக்கு சீனாவின் நிங்போ நடத்தும் என்று சர்வதேச கைப்பந்து கூட்டமைப்பு செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

ஜூலை 30 முதல் ஓகஸ்ட் 03 வரை நிங்போ பெய்லுன் விளையாட்டு மற்றும் கலை மையம் இதனை நடத்தும், அதேவேளை, பெண்கள் இறுதிப் போட்டிகள் ஜூலை 23 முதல் 27 வரை போலந்தின் லாட்ஸில் நடைபெறும்.

2024ஆம் ஆண்டில் ஹொங்கொங், மக்காவ் ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் பெண்கள் VNL சுற்றுகளை நடத்தின. இது 268 மில்லியன் பார்வையாளர்களை ஈர்த்தது. சீனா மத்திய தொலைக்காட்சியில் 168 மணிநேர நேரடி ஒளிபரப்பைப் பெற்றது என்று FIVB தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான சீனாவில் இரண்டாவது அதிக விளையாட்டு ஒளிபரப்பு VNL என்றும் அதிகபட்ச பார்வையாளர் எண்ணிக்கை 23.6 மில்லியனை எட்டியதாகவும் FIVB தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் உலகளவில் VNL வருகை 13 சதவீத வளர்ச்சியைக் கண்டதாக FIVB அறிவித்துள்ளது.

# ஜூட் பெல்லிங்ஹாமுக்குத் தடை

ஓசாசுனாவுக்கு எதிரான 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையிலிருந்தபோது முதல் பாதியில் சிவப்பு அட்டை காட்டப்பட்டதற்காக ரியல் மாட்ரிட் இங்கிலாந்து அணியின் மிட்பீல்டர் ஜூட் பெல்லிங்ஹாமுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது

பெல்லிங்ஹாம் திட்டியதாகக் கூறி நடுவர் ஜோஸ் லூயிஸ் முனுவேரா மோன்டெரோ வெளியேற்றினார். இருப்பினும் ரியல் மாட்ரிட் முனுவேராவின் குற்றச்சாட்டை மறுத்தது. நடுவர் தன்னைத் திட்டியதால் தானும் திட்டியதாக ஜூட் பெல்லிங்ஹாம் தெரிவித்தார்.

பெல்லிங்ஹாமை அனுப்பியதிலிருந்து முனுவேரா அவமானங்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிவருகிறார். அவருக்கு எதிராகவும் அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும் கூட அச்சுறுத்தல்கள் உட்பட நூற்றுக்கணக்கான அவமானகரமான செய்திகள் வந்ததால், அவர் தனது சமூக வலைப்பின்னல் தளங்களை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.




பெல்லிங்ஹாமின் தடையை எதிர்த்து ரியல் மாட்ரிட் மேன்முறையீடு செய்ய வாய்ப்புள்ளது. இதனால் அவர் சனிக்கிழமை ஜிரோனாவுக்கு எதிரான சொந்த மைதான ஆட்டத்தையும் அடுத்த வார இறுதியில் பெட்டிஸுக்கு எதிரான போட்டியையும் இழக்க நேரிடும்.

# உகண்டாவின் செபதிந்திரா U-13 சம்பியனானார்



உகண்டாவின் 10 வயதான ஜோசப் செபதிந்திரா உலக U-13 ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

செவ்வாய்க்கிழமை மாலை போர்த்துகலில் நடந்த இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனை யான அலெக்ஸாண்டர் மலோவை 3-1 (4-11, 11-9, 14-12, 11-9) என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியனானார்.

காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் கை லான் சோவை 3-2 என்ற கணக்கில் தோற்கடித்தார். அரையிறுதியில் இங்கிலாந்தைச் சேர்ந்த மற்றொரு வீரரான ஜெய்டன் சென்னை 3-0 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

# பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் கில் சதம்; இந்தியா வெற்றி

(ரமணி)

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பங்களாதேஷை எதிர்த்து ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தனது சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியை இந்தியா வெற்றியுடன் ஆரம்பித்தது.




ஐசிசி 2025 சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இந்தியாவின் போட்டிகள் டுபாயில் நடைபெறுகின்றன. அந்தத் தொடரில் இந்தியா தங்களது முதல் போட்டியில் பங்களாதேஷை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த பங்களாதேஷ் 228 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா 43.6 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்கள் எடுத்தது.

சௌமியா சர்க்கார் 0, கெப்டன் நஜ்முல் சாண்டோ 0, தன்சித் ஹசன் 25, மெஹதி ஹசன் 5, ரஹீம் 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அவுட்டாகி ஏமாற்றத்தைக் கொடுத்தனர். 5 விக்கெட்டுகளை இழந்து 35 ஓட்டங்கள் எடுத்துத் தடுமாறியபோது மிடில் ஓடரில் தௌஹீத் ஹ்ரிடாய் – ஜாகிர் அலி ஜோடி சேர்ந்து நங்கூரமாக விளையாடினார்கள்.

6ஆவது விக்கெட்டுக்கு 154 ஓட்டங்கள் அடித்து பங்களாதேஷைக் காப்பாற்றினார்கள். ஜாகிர் அலி அரை சதத்தை அடித்து 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சேர்ந்து விளையாடிய தௌஹீத் தனது முதல் சதத்தை அடித்து [100] ஆட்டமிழந்தார். 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த பங்களாதேஷ் 226 ஓட்டங்கள் எடுத்தது. ஷமி 5, ஹர்ஷிட் ராணா 3, அக்சர் படேல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

69 ஓட்டங்கள் இணைப் பாட் டமாக சேர்த்து நல்ல தொடக்கத்தைக் கொடுத்த கெப்டன் ரோஹித் சர்மா 41 (36) ஓட்டங்கள் எட்டுத்து ஆட்டமிழந்தார். விராட் கோஹ்லி 22, ஸ்ரேயாஸ் ஐயர் 15, அக்சர் படேல் 8 ஆகியோர் ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

மறுபுறம் நிதானத்தைக் காட்டிய கில் அரை சதத்தைக் கடந்து இந்தியாவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச்சென்றார். 4 ஓட்டங்களில் இருந்தபோது ராகுல் கொடுத்த கேட்ச்சை பங்களாதேஷ் தவற விட்டது. அதைப் பயன்படுத்திய ராகுல் 41 (47) ஓட்டங்கள் எடுத்து நல்ல ஃபினிஷிங் கொடுத்தார். அவருடன் சேர்ந்து தொடர்ந்து நிதானத்தைக் காட்டிய கில் சதத்தை அடித்து 101 (129) ஓட்டங்கள் அடித்தார். 46.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த இந்தியா 231 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. 51 இன்னிங்ஸ்களில் கில் தனது 8ஆவது சதத்தைப் பதிவுசெய்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டில் வேகமாக 8 சதங்கள் அடித்த இந்திய வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார். இதற்கு முன் ஷிகர் தவான் 57 இன்னிங்ஸில் 8 சதங்கள் அடித்ததே முந்தைய சாதனை. ஆட்டநாயகன் விருது கில்லுக்கு வழங்கப்பட்டது.



இந்திய வீரர் அக்சர் படேல் வீசிய 9ஆவது ஓவரில் தன்சித் ஹசன், முஷ்பிகுர் ரஹீம் ஆகியோர் அடுத்தடுத்த பந்துகளில் வெளியேறினர். அடுத்த பந்தில் ஜாக்கர் அலி பேட்டில் பட்டு பந்து எட்ஜ் ஆகி ஸ்லிப்பில் நின்ற கெப்டன் ரோஹித் வசம் சென்றது. அதை கேட்ச் பிடித்திருந்தால் அக்சர் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தியிருப்பார். அதை ரோஹித் மிஸ் செய்தார். கிட்டத்தட்ட ஆட்டத்தின் திருப்புமுனை என்றும் அதைச் சொல்லலாம்.

5 விக்கெட்டுகளை முதல் 10 ஓவர்களுக்குள் இழந்த நிலையில் கடைசி ஓவர் வரை அந்த அணி விளையாடி அசத்தியது.

கெப்டன் ரோஹித் மட்டுமல்லாது 20ஆவது ஓவரில் ஹ்ரிடோய் கொடுத்த கேட்ச்சை மிட்-ஓவ் திசையில் நின்ற ஹர்திக் பாண்டியா நழுவவிட்டார். அப்போது ஹ்ரிடோய் 23 ஓட்டங்களில் இருந்தார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7